விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 04 வெள்ளிக்கிழமை (20.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 336




# ஜனாதிபதியை சந்தித்து கடும் தொனியில் பேச்சு

## கைதிகள் விவகாரம் குறித்து தமிழ்க் கூட்டமைப்பு தீர்மானம்

(கொழும்பு)

**தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கடுமையான தொனியில் எடுத்துரைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.**

ஜனாதிபதி மைத்திரியின் வெற்றிக்காக பாடுபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கான வெகுமதியாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது.

எனினும் பதவிக்கு வந்து ஒரு வருடமாகும் நிலையிலும் ஜனாதிபதியின் குறித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

எனவே இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தலைமையில் ஜனாதிபதியுடன் எதிர்வரும் நாட்களில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

இதன்போது கடுமையான தொனியில் இந்த விவகாரத்தை ஜனாதிபதியிடம் முன்வைக்கவும் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதற்கு மேலதிகமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் இவ விவகாரம் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தேசித்துள்ளது என கூறப்பட்டது. (எ-11)

## 20 கட்சிகளை இரத்து செய்ய மனு

(கொழும்பு)

இனம் அல்லது மதத்தின் பெயரில் உள்ள அரசியல் கட்சிகளின் பெயர்களில் மாற்றம் செய்யாவிட்டால், அந்த கட்சிகளை ரத்துச் செய்ய தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செயயப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுவை எதிர்வரும் மார்ச மாதம் 15ஆம் திகதி விசாரணை க்கு எடுப்பது என நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இனம் அல்லது மதத்தை அடிப்படையாக கொண்ட 20 கட்சிகள்

24ஆம் பக்கம் பார்க்க....

## வங்கக்கடலில் காற்றழுத்தம் மீண்டும் வெள்ள எச்சரிக்கை!

(கொழும்பு)

தெற்கு வங்கக்கடலில் புதிதாக உருவாகியுள்ள காற்றழுத்தம் காரணமாக, இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் வெள்ள ஆபத்து ஏற்படலாம் என்று காலநிலை தொடரபான இணையத்தளம் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது.

வங்கக் கடலில் இலங்கைக்கு கிழக்கே உருவாகியிருக்கும் இந்த காற்றழுத்தம், தீவிரம் பெற்று,

24ஆம் பக்கம் பார்க்க....

# பட்ஜெட் இன்று

## 10 அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படும்!

(கொழும்பு)

இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என்று அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

நல்லாட்சி அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து நிவாரணங்களும் இந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலமாகவும் தொடர்ந்து

23ஆம் பக்கம் பார்க்க....

## உறுப்பினர் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அகிலதாஸ் நபரொருவரினால் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு சபை உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். வடக்கு மாகாண சபையின் முப்பத்து எட்டாவது அமர்வு நேற்றுக் காலை பத்து மணியளவில் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே குறித்த கண்டனம் வெளியிடப்பட்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.தே.கவை வெல்ல வைப்பதே விமல் வீரவன்ஸவின் இலக்கு!

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ சுதந்திரக் கட்சியை பலவீனப்படுத்தி, ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெறச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவதாக ஜனாதிபதி மைத்திரிபால குற்றம் சாட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களுடனான கலந்துரையா லின் போது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## பொருளாதார புத்துயர்வே பட்ஜெட்டின் முக்கிய நோக்கம்

### நிதியமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் கன்னி வரவு செலவுத் திட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், இலங்கையின் பொருளாதாரத்திற்கு புத்துயிரளிப்

24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் நாளை பதில் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நிலவிய சீரற்ற காலநிலையால் கடந்த திங்கட்கிழமை மூடப்பட்டிருந்த வடமாகாணப் பாடசாலைகள் அனைத்திற்கும் பதில் பாடசாலை நாள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 21ஆம் திகதி நாளை சனிக்கிழமை பதில் பாடசாலை நடத்துமாறு வடமாகாணக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நாவிடம் சாட்சியமளித்தோர் அச்சுறுத்தப்படுகின்றனரா?

### விசாரிக்கப்படும் என்கிறார் மங்கள

(கொழும்பு)

காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா பணிக்குழுவிடம் சாட்சியமளித்தோர், அச் சுறுத்தப்பட்டதான குற்றச்சாட்டுத் தொடர்பாக, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரி

24ஆம் பக்கம் பார்க்க....



## ஐ.நாவின் தகவல்கள் அதிர்ச்சியளிக்கின்றது

### வைகோ தெரிவிப்பு

(சென்னை)

ஈழத் தமிழர் படுகொலைக்குப் புதிய சான்றுகள் இருப்பதாகவும், இவை அதிர்ச்சி அளிப்பதாக உள்ளதாகவும் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கைத் தீவில் காணாமல்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஓர் இலட்சத்து 35 ஆயிரம் பேர் வடக்கில் வெள்ளத்தால் பாதிப்பு

(கொழும்பு)

வடக்கில் வெள்ளத்தினால் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் பேர் பாதிக்கப்படைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் வடமாகாணத்தில் மூவாயிரத்து 597 வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதோடு, 236 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

எனினும் பாதிக்கப்பட்டவர்களில் ஆயிரத்து 500 பேருக்கே புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு பிரதேசத்தில் இடம்பெயர்ந்த ஆயிரம் பேருக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளதோடு, வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு 500 வீடுகளும்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆணைக்குழு முன் நாமல் ஆஜர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ நேற்று பாரிய ஊழல் மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது சுயாதீன தொலைக்காட்சிக்கு 200 மில்லியன் ரூபாய் நட்டம்

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# திருமலையில் வதைமுகாம்? விசாரணை நடத்தப்படும்

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை கடற்படை தளத்தில் இரகசியவதை முகாம்கள் காணப்பட்டன என பலவந்தமாக காணாமற்போகச்செய்யப்படுதல் குறித்த ஜக்கிய நாடுகள் குழுவினர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகள் இடம்பெறும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் மகிசினிகொலனே இது குறித்து தெரிவித்துள்ளதாவது,

ஊடகங்களுக்கு இது குறித்த தகவல்களை வெளியிடுவதற்கு முன்னர் ஜக்கிய நாடுகள் குழுவினர் வெளிவிவகார அமைச்சக அதிகாரிகளுக்கு இது குறித்து தெரிவித்திருந்தனர்.

அவர்கள் கடந்தகாலத்தில் பயன்படுத்தப்பட்ட இரகசிய வதை முகாம்களை தாம் பார்வையிட்டது குறித்து தெரிவித்திருந்தனர். அந்த இரகசியதடுப்பு முகாம்கள் தற்போது பயன்பாட்டில் இல்லை.

மேலும் குறிப்பிட்ட குழுவினரை சந்தித்த காணாமற் போனவர்களின் குடும்பத்தவர்களை சந்தித்தவர்கள் அச்சுறுத்தப்பட்டது குறித்து அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ள தயாராகவுள்ளது என நாங்கள் தெரிவித்தோம்.

இவ்வாறான விடயங்களை மிகவும் அவதானமாக கையாள வேண்டும், இந்த விடயங்கள் காணாமற் போனவர்களின் குடும்பத்தவர்களுடன் தொடர்புபட்ட விடயம், அவர்கள் பாதிக்கப்பட கூடிய நிலையில் உள்ளவர்கள் என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

---

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

**பழைய மாணவர் சங்கம்**

நூற்றியிருபத்தைந்தில் எழுபத்தைந்து 125ஆவது அகவை கொண்டாடும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மூத்த பழைய மாணவர் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்காக 22/10/2015 அன்று 75 ஆவது அகவையை பூர்த்தி செய்த/ மேற்பட்ட பழைய மாணவர்களில் விபரங்களை சேகரிக்கிறோம்.

இந்த விபரங்களை சுயமாகவோ அல்லது அவர்களை தெரிந்த பழைய மாணவர்களோ கீழ்க்காணும் முகவரிக்கு 26-11-2015 க்கு முன்னர் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்
பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
0772009295
email :-jaffnahinduoba@gmail.com

( C-2748 ) செயலாளர்

---

**யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி**

**ஏலவிற்பனை**

பாடசாலையில் காணப்படும் ஒரு தொகுதி பாவனைக்குதவாத பொருட்கள் 03-12-2015 ம் திகதி வியாழன் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்

(2538) அதிபர்

---

**பகிரங்க ஏல விற்பனை**

எமது பாடசாலையில் எதிர்வரும் 04-12-2015 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு பாடசாலை வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம். (2538)

பாடசாலை அபிவிருத்திக் குழு
யா/உயரப்புலம் மெ.மி.வித்தியாலயம்

---

**பணிநிலை வேண்டுகை**

கணனி பக்க வடிவமைப்பாளர் (ஆண்/பெண்)
Graphics Designer

கணனி தட்டெழுத்தாளர் (ஆண்/பெண்)
Computer Typist

புத்தகம் கட்டுனர் (ஆண்/பெண்)
Book Binder

(க-2747)

**முன்னனுபவமுள்ளவர்கள் மட்டும்**

**19ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை**

**நேரில் வரவும்**

**கரிகணன்**

**வடக்கின் அச்சகதாரர்**

இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P : +94 21 222 2717/ 8
+94 21 222 2737

---

**மூன்றாம் ஆண்டு நினைவுகளுடன்**

மண்ணில் 09-09-1953

விண்ணில் 21-11-2012

அமரர்

**சின்னத்தம்பி இந்திராணி**

**(மூத்தக்கா)**



எங்கள் அன்பான அம்மாவே
நீங்கள் மறைந்து மூன்றாண்டுகள்
சென்றாலும் எங்கள் உள்ளத்தில்
இருந்து நீங்கள் மறையவில்லையே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகிறோம்.

(C-2749)

மாவலி லேன், மணடான்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

---

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



**தியாகலிங்கம் துசாந்தன்**

**20-11-2015**

அன்னை மடியில் 1996-04-10

ஆண்டவன் அடியில் 2014-11-30

தரணியில் வந்துதித்த எம் மகனே
பார்க்கும் இடமெல்லாம் பாசமுகம் தெரியுதையா
சிறகொடிந்த பறவைகள் போல்
கலங்குகின்றோம் நாமிங்கு
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் எம்மை விட்டு மாறாதையா

20/11/2015 இன்று வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(2534)

கொல்லவிளாங்குளம் ,
வவுனிக்குளம்.

குடும்பத்தினர்

---

**மரண அறிவித்தல்**



**சங்கரகம்பர் கதிரவேலு**

**(தினகரன் ஊடகவியலாளர்)**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரகம்பர் கதிரவேலு நேற்று (19.11.2015) வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரகம்பர் - இலட்சுமியம்பாள் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - பரிபூரணம் ஆகியோரின் அன்பு மருமகனும், அபிராமசுந்தரியின் அன்புக் கணவரும், மோகனசுந்தரன் (படப்பிடிப்பாளர்), அமரர் தேவபாலசுந்தரன் மற்றும் கௌரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சசிகலா, புனிதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சித்திராங்கன், விஷ்ணுகா, ஆரணன், சிந்தூரி, அட்சயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (20.11.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

அலுக்கை,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

(2539)

தகவல் :
குடும்பத்தினர்
தொ.பே : 0773223323

# தமிழ் பெயர்கள் அகற்றப்படும்

## ராவணாபலய ஆவேசம்

(கொழும்பு)

**யாழ்ப்பாணத்திலுள்ள நாகதீப என்ற பெயரை நைனாதீவு என பெயர் மாற்றம் செய்யப்படும் பட்சத்தில், இலங்கையிலுள்ள அனைத்து தமிழ் ஊர்களின் பெயரகளையும் அகற்றுவோம் என ராவணாபலய அமைப்பு தெரிவித்துள்ளது.**

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதற்கு எதிராக ஜனாதிபதியை சந்திக்கும் வகையில் ராவணாபலய அமைப்பு ஜனாதிபதி செயலகத்திற்கு நேற்று சென்றிருந்தது.

எனினும், ஜனாதிபதியை நேற்று சந்திக்க மறுப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில், எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 2.30 இறகு ஜனாதிபதியை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் ராவணாபலய அமைப்புக்கு வழங்கப்பட்டது.

இதையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ராவணாபலய அமைப்பின் பிரதிநிதிகள் இந்த கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

இலங்கையிலுள்ள அனைத்து தமிழ் பெயர்களையும் மாற்றம் செய்வதற்கு தம்மிடம் ஆட்பலம் உள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் இத்தேகந்த பஞ்ஞார தேரர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## மக்களின் வாழ்க்கைச் சுமையை நல்லாட்சி அரசு அதிகரித்துள்ளது

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் தற்போது அவன்கார்ட் சம்பவத்தை முன்னிலைப்படுத்தி மக்களை ஏமாற்றி வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதாக கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மக்களின் வாழ்க்கை சுமையை அதிகரித்து வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

ஹங்கம எத்பட்டுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் இன்று விச ஆட்சி அரசாங்கமாக மாறியுள்ளது. அவன்கார்ட் சம்பவத்தை அடிப்படையாக கொண்டு அரசாங்கத்தில் உள்ளவர்கள் இரண்டாக பிளவுபட்டு சண்டையிட்டு கொள்கின்றனர்.

பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. ஜனவரி 8 ஆம் திகதிக்கு பின்னர் 100 மீற்றர் வீதியையும் செப்பனிட முடியாத இந்த அரசாங்கம் நாட்டை பின்னோக்கி கொண்டு செல்கிறது.

நாட்டில் தற்போது கொடூரமான குற்றங்களும், கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

பிரிவினைவாதிகள் இழந்த வெற்றியை மீண்டும் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது. அதற்கு தேவையான வழிவகைகளை எதிர்க்கட்சித் தலைவர் மேற்கொண்டு வருகிறார் எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7-10)



வடக்கு மாகாணத்தில் முகாமைத்துவ துறையில் கடமையாற்றும் உயர்மட்ட அதிகாரிகளுக்கான போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் வீதி விபத்துக்களை தடுப்பது தொடர்பாக விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்யைதினம் யாழ்.கிறீன் கிராஸ் ஹோட்டலில் நடைபெற்றது. வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:பொ.சோபிகா)

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குமாறு கோரிக்கை

(கரணவாய்)

இதனால் பயிர்ச்செய்கை குறிப்பாக கரவெட்டி கரணவாய், கிராய், கப்பூதுவல்லைவெளி, கட்டுடை பேன்ற விவசாய நிலங்கள், வயல் நிலங்கள் என்பன அதிகம் பாதிப்படைந்துள்ளன.

## கைதான நபரை வவு.நீதிமன்றில் முற்படுத்தவும்

(காணவாய்)

## மிருக பலியிடுதலை தடைசெய்ய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

ங்கை சைவ மகா சபையின

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குமாறு கோரிக்கை

(கரணவாய்)

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த சில நாட்களாக குடாநாட்டில் பெய்த அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் மக்களை மட்டுமல்லாது விவசாய நிலங்களையும் பெரிதும் பாதித்துள்ளது.

இதனால் பயிர்ச்செய்கைகள் மற்றும் வயல் நிலங்கள் என்பன வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டு பயிர்களும் வயல்களும் அழிவடைந்துள்ளன.

நெற்செய்கையை நம்பிய விவசாயிகள் பெரும் ஏமாற்றத்துடன் காணப்படுகின்றனர். வயல்களில் உள்ள வெள்ள நீர் தற்போது சற்றுக் குறைவடைந்துள்ளது. எனினும் பயிர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

குறிப்பாக கரவெட்டி கரணவாய், கிராய், கப்பூதுவல்லைவெளி, கட்டுடை பேன்ற விவசாய நிலங்கள், வயல் நிலங்கள் என்பன அதிகம் பாதிப்படைந்துள்ளன.

அதிக நட்டத்தை எதிர்நோக்கியுள்ள விவசாயிகள் கமநல சேவை நிலையத்தில் தமது நட்டஈடு குறித்து கோரியுள்ளனர். எனவே இது தொடர்பில் கமநல சேவை நிலையம் உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (இ-5-60)

## கைதான நபரை வவு.நீதிமன்றில் முற்படுத்தவும்

(கரணவாய்)

பணமோசடி குற்றச்சாட்டில் ஈடுபட்டு வந்த வவுனியாவைச் சேர்ந்த நபரொருவரை எதிர்வரும் 23 ஆம் திகதி அன்று வவுனியா நீதிமன்றில் முற்படுத்துமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதவான் மா. கணேசராஜா நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 3 மாத காலத்திற்கு முன்னர் பண மோசடி குற்றச்சாட்டில் ஈடுபட்டு நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட மேற்படி நபர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்ற போது வவுனியா நீதிமன்றில் முற்படுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பித்திருந்தார். (இ-5-60)

## மிருக பலியிடுதலை தடைசெய்ய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நரியிட்டான் பொன்காத்த வைரவர் ஆலயத்தில் நடைபெறவிருந்த மிருக பலியிடுதலை தடை செய்யுமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ். சதீஸ்தரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

இறைச்சி வெட்டுதல் கட்டளைச் சட்டம் மற்றும் மிருக வதை கட்டளைச் சட்டத்தின்படி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகளுக்கு அமைவாக முன்னேற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் மேற்படி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த தீபாவளி தினத்திற்கு மறுதினம் மல்லாகம் நரியிட்டான் பொன்காத்த வைரவர் ஆலயத்தில் மிருக பலியிடல் நடைபெற இருப்பதாகவும் அதை தடை செய்யுமாறும் அகில இலங்கை சைவ மகா சபையினரால் கடந்த 3 ஆம் திகதி தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

குறித்த முறைப்பாட்டையடுத்து கடந்த 4 ஆம் திகதி மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யப்பட்டு மிருக பலியிடுதலுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பின்னர் கடந்த 11 ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இரு தரப்பு வாதங்களை தொடர்ந்து நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்குவதற்காக இந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அதன்படி நேற்று முன்தினம் இவ் வழக்கு தீர்ப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதவான் குறித்த மிருக பலிக்கு தடை உத்தரவு பிறப்பித்து தீர்ப்பளித்தார். (இ-9)

## இந்.மீனவர்களுக்கு விளக்கமறியல்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட ராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 14 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி ஆர். சபேசன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் 3 படகில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்களையும் காங்கேசன்துறை கடற்படையினர் கைது செய்து யாழ் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர்.

இவர்கள் நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ-9)

## கைவிடப்பட்ட 6 சிறுவர்கள் மீட்பு

(கொழும்பு)

மாத்தளை, எல்வள பிரதேசத்தில் அநாதரவாக கைவிடப்பட்ட நிலையிலிருந்த 06 சிறுவர்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளனர்.

பெற்றோர் மற்றும் பாதுகாவலர் இல்லாத நிலையிலேயே குறித்த வீடொன்றில் 04 சிறுமிகள் உள்ளிட்ட ஆறு சிறுவர்கள் அநாதரவாக இருந்துள்ளனர்.

இவர்கள் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளாவர். இவர்களில் சிலரது பெற்றோர் வெளிநாடு சென்றிருந்தனர். சிலரின் பெற்றோர் சிறைச்சாலையில் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சிறுவர்கள் 11, 07, 06 மற்றும் 04 வயதுகளைச் சேர்ந்தவர்களாவர்.

இச்சிறுவர்கள் தொடர்பில் உக்குவளை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வழங்கிய முறைப்பாட்டிற்கமைய பொலிஸ் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவின் அதிகாரிகள் மேற்படி சிறுவர்களை மீட்டு மாத்தளை நீதவான் முன் ஆஜர்செய்தனர்.

நீதவானின் உத்தரவின் பேரில் சிறுவர்கள் மாத்தளை சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் இச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-7-10)

## சு.கவின் 4 உறுப்பினர்களுக்கெதிராக விரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நான்கு உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சுதந்திரக் கட்சிக்கு ஆபத்து ஏற்படும் வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளுடன் இணைந்து சூழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்ததாக குறித்த உறுப்பினர்களுக்கு எதிராக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

களுத்துறை, கம்பஹா, கண்டி ஆகிய மாவட்டங்களின் சார்பில் இம் முறை நாடாளுமன்றிற்கு தெரிவானவர்களுக்கு எதிராகவே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த உறுப்பினர்களுக்கு எதிராக கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க எதிர்வரும் நாட்களில் முறைப்பாடு செய்ய உள்ளார்.

கட்சியின் ஒழுக்கத்தை பேணும் நோக்கில் வேறு கட்சிகளுடன் இணைந்து ஊடக சந்திப்புக்களை நடத்துதல், கூட்டு ஊடக சந்திப்புக்களை நடத்துதல், கூட்டங்களை நடத்துதல் போன்றவற்றுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவினால் இந்த தடை விதிக்கப்பட்டிருந்தது. (இ-7-10)

## சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்த 4263 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

சமகாலத்தில் நாட்டில் பாரிய சவாலாக மாறியுள்ள சிறுநீரக நோயை கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்காக 4 ஆயிரத்து 263 மில்லியன் ரூபா செலவில் தெரிவு செய்யப்பட்ட மாவட்ட வைத்தியசாலைகளில் சிறுநீரக நோய் பிரிவுகளை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனரட்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அந்த வகையில் நாடளாவிய ரீதியில் சிறுநீரக நோயாளர்கள் 26 ஆயிரத்து 470 பேர் இனங் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் அநுராதபுரம், பொலநறுவை, குருநாகல், பதுளை, மாத்தளை, திருகோணமலை, அம்பாறை, மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அதிகளவான சிறுநீரக நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் சிறுநீரக நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் குறித்த மாவட்ட வைத்தியசாலைகளில் சிறுநீரக பிரிவுகளை அமைக்கவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## தலைமைத்துவம் மீதான விமர்சனம்

# சைமண்ஸ், ஹைடன் மீது மைக்கல் கிளார்க் பாய்ச்சல்




தன்னுடைய கப்டன் திறமை குறித்து விமர்சனம் செய்த சைமண்ட்ஸ், ஹைடன் ஆகிய சக வீரர்கள் மீது அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் மைக்கல் கிளார்க் கடும் விமர்சனம் செய்துள்ளார்.

இங்கிலாந்தில் கடந்த யூலை, ஓகஸ்ட் மாதங்களில் சுற்றுப் பயணம் செய்து ஆஷஸ் தொடரில் விளையாடிய முன்னாள் கப்டன் மைக்கில் கிளார்க் தலைமையிலான அவுஸ்திரேலிய டெஸ்ட் அணி, படுதோல்வி அடைந்து தொடரை இழந்தது.

மேலும், ஏப்ரல் 2011 முதல் அவுஸ்திரேலிய அணியின் கப்டனாக இருந்த கிளார்க் வெளிநாட்டில் 9 டெஸ்ட் தொடர்களில் 4-ல் மட்டும் வெற்றி பெற்றார். கடைசியாக விளையாடிய 6 டெஸ்ட்களில் ஒரு முறைகூட அவர் 50 ரன்களைத் தாண்டவில்லை. கடைசி 13 டெஸ்ட்களில் 2 சதங்கள் மட்டுமே எடுத்திருந்தார். இதனால் அவரது தலைமை மீது பல்வேறு விமர்சனங்கள் வந்தது.

இதனால் இங்கிலாந்துடனான ஆஷஸ் தொடருடன் கடந்த ஓகஸ்ட் மாதம் கிளார்க் ஓய்வை அறிவித்தார். இந்நிலையில், தன்னுடைய கப்டன் திறமை குறித்து அப்போது வெளிப்படையாக விமர்சனம் செய்த சக வீரர்கள் சைமண்ட்ஸ், மத்யூ ஹைடன் மீது கடும் விமர்சனம் செய்துள்ளார்.

3 மாதங்கள் கழித்து தன்னுடைய மௌனத்தை கலைத்த கிளார்க், இது தொடர்பாக ஆஷஸ் டைரியில் தற்போது குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய கப்டன் திறமை குறித்து விமர்சனம் செய்ய சைமண்ட்ஸ் சரியான நபர் இல்லை என்று அதில் சாடியிருந்தார். மேலும் முன்னாள் பயிற்சியாளர் ஜோன் புஜ்னனையும் டைரி குறிப்பில் விமர்சனம் செய்தார். (க)

## உலக கிண்ண கால்பந்தாட்டம்: பிரேசில், ஆர்ஜென்டினா தகுதி



2018-ம் ஆண்டு நடைபெறும் உலக கிண்ணக் கால்பந்தாட்ட போட்டியில் விளையாடுவதற்கு பிரேசில், ஆர்ஜென்டினா அணிகள் தகுதி பெற்றுள்ளன.

ரஷ்யாவில் 2018-ம் ஆண்டு பிபா உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டிகள் நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்பதற்கான தகுதி சுற்று போட்டிகள் பல்வேறு நாடுகளில் நடந்து கொண்டிருக்கிறது.

தென் அமெரிக்க கண்டங்களுக்கான போட்டியில் பிரேசில்- பெரு அணிகள் மோதின, இதில் பிரேசில் 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் கொலம்பியாவை தோற்கடித்த ஆர்ஜென்டினா 1-0 என்ற கணக்கில் வென்றது.

இதன்மூலம் பிபா உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு பிரேசில், ஆர்ஜென்டினா அணிகள் தகுதி பெற்றுள்ளது. (க)

## சர்வதேச டெஸ்ட் தரவரிசை

## தென்னாபிரிக்க வீரர்கள் முன்னிலை




டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்கள் மற்றும் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதில் சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான பட்டியலில் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டைன் முதலிடத்தில் உள்ளார்.

தொடர்ந்து இங்கிலாந்தின் அண்டர்சன், பாகிஸ்தானின் யாசிர் ஷா இரண்டு, மூன்று இடங்களில் உள்ளனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போடடியில் அசத்திய இந்தியாவின் ஜடேஜா, எட்டு இடங்கள் முன்னேறி 13வது இடத்தில் உள்ளார்.

துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியலில் தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸ் முதலிடத்தில் உள்ளார்.

இரண்டாம் இடத்தை அவுஸ்திரேலியாவின் ஸ்டீவன் ஸ்மித், நியூசிலாந்தின் வில்லியம்சன் பகிர்ந்து கொண்டுள்ளனர். (க)

## வருணபகவானின் வருகையால் வெற்றி வாய்ப்பை நழுவவிட்டோம்

## ஆதங்கத்தில் ஹோலி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடிய இந்திய அணிக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

பெங்களூருவில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட்டின் முதல் நாளில், பந்து வீச்சிலும், துடுப்பாட்டத்திலும் சிறப்பான நிலையை இந்தியா வெளிப்படுத்தியது. ஆனால், அடுத்த நான்கு நாட்கள் பெய்த தொடர் மழையால் இந்தியாவுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய டெஸ்ட் அணித்தலைவர் ஹோலி கூறியதாவது, ஒவ்வொரு நாளும் மைதானத்திற்கு வந்து போட்டியில் பங்கேற்க இயலாதது எரிச்சலை ஏற்படுத்தும், இருப்பினும் வானிலையை கட்டுப்படுத்த இயலாது.

டெஸ்ட் போட்டியில் முதல் இடத்தில் இருக்கும் தென்னாபிரிக்காவை முதல் நாள் ஆட்டத்திலேயே சுருட்டினோம், மேலும் நான்காவது நாள் ஆட்டத்தில் நாங்கள் துடுப்பெடுத்தாடியிருந்தால் அவர்களுக்கு நெருக்கடி கொடுத்திருக்க இயலும்.

ஆனால் மழை வந்து குறுக்கிட்டதால், வெற்றி வாய்ப்பு நழுவிவிட்டது என்றே சொல்ல வேண்டும் என்று கூறியுள்ளார். (க)


## கண்ணீர் அஞ்சலி

### Dr. சுப்பிரமணியம் ஸ்ரீவிக்னேஸ்வரா
### (அரியாலை சிவசக்தி வைத்தியசாலை)



வட இலங்கை சுதேச மருத்துவ சபையினது முன்னாள் தலைவரும் யாழ் நகர் கிழக்கு பிரிவின் முன்னாள் பிறப்பு இறப்பு பதிவாளரும் இலங்கை காச நோய் தடுப்பு சங்கத்தின் வட இலங்கை சங்கத்தின் உப தலைவருமான வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்களின் ஆத்மாவின் சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் துயருறும் :-**
தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் அனைத்து உறுப்பினர்கள் வட இலங்கை சுதேச வைத்தியசாலை. வட இலங்கை காசநோய் தடுப்புச் சங்க நிர்வாகத்தினர்.

(C-2752)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் Dr. சு.ஸ்ரீவிக்னேஸ்வரா (DAM)

* வைத்தியர் - (சிவசக்தி வைத்தியசாலை அரியாலை)
* முன்னாள் வட இலங்கை சுதேச வைத்தியசபை தலைவர்
* முன்னாள் நல்லூர் ஆயுள்வேத பாதுகாப்புச் சபை தலைவர்
* வட இலங்கை காசநோய் தடுப்புச் சங்க உப தலைவர்
* முன்னாள் பிறப்பு இறப்பு மருத்துவபதிவாளர் யாழ் நகர் கிழக்கு

அன்னாரது உயிர் துறப்பால் பெரும் துயரம் அடைகின்றோம்.
சிறந்த ஒரு வைத்தியரை இழந்து நிற்கின்றோம்.

அன்னாரது ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**Dr. ஜெ.ஜெயலன்**
**திருமதி Dr.ச.ஜெயலன்**
**சுஜீவா தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை**
**நாச்சிமார் கோவிலடி,**
**K.K.S Road, Jaffna**

(C-2750)

# தாய்லாந்தின் துணைப் பிரதமர் ஜனாதிபதி மைத்திரியுடன் சந்திப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், தாய்லாந்து உப பிரதமர் Wissanu Krea- ngam ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேறறு முன்தினம் மாலை இடம் பெற்றது.இதன்போது தாய்லாநது உப பிரதமரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிக நட்பு ரீதியில் வரவேறறார்.

# எல்லை நிர்ணயம் தொடர்பாக மக்கள் முறைப்பாடு செய்யலாம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் குறித்து எதிர்வரும் 21 ஆம் திகதி வரையில் மக்கள் தங்களது முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணயம் குறித்து ஆராயும் விசேட குழுவின் செயலாளரிடம் முறைப்பாடு செய்ய முடியும்.

எல்லை நிர்ணயம் குறித்து ஆராய்வதற்கு ஐந்து பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை, பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் ஆகியவற்றில் வைக்கப்பட்டுள்ள எல்லை வரைபுகள் மற்றும் வர்த்தமானி அறிவிதலை பார்த்து தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இலக்கம் 330 யூனியன் பிளேஸ் கொழும்பு 2 என்ற முகவரியில் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்ற அமைச்சில் அமைந்துள்ள எல்லை நிர்ணய சபையின் காரியாலயத்திற்கு தபால் மூலமாக முறைப்பாடுகள், யோசனைகள் என்பனவற்றையும் தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# இராணுவ அதிகாரிகளுக்கு சேவைநீடிப்பு வழங்கப்படாது

55 வயதை பூர்த்தி செய்யும் இராணுவ அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு வழங்கப்படாது என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி அறிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் இதனைத் தெரிவிதுள்ளார்.எதிர்வரும் காலங்களில் 55 வயதை பூர்த்தி செய்யும் இராணுவ அதிகாரிகள், உத் தியோகத்தர்களின் சேவை நீடிக்கப்படாது.

தற்போது நடைமுறையில் உள்ள இராணுவச் சட்டங்கள், நியமங்கள், கட்டளைச் சட்டங்களுக்கு அமையவேயன்றி 55 வயதை பூர்த்தி செய்யும் எந்தவொரு அதிகாரிக்கோ உத்தியோகத்தருக்கோ சேவை நீடிப்பு வழங்கும் விசேட தேவை எதுவும் கிடையாது.

இராணுவப் படையின் மேஜர் ஜெனரல்கள் பலர் விரைவில் ஓய்வு பெற்றுக் கொள்ள உள்ளனர்.

இவ்வாறு ஓய்வு பெறும் அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு வழங்கப்படுமா என சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பொது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7-10)

# பொது அறிவித்தல்-2016
# கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி

01.படவரைஞரைப் பதிவுசெய்தல்

2016 ஆம் ஆண்டு பட வரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும்,2016 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பித்துக் கொள்வோர் கரைச்சிப் பிரதேச சபையின் உப அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

02.வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2016

கரைச்சிப் பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப் படிவத்தை கரைச்சி, முரசுமோட்டை உப அலுவலகங்களில் 2016 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 2016.02.28 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளவும். 2016.03.31ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளாதவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

03.சூழல் பாதுகாப்பு உரிமம் **(EPL-2016)**

கரைச்சிப் பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் சிறியமற்றும் நடுத்தரவியாபார/தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு சூழல்பாதுகாப்பு உரிமத்தை 2016.02.16 ஆம்திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற்றுக்கொள்ள தவறுபவர்கள் 2016 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார/ தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீதுசட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

04.துவிச்சக்கர வண்டி,மிருகங்களின் உரிமம்

கரைச்சிப் பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள்துவிச்சக்கரவண்டிகள், வளர்ப்புநாய்கள் வைத்திருப்போர் 2016.03.31 ஆம் திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2016 ஆம் ஆண்டிற்கான வாகன, மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

05.வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், கிணறுகள் அமைத்தலும், புதுப்பித்தல்/ திருத்தவேலைகள் செய்தலும்

(5-1) கரைச்சி நிர்வாகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் மேற்படி அமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு- 268 இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய விண்ணப்பப்படிவங்களை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் பெற்றுசபையின் முன்னனுமதி பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு முன் அனுமதி பெறப்படாத கட்டடங்கள் யாவும் எவ்வித நட்டஈடும் வழங்கப்படாது அனுமதியற்ற கட்டடமாக கருதிசபையினால் அகற்றப்படும்.

(5-2) ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருடகாலத்தில் கட்டடவேலைகள் பூர்த்தியாகாத விடத்து அவ் விண்ணப்பதாரிகள் அனுமதியினை புதுப்பித்துக் கொள்வதோடு கட்டடத்தினைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06.வீதிஒழுங்கினைப் பேணுதல்

கிளி. நகரமையப் பகுதியில் அதிகரித்த போக்குவரத்துக் காரணமாக, விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளும் முகமாக வியாபாரநிலையங்களிற்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றினை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன்.

07.விளம்பரப் பலகைகளை அமைத்தல்/காட்சிப்படுத்தல்

கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாக பிரிவில் உள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும்/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 2016.02.16 ஆம் திகதிக்கு முன் உரியகட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அனுமதி பெறப்படாத முகவர்கள்/ நிறுவனங்கள்/ வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீதுநடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களில் இருந்து 2016.03.31 ஆம் திகதிக்குப் பின் அகற்றுவதற்குநடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

கட்டணவிபரம் பின்வருமாறு

| தொ.இல | விபரம் | பிளாஸ்ரிக் (01 சதுரஅடி) | துணி (01 சதுரஅடி) |
|---|---|---|---|
| 1. | தனியார் வளைவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் விளம்பரப் பலகைகள். | ரூபா.50.00 | ரூபா.25.00 |
| 2. | பிரதானபாதைக்கு தெரியக்கூடிய இடத்தினைப் பயன்படுத்தி பிரதான பாதைக்கு அருகில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப்பலகைகள் | ரூபா.60.00 | ரூபா.30.00 |
| 3. | உள்ளூராட்சிமன்றங்களின் வளைவுகளை பயன்படுத்திய வண்ணம் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள். | ரூபா.100.00 | ரூபா.50.00 |

08.பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருட்களை அனுமதியின்றிக் கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தை கருத்திற் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபைசட்டம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தங்களினால் அகற்றப்படும் திண்ம,திரவ கழிவுகள் பிரதேச சபையின் வாகனங்களின் ஊடாகவேஅகற்றப்படுதல் வேண்டும்.உணவகங்களைநடத்துவோர் தமது திரவக் கழிவு நீரை வீதியின் பொதுகால்வாய் வழியாகதிறந்து விடுவதனால் பொதுமக்களுக்கு அசௌகரியமும்,டெங்குபரவும் அபாயமும் காணப்படுவதனால் மேற்படிசெயற்பாட்டைமேற்கொள்பவர்களின் உணவகங்கள் பூட்டப்படுவதுடன் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படும்.

09.தரகர்முறைநீக்கல்

எமதுபிரதேசசபைஎல்லைக்குட்பட்டசந்தைகளில் தரகர் மூலமானநடைமுறைமுற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றினை அனுசரித்து நடக்குமாறு வியாபாரிகள் வேண்டப்படுகின்றனர்.

10.நடைபாதை வியாபாரம் தடைசெய்யப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் அனைத்துவிதமானநடைபாதை வியாபாரங்களும் தடை செய்யப்பட்டுள்ளது. மீறுபவர்கள் மீதுகடுமையானநடவடிக்கைஎடுக்கப்படும்.

திரு.இ.கிருஸ்ணகுமார்,செயலாளர்,கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி. (சி-2746)

# ராசி பலன்

20.11.2015

(கார்த்திகை 04, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.02 மணிவரை

நவமி மாலை 9.54 மணிவரை

சதயம் பிற்பகல் 3.29 மணிவரை

இராகுகாலம் 10.39-12.09 மணிவரை

சுபநேரம் 6.09-7.39 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| சந் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூசம், ஆயிலியம் | | |
| | | | குரு |
| | சனி<br>சூரி,<br>புத | | ராகு<br>செவ்<br>சுக் |

**மேடம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**கடகம்** உதவி செய்வதாகச் சொன்ன உறவினர்கள் உங்களைவிட்டு விலகலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில இடையூறுகள் ஏற்படலாம்.

**சிம்மம்** மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், கௌரவமான நாள்.

**கன்னி** பகைவர்கள் விலகுவர், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரும், உடல்நலம் சீராகும்.

**துலாம்** புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** செல்வ வளம் பெருக வழிபாட்டில் அக்கறை காட்ட வேண்டிய நாள், ரோக பயமுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**தனுசு** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் உதயமாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், உறவினர்களின் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள்.

**மீனம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம்.

# தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் கம்பன் விழா

(யாழ்ப்பாணம்)



தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் கம்பன் விழா-2015 நாளை மறுதினம் ஞாயிற்றுககிழமை ஸ்ரீஜங்கரன் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அமர்வுகள் காலை, மாலை அமர்வுகளாக இடம் பெறும். இதற்கமைய அன்றைய தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் காலை அமர்வில் வரவேற்புரையினை க.சிந்துஜன் நிகழ்த்தவுள்ளதுடன் தலைமையுரையினை யாழ்.சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முன்னாள் அதிபர் க.அருந்தவபாலன் நிகழ்த்தவுள்ளார்.

தொடக்கவுரையினை ஓய்வு நிலை கோட்டக்கல்வி அலுவலர் கு.சிவானந்தன் நிகழ்த்தவுள்ளார். இதன்போது "எங்கள் வாழ்வும் இராமாயணமே" எனும் தலைப்பில் கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார் தலைமை தாங்கும் கவியரங்கமும் இடம்பெறும். இக்கவியரங்கத்தில் ஆரணியகாண்டம் தொடர்பாக நாக.சிவசிதம்பரமும், சுந்தரகாண்டம் தொடர்பாக அ.வாசுதேவாவும், யுத்தகாண்டம் தொடர்பாக ந.விஜயசுந்தரமும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து கணவன் செயலால் கதியிழந்த காரிகை எனும் இலக்கிய ஆணைக்குழு இடம்பெறும். கம்பவாரிதி. இ.ஜெயராஜ் ஆணையாளராக இதில் பங்கேற்கவுள் ளார்.

இதில்கோசலையே என் கு.பாலசண்முகனும், தாரையே என ச.மார்க்கண்டுவும், மண்டோதரியே என தி.வேல்நம்பியும் உரைநிகழ்த்தவுள்ள னர்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். வரவேற்புரையினை சு.சுதர்சனும் தலைமையுரையினை யாழ். சாவகச் சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரனும் நிகழ்த்தவுள்ளதுடன் தொடக்கவுரையினை சாவகச் சேரி மாவட்ட நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதிநந்த சேகரன் நிகழ்த்தவுள்ளார்.

இதன்போது யாழ்: உசன் இராமநாதன்மகாவித்தியாலய ஓய்வு நிலை அதிபர் ஐயாத்துரை-வரதராஜா கௌரவிக்கப்படவுள்ளார்.

தொடர்ந்து கற்றோர் நெஞ்சைப் பெரிதும் கவர்ந்து நிற்போர் என்ற தலைப்பில் பட்டிமண்டபம் இடம்பெறும் இதில கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராக பங்கேற்கவுள்ளார்.

இதில் கற்றோர் நெஞ்சைப் பெரிதும் கவர்ந்து நிற்போர் இராமன் தம்பியரே என்ற வர்தத்தில் ச.லலீசன், இ.சர்வேஸ்வரா, வே.உதயகுமார் ஆகியோர் பங்குபற்றுவதுடன் கற்றோர் நெஞ்சைப் பெரிதும் கவர்ந்து நிற்போர் இராவணன் தம்பியரே என்ற வாதத்தில் ந.விஜயசுந்தரம், செ.செல்வரமணன், லோ.துஷிகரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனா (இ-5-29)



சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான புதிய வதிவிட பிரதிநிதி கிளைறி மேட்ரென்ட் வட மாகாண ஆளுநர் எச்.எம்.ஜீ.எஸ்.பளிகக்காரவை நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இதில் புதிய அரசின் மனிதாபிமான செயற்பாடுகள் தொடர்பாகவும் யாழ்.மாவட்டத்தில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இக் கலந்துரையாடலில் சர்வதே சசெஞ்சிலுவை சங்கத்தின் இலங்கைக்கான அலுவலக தலைமை அதிகாரி பற்றிக் மொறினும் மற்றும் ஆளுநரின் உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகமும் கலந்து கொண்டனர். (படம்:-பொ.சோபிகா)

# ஆறுமுக நாவலர் குருபூசை சைவ வினாவிடைப் பரீட்சை

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம், சைவச் சிறார்களின் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்குரு பூசையை முன்னிட்டு சைவ வினா விடைப் பரீட்சையை நடத்தவுள்ளது.

இப்பரீட்சை தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையிலான பயிலும் மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சை இம் மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம் மாதம் 25 ஆம் திகதியாகும். பரிசில்கள் டிசெம்பர் 13 ஆம் திகதி அன்று வழங்கப்படும்.

மேற்படி பரீட்சையில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பிற்பகல் 3 மணி முதல் 5.30 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக்கழக பரீட்சை செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (இ-5)

# சர்வதேச வர்த்தக கண்காட்சி

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை 07 ஆவது தடவையாக யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாக அமைந்துள்ள யாழ்.மாநகரசபை மைதானத்தில் பிரமாண்டமாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வழமைபோன்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம், வரையறுக்கப் பட்ட இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து இவ்வர்த்தகக் கண்காட்சியினை ஏற்பாடு செய்கின்றன.

இக் கண்காட்சியானது வடபகுதிக்கும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையே ஓர் இணைப்பு பாலமாக விளங்குவதுடன் வர்த்தக மற்றும் கைத்தொழில் தொடர்புகளைப் பலப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

வழமைபோன்று இம் முறையும் 250 இற்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார் கைத்தொழில் மற்றும் வர்த்தக துறையினர் கண்காட்சியில் தத்தமது உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்கவுள்ளனர்.

எனவே மேற்படி கண்காட்சியில் காட்சிக்கூடங்களை அமைக்க விரும்பும் வடமாகாணத்தினைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் இல.124, இராசாவின் தோட்டம் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்துடன் தொடர்பு கொண்டு 29.12.2015 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு 021 222 6609 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ




# முன்மொழியப்பட்ட வேலைத் திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்த அறிவுறுத்து

உலக மீனவ தினத்தை முன்னிட்டு மீனவ வாரத்துக்குள் நடைமுறைப்படுத்துவதற்கென அமைச்சினால் முன்மொழியப்பட்ட வேலைத் திட்டங்களை யாழ்.மாவட்டத்தில் உள்ள கிராமிய கடற்றொழில் அமைப்புக்கள் சிறப்பாக செயற்படுத்துமாறு யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவி பணிப்பாளர் பா.ரமேஸ்கண்ணா கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக மீனவ தினத்தை முன்னிட்டு மீன்பிடி அமைச்சினால்நாளை21ஆம்திகதிதொடக்கம் 27 ஆம் திகதி வரை மீனவ வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளது. அந்த வாரத்தினுள் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடத்துவதற்கு அமைச்சால் முன்மொழியப் பட்டுள்ளது.

அந்த வகையில் நாளை 21 ஆம் திகதி மீன்பிடித்துறை முகங்கள், களப்பு சார்ந்த பிரதேசங்கள், கடற்கரை சார்ந்த பிரதேசங்கள், போன்ற வற்றைசுத்தம்செய்தல், நாளை மறுதினம் 22 ஆம் திகதி மீனவர்கள், மீனவ பெண்கள் மற்றும் மீனவ பிள்ளைகள் ஆகியோரை ஒன்றிணைத்து சர்வமத வேலைத்திட்டம் நடத்துதல், எதிர்வரும் 23 ஆம் திகதி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு மீனவர்களின் பிரச்சினைகள் மற்றும் இடையூறுகள் உட்பட்ட மகஜர் ஒன்றை கையளிப்பதற்கு கொழும்பில் நடைபெறும் பாத யாத்திரையில் கலந்து கொள்ளல், எதிர்வரும் 24 ஆம் திகதி சகல கிராமத்திலும் உள்ள மீனவர்களுக்கு அறிவூட்டும் வேலைத் திட்டம், எதிர்வரும் 25 ஆம் திகதி கிராமிய மீனவ அமைப்பில் அங்கம் வகிக்கும் பிள்ளைகளுக்கு சித்திரம் மற்றும் கட்டுரை போட்டிகள் நடத்துதல் மற்றும் மீனவ குடும் பங்களுக்கு வைத்திய உதவிகள் நடத்துதல், எதிர்வரும் 26 ஆம் திகதி கிராமிய மீனவ அமைப்புக்களில் உள்ள குறைபாடுகளை தயாரித்தல், எதிர்வரும் 27 ஆம் திகதி மீனவ பெண்கள் மற்றும் மீனவ பிள்ளைகளின் சேமிப்பு பழக்கத்தை மேம்படுத்துவதற்கானவேலைத் திட்டம் போன்ற வேலைத் திட்டங்கள் நடைபெறவுள்ளன.

அது தொடர்பான விபரங்கள் ஒவ்வொரு கிராமிய கடற்றொழில் அமைப்புக்களுக்கு அனுப்பி கைய ளிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை சிறப்பான முறையில் நடத்துமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பொறுப்பற்ற செயல்களால் சூழல் மாசடைவு அதிகரிப்பு

மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட ஓட்டுமடம் சந்தியிலிருந்து கல்லுண்டாய் வரையான அராலி வீதியின் இருமருங்குகளிலும் குப்பைகள் கொட்டப்படுவது மற்றும் திரவக் கழிவுகள் அகற்றப்படுவது பற்றிய முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே அவ்வாறு தொடர்ந்து அகற்றுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வினைதிறனான திரவக்கழிவகற்றல் நடவடிக்கைக்காக குறித்த சில நிபந்தனைகளிற்கு அமைவாக கழிவகற்றும் வாகன உரிமையாளர்களின் பங்களிப்புடன் திரவக்கழிவகற்றல் செயற்பாடு நடைபெற்று வருகின்றது. எனினும் எம்முடன் செய்து கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்குமுரணாகவாகன உரிமையாளர் ஒருவர் வாகனம் குடை சாய்தமையினால் வாகனத்தை பாதுகாக்கும் நோக்குடன் அனுமதிக்கப்படாத இடத்தில் உணவு விடுதி திரவக் கழிவினை அகற்றியுள்ளார்.

குறித்த வாகன உரிமையாளரின் பங்களிப்பு உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் விசாரணையும் நடைபெற்று வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ-7)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வருடாந்த அணிவகுப்பு மரியாதையில் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.ஆர்.மாசிங்க, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜபார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை-2015
# மாதிரி வினாத்தாள் மேல்மாகாணம்

**பாடம்:-வரலாறு** **பகுதி I** **நேரம்:-1 மணித்தியாலம்**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01.வரலாற்று மூலாதாரமாகக் கூறப்படும் மகாவம்சத்தில் நூலாசிரியரால் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கும் காரணி யாது?

1.அரசர்களின் அரசியல் தகவல்கள்
2.அரசர்களின் பொருளாதார தகவல்கள்
3.சமய வரலாறு தொடர்பான தகவல்கள்
4.வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் தொடர்பான தகவல்கள்

02.கற்கால மனிதன் பாவித்த தொழில்நுட்பம் தொடர்பிலான தகவல்களை எங்கமைந்திருந்த கட்டடத்தின் இடிபாடுகளிலிருந்து கண்டுபிடித்தனர்?

1.கித்துல்கலை 2.பாஹியன்கல
3.அத்தனகொட 4.பட்டதொம்ப

03.எம் நாட்டிற்கு அடிக்கடி வருகை தந்த ஆரிய குழுவினர் குடியேற்றமமைக்க தெரிந்தெடுத்த இடங்களும் அவை அமைந்திருந்த நதிக்கரைகளும் பகுதி அ, ஆவில் தரப்பட்டுள்ளன. பொருத்தமாக இணைத்து விடையைத் தெரிக.

| அ. | ஆ. |
|---|---|
| 1.தீககாமம் | A.கப்பரகந்த நதி |
| 2.உருவெலகாமம் | B.கல்கா நதி |
| 3.கஜரகாமம் | C.கிரிந்தி நதி |
| 4.கோணகாமம் | D.மகாவாலுக நதி |
| | E.கோணநதி |

1.BADE 2.BEAD 3:ACBD 4.CADE

04. -அநுராத யுகத்திற்கு உரித்தானது
-ஐந்தாம் காசியப்ப மன்னனால் எழுதப்பட்டது
-தம்மபத கதையின் ஆழமான கருத்துக்களை சிங்களத்தில் விபரித்தமை
மேற்கூறப்பட்ட தகவல்கள் எவ்விலக்கியத்துடன் தொடர்புடையன?

1.சமந்த பாசாதிகாவ
2.போதிவங்ச கெட்டபதய
3.சம்மோஹ வினோதினிய
4.தம்பிய அட்டுவா கெட்டபதய

05.இளவரசன் பராக்கிரமபாகுவிற்கும் கஜபாகு மன்னனுக்கும் இடையில் ஏற்பட்ட ஒருங்கிணைப்புப் பற்றிக் கூறும் கல்வெட்டு

1.தெவனகலை கல்வெட்டு 2.கல்பொத்த கல்வெட்டு
3.சங்கமு விகாரை கல்வெட்டு 4.அம்பகமுவை கல்வெட்டு

06.இலங்கையின் ஆக்கிரமிப்பாளர்களையும் அவர்களிடமிருந்து எமது நாட்டை காத்த அரசர்களும் தொடர்பிலான விடைகளுள் பொருத்தமற்ற விடையானது

1.பண்டுகாபாரிந்த மன்னன்- மகாசேன மன்னன்
2.முதலாம் இராஜேந்திர மன்னன்- மகா விஜயபாகு மன்னன்
3.சேன குத்திக- அசேல மன்னன்
4.எல்லாளன்-துட்டகைமுனு

07.பள்ளத்தை நோக்கி வரும் வண்டல் மண் வாவிக்குள் வருவதைத் தடை செய்யவும் மேட்டு நில அடிவாரத்தை ஈரமாகவும் வைத்திருக்க உதவுவது எது?

1.உள்வான் கதவு 2.சிறுகுளங்கள் 3.கலிங்கற்கட்டு 34.போட்டா அணை

08.நதிக்கரையோர நாகரிகங்களில் இளவரசு பட்டம் யாருக்குக் கிட்டியது?

1.உருகுணை ஆட்சியாளனுக்கு
2.மாயரட்டை ஆட்சியாளனுக்கு
3.அட்டதஹஸ் ரட்டை ஆட்சியாளனுக்கு
4.தொலஸ்தஹஸ் ரட்டை ஆட்சியாளனுக்கு

09.✦ பெலிகலை தலதாமாளிகையை நிர்மாணித்தமை
✦ கி.பி.1341 இல் கம்பளை அரசனாதல்
✦ விதாகம் ஶ்ரீகணானந்த பிரிவெனாவிற்கு ஆதரவளித்தல்
மேற்கூறப்பட்ட தகவல்கள் தொடர்பிலான மன்னர்களை முறையாகக் கொண்ட தொகுதி

1.மூன்றாம் விஜயபாகு, நான்காம் பராக்கிரமபாகு, ஆறாம் பராக்கிரமபாகு
2.இரண்டாம் பராக்கிரமபாகு, நான்காம் புவனேகபாகு, நான்காம் பராக்கிரமபாகு
3.நான்காம் பராக்கிரமபாகு, இரண்டாம் பராக்கிரமபாகு, ஆறாம் பராக்கிரமபாகு
4.மூன்றாம் விஜயபாகு, நான்காம் புவனேகபாகு, நான்காம் பராக்கிரமபாகு

10.யாப்பகுவை இராசதானி காலத்தில் கட்டடக்கலையில் எம்மரபின் தாக்கத்தைக் காணக்கூடியதாக இருந்தது?

1.தென்னிந்திய மரபு 2.குப்த மரபு
3.மௌரிய மரபு 4.வட இந்திய மரபு

11.பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் பிரிவெனா கல்வி வளர்ச்சி கண்டதன் காரணம்

1.கல்வி கற்ற மதகுருமார் வாழ்ந்தமை
2.கற்ற பண்டிதர்கள் வாழ்ந்தமை
3.கல்வி நிலையங்களின் வளர்ச்சிக்கு அரச அனுசரணை கிடைத்தமை
4.சமய கலாசார நடவடிக்கைகளில் பெண்கள் பங்கெடுக்காமை

12.இலங்கை வரலாற்றில் முக்கிய சம்பவங்கள் சில பகுதி அ விலும் அவற்றுடன் தொடர்புடைய மன்னர்கள் பகுதி ஆ விலும் காணப்படுகின்றன. பொருத்தமாக இணைத்து விடையைக் காண்க.

| அ. | ஆ. |
|---|---|
| 1.சந்திரபானுவின் ஆக்கிரமிப்பிற்கு முகங்கொடுத்த மன்னன் | A.ஆறாம் புவனேகபாகு |
| 2.நிஸ்ஸங்க அலககோணாரவின் உதவியால் கம்பளை அரசனாதல் | B.இரண்டாம் பராக்கிரமபாகு |
| | C.ஆறாம் பராக்கிரமபாகு |
| 3.சிங்கள சங்கய எனும் புரட்சி ஏற்பட்டமை | D.மூன்றாம் விஜயபாகு |
| 4.தம் தாயாரை நினைவுகூர்ந்து பிரிவெனா அமைத்தவர் | E.மூன்றாம் விக்கிரமபாகு |

1.ABCD 2.BEAC 3.BADE 4.CBEA

13.மேற்கத்தியர் இலங்கைக்கு பல நோக்கங்களுக்காக வந்தனர்.பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற கூற்று

1.தம் சமயத்தைப் பரப்புதல் 2.வர்த்தக ஆதிக்கம் செலுத்துதல்
3.கல்வித்துறையை அபிவிருத்தி செய்தல் 4.வாசனைத் திரவியங்களை பெற்றுக்கொள்ளல்

14.கி.பி.1521 இல் ஏற்பட்ட விஜயபாகு கொலையின் பின் கோட்டை இராச்சியம் எவ்வாறாகப் பிரிந்தது?

1.கோட்டை, சீதாவக்கை, கம்பளை 2.கோட்டை, சீதாவக்கை, றைகம
3.சீதாவக்கை, தெதிகாமம், கோட்டை 4.றைகம, கம்பளை, சீதாவக்கை

15.கி.பி.1602 இல் ஒல்லாந்தைச்சேர்ந்த ஜொரிஸ் பன் ஸ்பில்பர் வருகையின்போது கண்டி இராச்சிய மன்னன்

1.முதலாம் விமலதர்மசூரியன் 2.இரண்டாம் விமலதர்மசூரியன்
3.இரண்டாம் இராஜசிங்கன் 4.இரண்டாம் விஜய இராஜசிங்கன்

16.பிரித்தானியரால் இலங்கை கைப்பற்றப்பட்ட- அவர்களால் எடுத்துவைக்கப்பட்ட முதல் படி

1.கி.பி.1815 கண்டிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டமை
2.கி.பி.1803 இல் கண்டியில் ஏற்பட்ட ஆக்கிரமிப்பு
3.கி.பி.1796 கரையோரப் பகுதிகளை கைப்பற்றியமை
4.கி.பி.1797 இல் ஏற்பட்ட புரட்சியால் ஆட்சியில் ஏற்பட்ட மாற்றம்

17.ஆளுநர் பிரட்ரிக் நோர்த் கண்டி இராச்சியத்தை கைப்பற்ற ஏதுவான மூலகாரணி

1.கடைகளுக்கு வரி கட்டப்பட நேர்ந்தமை
2.பிலிமத்தலாவே அதிகாரத்தின் வேண்டுகோள்
3.கண்டிக்கு சென்ற வியாபாரிகள் துன்புறுத்தி பொருட்களை கொள்ளையடித்தமை
4.நாட்டினுள் சுயாதீன இராச்சியம் காணப்பட்டமை ஆங்கிலேயருக்கு தடையாக இருந்தமை

18.கீழே பகுதி அ இல் சீர்திருத்த யாப்புகளும் பகுதி ஆ இல் சீர்திருத்தங்களும் தரப்பட்டுள்ளன. பொருத்தமானவற்றை இணைத்தால் வரும் விடையானது.

| அ. | ஆ. |
|---|---|
| 1.டொனமூர் யாப்பு | A.பிரதமர் தலைமையிலான கபினட் சபை |
| 2.கோல்புறூக் யாப்பு | B.பிரதேசவாரி பிரதிநிதித்துவம் |
| 3.சோல்பரி யாப்பு | C.பெயரளவு ஜனாதிபதி பதவி |
| 4.மனிங் யாப்பு | D.கண்டியும் தென்பகுதியும் ஒன்றிணைக்கப்பட்டமை |
| | E.இனவாரி பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டமை |

1.EDAB 2.DECB 3.ECDB 4.CBDA

19.விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் ஆளுநர் வெஸ்ட் ரிட்ஜ்வே மேற்கொண்ட நடவடிக்கைகள் பின்வருவனவற்றுள் எது?

1.திஸ்ஸமகாராம வாவி புனரமைப்பு
2.போக்குவரத்து திணைக்களத்தை உருவாக்கியமை
3.யோத எலயின் ஒரு பகுதியை புனரமைத்தல்
4.தானிய வரியை இல்லாதொழித்தல்

20.A.பேலியகொடை வித்தியாலங்கார பிரிவெனாவை ஆரம்பித்தல்
B.பௌத்தமத கல்வி அறக்கட்டளை உருவாக்கம்
C.பஞ்சமகா விவாதம் மேற்கொள்ளல்
D.பரமவிஞ்ஞானார்த்த பௌத்த சங்கம் ஆரம்பம்
E.பௌத்த இளைஞர் சங்கம் ஆரம்பம்
மேற்கூறப்பட்ட காரியங்களில் சேர்.ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களால் செய்யப்பட்ட சேவைகள் அடங்கிய விடை

1.BD 2.AB 3.DE 4.CB

21.பல சங்கங்களின் ஒருங்கிணைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தேசிய சங்கத்திலிருந்து தொழிலாளர் சங்கம் விலகியமைக்கு ஏதுவான காரணி

1.சர்வசன வாக்குரிமையை கேட்டிருந்தும் தேசிய சங்க தலைவர் இணங்காமை
2.ஆசன ஒதுக்கீட்டில் கருத்து வேறுபாடு
3.பிரித்தானிய தேசிய சங்கத் தலைவர்கள் கலகம் செய்தமை
4.சிறு தேசிய சங்கம் வெளியேற்றம்

22.லங்கா எனும் பெயரால் அழைக்கப்பட்ட எமது நாடு ஸ்ரீலங்கா என அழைக்கப்பட வேண்டும் எனும் யோசனை எச்சீர்திருத்த யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது?

1.கி.பி.1931 டொனமூர் சீர்திருத்த யாப்பு 2.கி.பி.1947 சோல்பரி சீர்திருத்த யாப்பு
3.கி.பி. 1972 முதலாம் குடியரசு யாப்பு 4.கி.பி.1978 இரண்டாம் குடியரசு யாப்பு

23.இந்தியாவில் குடியேற்றங்களை உருவாக்கிய ஆரியர் எக்காரியங்களுக்காக சபா சமித்தி சபை, சங்கம் அமைப்புகளை உருவாக்கினர்?

1.நகர ஆட்சிக்காக 2.வரி அறவிடுவதற்காக 3.சமய நடவடிக்கைகளுக்காக
4.நிர்வாக வேலையை எளிதாக்குவதற்கு

(19 ஆம் பக்கம் பார்க்க..)

# மன்னார்-யாழ். பிரதான வீதியை பார்வையிட்டார் வ.மா.அமைச்சர்



(பனிக்கன்குளம்)

மன்னார்-யாழ்ப்பாணம் (ஏ-32) பிரதான வீதியை வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தால் மன்னார்- யாழ்ப்பாணம் பிரதான வீதி வாகனங்கள் போக்குவரத்துக்கு தடையாக உள்ளநிலையில், பாலியாறு மண்டக்கல்லாறு ஆகிய இரு பிரதான ஆறுகள் வீதியைக் கடக்கும் இடங்களில் இந்த வெள்ளநீர் காரணமாக வாகன போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இவ் வீதியை நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்ட வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடினார். அத்துடன் படகு போக்குவரத்து சேவைகளை இலவசமாக வழங்கிக்கொண்டிருந்த கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

சென்ற ஆண்டும் இதேபோல மழை வெள்ளம் காரணமாக வீதியின் வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் மேற்குறித்த பிரதான வீதி , வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானதாக இருப்பதனால் விரைவாக செயற்பட்டு இவ்விரு பகுதிகளுக்குமான புதிய பாலங்களை அமைத்து மக்களது போக்குவரத்துக்கு சுமுகமான நிலைமையை எதிர்வரும் ஆண்டுகளில் செய்யுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.(2-281)

# வீதியோர வடிகான்களை உரியமுறையில் அமைத்து போக்குவரத்துக்கு உதவுங்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் காணப்படும் வீதியோர வடிகான்களை உரிய முறையில் அமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வீதியின் பிரதான மற்றும் உள்வீதிகளுக்கு வடிகாலமைப்பு வசதிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையினாலேயே வெள்ளநீர் தேங்கியிருப்பதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த சில தினங்களாக பெய்துவரும் அடை மழை காரணமாக முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சில கிராமங்கள் வெள்ளத்தினால் மூழ்கின.

எனினும் பிரதேசத்தில் வடிகாலமைப்பு உரிய முறையில் அமைக்கப்பட்டிருந்தால் இவ்வாறு வெள்ளம் ஏற்படுவதை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடிந்திருக்கும் எனவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குளங்கள், ஆறுகளில் நீர் நிரம்பியுள்ளமையால் பிரதான மற்றும் உள்வீதிகளை ஊடறுத்து நீர் பாய்வதால் வீதிகளும் சேதமடைந்து காணப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, முறையான வீதியோர வடிகாலமைப்புக்களை முன்னெடுப்பதற்கு உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-281)




# வெள்ளநீரில் மலக்கழிவு கலப்பு தொற்றுநோய் பரவும் அபாயம்.

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் மக்கள் கோரிக்கை



(மன்னார்)

மன்னார் பகுதியில் தேங்கியுள்ள வெள்ள நீரினால் சுகாதார பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சௌத்பார்,சாந்திபுரம், எமிழ்நகர், ஜிம் ரோன் நகர் ஆகிய கிராமங்களைச் சுற்றி தற்போது வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

குறித்த கிராமங்களில் உள்ள பெரும்பாலான வீடுகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில் தற்போது தேங்கியுள்ள வெள்ள நீரில் மலக்கழிவுகள் கலந்துள் ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு பல்வேறு கழிவுகளும் வெள்ள நீரில் கலந்துள்ளமையினால் சிறுவர்களுக்கு தொற்று நோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதாக அப்பகுதிமக்கள்கவலை தெரிவிததுள்ளனர்.

வெள்ளநீர் கிராமங்களில் சூழ்ந்து கொண்டுள்ளமையினால் அப்பகுதியில் உள்ள வீடுகளில் காணப்பட்ட மலசல கூடங்களும் வெள்ள நீரில் நிரம்பி யுள்ளது. அதன் காரணமாக மலசல கழிவுகள் நீரில் கலந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து வெள்ளநீர் வழிந்தோடுவதற்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-4)

# பரசங்குளம் காணி பங்கீடானது சுமுகமான முறையில் தீர்க்கப்படும்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா வடக்கு, புளியங்குளம் வடக்கு, பரசங்குளம் காணி பங்கீடு தொடர்பில் மக்கள் பாதிக்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்குமாகாண சுகாதார, அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகசந்திப்பு ஒன்றில் பரசங்குளம் காணியில் இடம் பெற்றுள்ள முறைகேடு தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

புளியங்குளம் வடக்கு, பரசங்குளம் திருத்தம் மற்றும் அதைத் தொடர்ந்து அதன்கீழான காணிகளை பகிர்ந்தளித்தல் தொடர்பாக மக்கள் பல முறைப்பாடுகளை எமக்கு செய்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா வடக்கு பிரதேச செயலாளருடன் கலந்துரையாடியுள்ளேன். அவர் காணி பங்கீடுகளை செய்துள்ளதாக கூறியிருக்கின்றார். இருந்தாலும் மக்கள் பிரதிநிதிகள், அப்பகுதி பிரதேச செயலாளர் ஆகியோர் இணைந்து ஒரு கூட்டத்தை கூட்ட இருக்கின்றோம்.

அதன் மூலம் யாருக்கும் பாதிக்காத வகையில் ஒரு சுமுகமான தீர்வு எடுக்கப்படும். மக்கள் பாதிக்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250)

# ஆறுதல் நிறுவனத்தினால் மாணவர்களுக்கு கற்றல் பயிற்சி வகுப்புக்கள் இரு தினங்கள்

(முல்லைத்தீவு)

க.பொ.த.சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் சித்திவீதத்தை உயர்த்துவதற்கான பல்வேறு செயற்றிட்டங்களை ஆறுதல் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான துரித கற்றல் செயற்றிட்டம்ஒன்று நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30மணி தொடக்கம் பிறபகல் 4.30 மணி வரை கிளிநொச்சியிலுள்ள செஞ்சோலை மகளிர் இல்லத்தின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த கற்றல் பயிற்சி வகுப்புகள் கிளி நொச்சி செஞ்சோலை சிறுவர் இல்லம், முல்லைத்தீவு பாரதி சிறுவர் இல்லம்,அன்பு இல்லம் ஆகியவற்றில் தங்கி கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

மேற்படி செயலமர்வில் வளவாளர்களாக வடக்கு மாகாண முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ்,வலிகாமம் வலய முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமார்,தமிழ் ஆசிரியை திருமதி ஜோர்ஜ் ஜனதா,சிரேஷ்ட செயற்றிட்ட அலுவலர் ப. கஜேந்திரன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

இச் செயலமர்வில் கணிதம், விஞ்ஞானம், தமிழ்,ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான பயிற்சி வகுப்புகளும் மதிப்பீடுகளும் நடத்தப்படவுள்ளதால் அவர்களுக்கான கற்றல் கையேடுகளும் மதிப்பீட்டு வினாத்தாள்களும் வழங்கப்படவுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.(2)

# ஜப்பான் தூதரக அரசியல் ஆலோசகர் மாகாண சபை உறுப்பினருடன் சந்திப்பு



(குருமன்காடு)

ஜப்பான் தூதுவராலயத்தின் அரசியல் ஆலோசகர் மரிக்கோ யமாமொடாவிற்கும் வடக்குமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிற்கும் இடையில் சந்திப்பொன்று முல்லைத்தீவில் இடம்பெற்றுள்ளது.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நேற்று முன்தினம் முற்பகல் 10மணியளவில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மேலும் சில பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இச் சந்திப்பு தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவி கரன் கருத்து தெரிவிக்கை யில்,

எம் தாயக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு இடர்பாடுகள் பற்றியதான கலந்துரையாடல் அமைந்திருந்தது.

சிறையிலுள்ள கைதிகளின விடுதலை ,அவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் இன் னல்கள், வாழ்வாதாரச் சிக்கல் களை எதிர்நோக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்கள், கடற்தொழிலாளர்களின் நிலைகள், அரசியல் செல்வாக்குடன் நடைபெறும் காடழிப்பு, கேப்பாப்பிலவு உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் தமிழ் மக்கள் மீள்குடியமர்த்தப்படாத நிலை, வடக்கு மாகாணசபை எதிர் நோக்கும் சிக்கல்கள், மழை வெள்ளத்தினால பாதிக்கப்பட்ட வர்கள் குறிப்பாக வயல்நிலங்களின் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன என அவர் தெரிவித்தார். (2-281-250)

# கோடரியால் வெட்டப்பட்டு படுகாயம் அடைந்தவர் மரணம்

வவுனியாவில் கோடரியால் வெட்டபபட்டு படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் உயிரிழந்துள்ளார்.இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 9.55மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த 55 வயதான நபர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதுடன், தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கூரிய ஆயுதம் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் வவுனியா நீதவான் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.சமபவம தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

# கனமழையினால் நெற்பயிர்கள் நாசம்

## ஒலுமடு கமநல சேவை நிலையத் தகவலின்படி

(மல்லாவி)

ஒலுமடு கமநல சேவை நிலைய ஆறு கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளின் கால போக நெற்செய்கையில் 335 ஏக்கர் குள நீர்ப்பாசனக் காணிகளும் 99 ஏக்கர் குள மானாவாரி நெற் செய்கையும் கடந்த வாரம் பெய்த கனமழை காரணமாக அழிவடைந்துள்ளதாக ஒலுமடு கமநல சேவை நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

தச்சடம்பன் குளத்தின்கீழ் 111 1/2 ஏக்கரும் மானாவாரியாக 34 ஏக்கரிலும் நெல் பயிர்கள் அழிவடைந்துள்ளன.

மணவாளன்பட்ட குளத்தின் கீழ் 29 1/2 ஏக்கரும் ஒலுமடு குளத்தின்கீழ் 121 ஏக்கரும் மானாவாரியாக 11 1/2 ஏக்கரும் அம்பகாமம் குளத்தின்கீழ் 67 1/2 ஏக்கரும் மானாவாரியாக 53 1/2 ஏக்கரும் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ள நிலையில் மாங்குளம் வடக்கு, மாங்குளம் ஆகிய கமக்கார அமைப்பின் கீழ் 5 1/2 ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன. ஒட்டுமொத்தமாக ஒலுமடு கமநல சேவை நிலையத்தின்கீழ் 434 ஏக்கரில் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக ஒலுமடு கமநல சேவை நிலையத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)








முள்ளியவளை வேலவர் ஆலயத்தில் நடைபெற்ற சூரன்போரில் மக்கள் பக்தி பரவசத்துடன் பங்கேற்றதை படங்களில் காணலாம்.

(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

## தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் கிளிநொச்சி விஜயம்

### அமைக்கப்படும் அலுவலகத்தையும் பார்வையிட்டார்





தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோகணேசன் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மெற்கொண்டிருந்தார். விஜயம் மெற்கொண்ட அவர் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுவரும் தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சின் அலுவலகத்தினை பார்வையிட்டதுடன், தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரச அதிகாரிகளுடனான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதி பர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் பொது மக்கள் அவரை சந்தித்தனர். சந்திப்பில் தனது மகளை கண்டுபிடித்து தருமாறு காணாமற் போன பெண்ணின் தாயார் வேண்டுகோள் விடுத்திருந்தார். தனது மகள் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருப்பதாக அந்த தாய் கூறி, அவளை மீட்டு தருமாறு கோரிக்கை விடுத்திருந்தார். இறுதியில் ஊடகவியலாளர் சந்திப்பில் காணாமற் போனவர்களை மீட்பது தொடர்பிலும், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் கேள்விகள் எழுப்பப்பட்டன. (2-15)

## பாரீஸ் நகரில் படுகொலைசெய்யப்பட்ட மக்களுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

(கிளிநொச்சி)

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெற்ற ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளினால் கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அறிவகம் அலுவலகத்தில் நடைபெற்றது.



இதில் தேசிய கலந்துரையாடல் கள் அமைச்சர் மனோகணேசன், த.தே. கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீ தரன், மேல் மாகாண சபை உறுப் பினர் எஸ். பாஸ் கரா, வடக்கு மாகாணசபை உறுப்பினர் சுபசுபதிப்பிள்ளை, கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (2-277)

## மாணவர்களுக்கான சான்றிதழ்கள் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையில் தகவல் தொழில்நுட்ப பாடத்தில் நடைபெற்ற விநாடிவினா போட்டி மற்றும் கண்காட்சி போட்டி ஆகியவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள், பரிசில்கள் என்பன வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு துணுக்காய் கல்வி வலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும் என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மேற்படி போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களை பொறுப்பாசிரியருடன் பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொள்வதற்கான ஒழுங்கு நடவடிக்கையை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (2-15)

## பரந்தன்— முல்லை வீதியில்

## அமைக்கப்பட்ட இரண்டு பாலங்கள் மக்கள் பாவனைக்கு திறப்பு



ஐக்கிய இராஜ்ஜியத்தின் நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பிராந்திய பால வேலைத்திட்டத்தில் பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு பாலங்கள் பயணிகளின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. புளியம்பொக்கணை மற்றும் தர்மபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட இரு பாலங்களே மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. (2-281)

# முன்னிலை சோசலிசக்கட்சியுடன் இணைந்து செயற்படத் தயாராம்

## சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

முன்னிலை சோசலிச கட்சியுடன் இணைந்து செயற்படத் தயார் என ஜே.வி.பி. யின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் முன்னிலை சோசலிச கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளேன்.

இணைந்து செயற்படு மாறு பொதுவாக நான் அழைப்பு விடுத்திருக்கின்றேன். இந்த அழைப்பினை தேசிய சுதந்திர முன்னணி ஏற்றுக்கொண்டுள்ளது. இதேபோன்று எனது அழைப்பினை முன்னிலை சோசலிச கட்சியும் ஏற்றுக் கொள்ள முடியும்.

அண்மையில் நடைபெற்ற கார்த்திகை வீரர்கள் தினத்தில் தேசிய சுதந்திர முன்னணியுடன் இணைந்து செயற்பட்டனர். இதேவிதமாக நிபந்தனை அடிப்படையில் முன்னிலை சோசலிசக் கட்சியுடன் இணைந்து செயற்படத் நான் தயார். முன்னிலை சோசலிச கட்சியின் தலைவர் குமார் குணரட்னம் கைது செய்யபட்டமை கண்டிக்கப்பட வேண்டியது.

குணரட்னம் அரசியலில் ஈடுபடவும் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படவும் உரித்துடையவர்என சோமவன்ச அமரசிங்க கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்தார். (இ-7-10)




# இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் சுற்றிவளைக்கப்படுவார்கள்

(கொழும்பு)

**இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் மீதான சுற்றிவளைப்பைத் தொடர்ந்து அவர்களை கைது செய்வதற்கும், அவர்களின் படகுகள், மீன்பிடி இயந்திரங்களைக் கைப்பற்றுவதற்கும் தொடர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.**



கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மீன்பிடித் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்படி தீர்மானங்களை அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினையானது தற்போது இடம்பெறுவதொன்றல்ல. 30 வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்று வருகின்றது.

யுத்த காலத்தில் இந்திய மீனவர்களால் அதிக மீன்கள பிடிக்கப்பட்டன. பின்னர் வருடத்துக்கு 120 நாட்கள், 83 நாட்கள் மீன்பிடிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண பேச்சுகள் இடம் பெற்ற போதும்அது சாதகமாக அமையவில்லை.

இலங்கை கடற்பரப்புக்குள அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் மீதான சுற்றி வளைப்பு தொடரும். அவர்களுடைய படகுகள், மீன்பிடி இயந்திரங்கள் என்பன கைப்பற்றப்படும். மீனவர்கள் மட்டுமே விடுவிக்கப்படுவர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட நூற்றுக்கணக்கான படகுகளுள்ளன.

எனவே, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரச மற்றும் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு நடத்தப்படவுள்ளது. இந்த மீனவர் பிரச்சினையில் வடக்கு மக்கள் எம்முடனேயே நிற்கின்றனர். பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு சுமார் 10 ஆயிரம் பேர் அளவில் கையொப்பமிட்டு எனக்கு மகஜர் கையளித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு நாளை 21 ஆம் திகதி சர்வதேச கடற்றொழில் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண மீனவர்களைக் கொழும்புக்கு அழைத்து, ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் மகஜர் கையளிக்க தபால் அட்டைகளை அனுப்பியுள்ளனர்.

நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தின் கடலுணவு ஏற்றுமதித் தடை குறித்து கருத்து வெளியிட்ட அவர், ஐரோப்பிய ஒன்றியத்தின் மீன்பிடித் தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

ஒன்றியத்தின் நிபந்தனைகளை நாம் நிறைவேற்றியுள்ளோம். இந்நிலையில், ஏற்றுமதித் தடையை நீக்க வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுப்பதையடுத்து, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் இது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# கூட்டு எதிர்க்கட்சி ஏற்கவே முடியாது



சரத் அமுனுகம தெரிவிப்பு

கூட்டு எதிர்க்கட்சி ஏற்றுகொள்ளப்படாதென விசேட விடயங்களுக்கான அமைச்சர் பேராசிரியர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற சட்டத்திற்கமைய ஒரு எதிர்க்கட்சி மாத்திரமே செயற்பட முடியும் என கூறிய அமைச்சர், சில உறுப்பினர் இணைந்து தனியான எதிர்க்கட்சி என்று கூறினால் அதனை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாதென அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் எந்த கட்சியிலாவது உறுப்பினர் ஒருவர் வேறு கட்சியில் உறுப்புரிமை பெற்று கொண்டால் அவருக்கு அதற்கு முன்னர் செயற்பட்ட கட்சியின் உறுப்புரிமை இழக்கப்படும்என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மானிப்பாய் இந்து மாணவன் தேசிய ரீதியில் முதலாமிடம்

அகில இலங்கை ரீதியில பாடசாலை மாணவர்களுக்கிடையில் களனி பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட "பிகு தொற அபியஸ" கலை நிகழ்ச்சியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தரம் 6 இல் கல்வி பயிலும் கணேசலிங்கம் தனுஜன் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

கனிஷ்ட பிரிவில் கர்நாடக சங்கீதம், நாட்டார் இசை ஆகிய இரு போட்டிப் பிரிவுகளிலும் பங்கு பற்றியே முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்பிரிவினருக்கான பரத நாட்டியப்போட்டியில் உயர்தரத்தில் தொழில்நுட்பப் பிரிவில் கல்வி பயிலும் அன்ரனி-கொலன்சியா இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டுள்ளார். (இ-5)

# குமார் குணரட்னத்தை நாடுகடத்த அரசாங்கம் தீர்மானிக்கவில்லை



குமார் குணரட்னத்தை நாடு கடத்த அரசாங்கம் தீர்மானிக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள குமார் குணரட்னத்தை நாடு கடத்த அரசாங்கம் தீர்மானிக்கவில்லை.

எனினும் தற்போதைய சட்டங்களின் அடிப்படையில் குமார் குணரட்னத்தை விடுதலை செய்வதில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

இந்தப் பிரச்சினை குறித்து அரசாங்கம் ஏற்கனவே கவனம் செலுத்தி வருகின்றது என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை விசா முடிவடைந்தும் இலங்கையில் தங்கியிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னிலை சோசலிசக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் குமார் குணரட்னம் இரட்டை பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கலாம் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வடமேற்கு அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. நாவின்ன இதனை தெரிவித்துள்ளார்.

குமார் குணரட்னத்தை பொறுத்தவரை அவர் இலங்கையில் இருந்து இலங்கை பிரஜாவுரிமையை கோரமுடியாது. எனினும் அவுஸ்திரேலியாவுக்கு திரும்பி அங்கிருந்து அதனை விண்ணப்பிக்கலாம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதுவரை இலங்கையில் 4 ஆயிரம் பேர் வரை இரட்டை பிரஜாவுரிமையை பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7-10)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2015-16.12.2015 வரை

## உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டும் நேரம்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**அனுபவ அறிவால் அனைவருக்கும் ஆலோசனை கூறும் அசகாய சூரர்களான மிதுனராசி நேயர்களே!**




கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள்ராசி நாதன் வலிமை இழந்திருந்தாலும் 9 நாடகள் கழித்துபலம் பெறு கிறார். எனவே மாதம் பிறந்ததும், விரயங்களை நீங்கள் சந் தித்தாலும் இரண்டாவது வாரத் திலிருந்து இனிய பலன்கள் ஒவ்வொன்றாக வந்துசேரும்.

குறிப்பாக ஆரோக்கியத் தொல்லை அகலும். அச்சுறுத் தும் நோய்கள் விலகும். சீராகச் செயற்பட்டு வெற்றிகளைக் குவிக்கத்திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருப்பர். சுகஸ்தானத்தில் செவ் வாயோடு சுக்ரன் ராகு இணைந் திருப்பதால் மனைவி, மக்கள் வழியில் விரயங்கள் உருவாக லாம். குறிப்பாக நகைகள் வாங்குவதும், நாட்பட்ட மின்சாதனப் பொருட்களைக் கொடுத்து விட்டுப் புதிய பொருட்களாக மாற்றுவதி லும் ஆர்வம் காட்டுவீர்கள்.

வாங்கிய வீட்டை அதிக விலைக்கு கேட்பதை முன்னிட்டு அதை விற்று விட்டுப் புதியவீடு வாங்கும் முயற்சியில் ஒரு சிலருக்கு வாய்ப் புகள் கைகூடிவரும். உங்கள் ராசியைப் பொறுத்த வரை, வீட்டின் அமைப்பு மற்றும் வாஸ்து பார்த்து வாங்குவதே முன்னேற்றத்திற்கு வித்திடும். பூமிகாரகன் செவ்வாய் 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிப தியாக இருப்பதால் ஒரு சிலர் வாங்கிய வீட்டை விற்கும் சூழ்நிலை உருவாகும். எனவே நிலை வைத் துக் கட்டிய வீடுநிலையாக உங்களிடம் தங்க வேண்டுமானால், விலை கொடுத்து வாங்கிய வீடு வியாபார விருத்திக்கு வித்திட வேண்டுமானால், அதன்வாயில் அமைப்பும், சூரிய ஒளிபாயும் அமைப்பும், உங்களுக்கு ஏற்ற விதத்தில் இருக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக குடும்ப உறுப்பினர்களின் ஜாதகத்தில் செவ்வாய் பலம் யார் ஜாதகத்தில் உள்ளதோ, அவருடைய பெயரில் சொத்துக்கள் வாங்குவதே நல்லது. புத ஆதித்ய யோகம் இருப்பதால் சமூக நலனில் அக்கறை காட்டு பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக் கும். கந்தசஷ்டி திருநாளில் விரதமிருந்து முருகப் பெருமானை வழிபடுவது நல்லது. திருக்கார்த்திகைத் திருநாளில் மலைவலம் வருவதும் நல்லது. டிசெம்பர் 3ஆம் திகதி வரும் கால பைரவ அஷ்டமியில் வைரவர் வழிபாட்டை மேற்கொண்டு வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளுங்கள்.

**திருமண முயற்சி கை கூடும்நேரம!**

நவம்பர் 30ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரன் சஞ்சரிக் கப் போகின்றார். இது வரை நீச்சம் பெற்ற சுக் ரன் இப்பொழுது பலம் பெற்று சொந்த வீட்டில் சஞ்சரிக்கி றார். இதன் விளைவாக பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்கும் சூழ்நிலை உருவாகும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். பாகப் பிரிவினையில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பங்கு திருப்தி யாக கிடை க்கும். கடனில் ஒருபகுதியை கொடுத்து மகிழ் வீர்கள். திருமணம் மட்டு மல்லாமல் சீமந்தம், கிரகப்பிரவேசம் போன்றவைகளும் நடைபெறக் கூடிய அமைப்பு உண்டு.

**சப்தமபுதனின்சஞ்சாரம்!**

பலம்பெற்றபுதன், டிசெம்பர் முதல் திகதியில் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். புதன்தன் வீட்டைத் தானே பார்ப்பதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அண்டை மாநில வேலைகளுக்கு ஏற்பாடு செய்திருந்தாலும், அந்நிய தேசம் செல்ல முயற்சி செய்திருந்தாலும் அது கை கூடும். சுகாதிபதியாகவும், புதன் விளங்குவதால் அதன பார்வை பலத்தால் ஆரோக்கியத் தொல்லை அகலும். பழைய வாக னங்கள் பழுதாகிப் பழுதாகிச் செலவுகள் அதிகம் வருகிறதே, புதியவாகனம் வாங்கலாமா? என்று சிந்திக் கும் நேரமிது. அது மட்டுமல்ல உடனடியாக அது செயற்படவும் வழி பிறக்கும். சொந்தங்களின் ஆதரவு பெருகும். சனியும்பலம் பெறுமாதத்தின்பிற்பகுதியில்உலா வரு கிறார். எட்டுக்கு அதிபதி சனிஆறில்பலம் பெறும் பொழுது 'கெட்டவன் கெட்டிடில்கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கிணங்க எதிர்பாராத விதத்தில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். கந்தப் பெருமான் வழிபாடும், கண் ண பிரான் வழிபாடும் சிந்தனை ஆற்றலையும், செல்வத்தையும் கொடுக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

வசதி வாய்ப்புகள் பெருகும் மாத மாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வாரிசுகளால் ஏற்பட்ட தொல்லை அகலும். உடன் பிறந்த வர்கள் உங்கள் குமுறும் நெஞ்சத்திற்கு அமைதியை வழங்குவர். குழந்தைகளின் எண் ணங்களைப் புரிந்துகொண்டு செயற்படுவர். கணவன் மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிக ரிக்கும்.

தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. மாதத்தின்பிற்பகுதியில் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். திருமால் வழிபாடும், திருமுருகன் வழிபாடும் தித் திக் கும் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

---

## கல்யாண வாய்ப்புகள் கைகூடும் நேரமிது!



**வழி தெரியாமல் தத்தளிப்பவர்களுக்கு கலங்கரை விளக்கமாக காட்சியளிக்கும் கடகராசி நேயர்களே!**




கார்த்திகை மாதக்கிரக நிலை ஆராய்ந்து பார்க்கும்போது உங்கள்ராசிநாதன் சந்திரன் உங்கள் ராசியைப் பார்க்கிறார். 2ம் இடத்திலேயே குரு வீற்றிருந்து அதன் பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் செலுத்துகிறார். இதன் விளைவாக ஆளுமைத்திறன் அதிகரிக்கும். கொடி கட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக சரியாகும். விலகிச்சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்.

வழக்குகள் சாதகமாக முடியும். இரண்டு, மூன்று மாதங்களாக ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட வழிபிறக்கும். உழைப் பிற்கேற்ற பலன் கிடைக்கவில் லையே என்ற ஆதங்கம் இனி தீரப் போகின்றது. கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். கூர்ந்து கவனித்துச் செயற்படும் நீங்கள் ஆழ்ந்த புலமை பெற்றவராக இருந்தாலும், அதிக திறமை பெற்றவராக இருந்தாலும் ஒருசில சமயங்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

நட்பால் உங்களுக்கு நல்ல காரியமும்நடைபெறும். வில்லங்கமும் வந்துசேரும். என்ன இருந்தாலும் கலியுகத்திற்கு கடகராசி என்பது பழமொழி. தைரியமும், தன்னம்பிக்கையும், தளராத முயற்சியும், தந்திரமும்மிக்க உங்களுக்கு ஒரு வழி அடைபட்டால் மற்றொரு வழி திறந்து கொள்ளும். எனவேதான், நீங்கள் எதற்கும் கவலைப்படமாட்டீர்கள். தாக்குதல்கள் வரும் பொழுது கூட, 'வந்தாலும் வரட்டும் பார்த்துக் கொள்ளலாம்' என்று வாயில் படியிலேயே எதிர்கொண்டு நிற்பீர்கள்.

சூரியனும், புதனும் இணைந்து பஞ்சமஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் போரிடும் குணம்மாறும். பொல்லாதவர்களைக் கூட அனுசரிக்கும் குணம் உருவாகும். தள்ளிப்போய்க் கொண்டிருந்த கல்யாணம் முடியும். மறுக்கப்பட்ட சம்பள உயர்வும், பதவி உயர்வும் மகிழ்ச்சியோடு வந்து சேரும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். விரயாதிபதி புதன் வலிமையடையும் நேரமான நவம்பர் 26ஆம் திகதிக்கு மேல் விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்து வீர்கள்.

பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள் எதிர்பார்த்த படியே நடைபெறும். தொழிலில் மேலும் முதலீடு செய்துவிரிவுபடுத்த கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். கந்தசஷ்டியன்று முருகப் பெருமானையும், சங்காபிஷேக நாட்களில் சோமவார விரதமிருந்து சிவபெரு மானையும், திருக்கார்த்திகையன்று தீப ஒளியையும் தரிசித்து வாருங்கள். வருவதெல்லாம் நலமாக அமையும்.

**துலாம் ராசியில் சுக்ரனின் சஞ்சாரம்!**

இதுவரை கன்னிராசியில் நீச்சம் பெற்று சஞ்சரித்து வந்த சுக்ரன் இப்பொழுதுதுலா த்தில் ஆட்சி பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பயணங்களால் இடையூறுகள் உருவாகலாம். பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்சினை அதிகரிக்கும். இரத்த அழுத்தம், எலும்பு, நரம்பு, சம்பந்தப்பட்ட பாதிப்புகள் உருவாகி இடையூறுகளை கொடுத்துக் கொண்டே இருக்கும். குடும்பச் சுமைகூடும். ஒருவரை திருப்திபடுத்த போய் மற்றொரு வரின அதிருப்திக்கு ஆளாகலாம். வீடு மாறறங்கள் இயல்பாக வந்து சேரும்.

**புதன் பெயர்ச்சியாகும் பொன்னான நேரம்!**

டிசெம்பர் முதல் திகதி தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். 12ஆம் இடத்திற்கும், 3ஆம் இடத்திற்கும் அதிபதியான புதன் 6ல் சஞ்சரிப்பது யோகம் தான். விபரீதராஜயோக அடிப்படையில் எதிர்பாராத சில நல்ல காரியங்கள் நடைபெறப் போகின்றன. இதுவரை பகைபாராட்டிய உடன்பிறப்புகள் இப்பொழுது நட்பு பாராட்டி நாடிவருவர். தகராறுகள் தானாக விலகும்.

உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவோடு மிகச் சிறந்த பலன்களைக் காணப் போகிறீர்கள். ஊதிய உயர்வும், பதவி உயர்வும் உங்களைத் தேடி வரப் போகின்றது. வழக்குகள் சாதகமாக முடியும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். ஒரு சிலர் வேலையில் வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு விருப்பத் திற்கேற்ற தொழில் செய்ய முன் வருவர். இம்மாதம் ஆறுமுகப் பெருமான் வழிபாடு ஆனந்த மளிக்கும்.

இம்மாதம் சகல யோகத்தோடு பிறக்கும் மாதம் என்பதால் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தி யாகும்.

பூமிசேர்க்கையும், பொருட் சேர்க்கையும் அதிகரிக்கும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள், பிள்ளைகளின் வேலை வாய்ப்புகள் போன்ற நிகழ்வுகள் ஏற்பட்டு மகிழ்ச்சியை வழங்கும். கணவன், மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குடும்ப உறுப்பினர்களும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். 2ல் குரு இருப்பதால் நட்பு வட்டம் விரியும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள்கூட கிடைக்கலாம். மதி நிறைந்த நன்னாளில் மலை வலம் வந்து மால்மருகனை வழி படுவது நல்லது.

(தொடரும்)

# பாரீஸில் பெண் தீவிரவாதியின் வெடிகுண்டில் உடல் சிதறி பலியான சுப்பஹீரோ மோப்பநாய்

## எங்களில் ஒருவரை இழந்தது போன்றிருந்தது – படையினர்





பிரான்ஸில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கில் சூட்டில் பொலிஸ் படையினரின் மோப்பநாய் ‘சுப்பர் ஹீரோ’ டீசல் உயிர் தியாகம் செய்துள்ளது.

129 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்ட பாரீஸ் தாக்குதலுக்கு மூளையாக இருந்து தாக்குதலை செயற்படுத்திய அப்துல் ஹமீது அபாவுத் உள்ளிட்ட தீவிரவாதிகள், பாரீஸ் நகரின் புறநகரான செயிண்ட் டெனிஸ் என்ற இடத்தில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றில் பதுங்கி இருப்பதாக பிரான்ஸ் தீவிரவாத தடுப்பு பொலிஸாருக்கு உளவு தகவல் கிடைத்தது. உளவு தகவலை தொடர்ந்து, பல லொறிகளில் ஆயுதம் தாங்கிய தீவிரவாத தடுப்பு பொலிஸ் படையினரும், இராணுவ வீரர்களும் அங்கு நேற்று முன்தினம் விரைந்தனர். தீவிரவாதிகள் இருந்த வீட்டை பொலிஸ் படை சுற்றிவளைத்தது.

அப்போது பாதுகாப்பு படைக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே பல மணி நேரம் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. துப்பாக்கி சண்டையில் ஒருபெண் உட்பட 2 பேர் பலியாகினர். 7 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

பாதுகாப்பு படை மற்றும் தீவிரவாதிகள் இடையே குடியிருப்பில் கடும் துப்பாக்கி சண்டை நடைபெற்ற போது பொலிஸ் படைக்கு பக்கபலமாக நின்றுசெயற்பட்ட பொலிஸ் மோப்ப நாயான ‘சுப்பர் ஹீரோ’ டீசலை குறிவைத்து தீவிரவாதிகள் சுட்டுள்ளனர். இதனையடுத்து மூன்றாவது தளத்தில் பெண்தீவிரவாதி தற்கொலை வெடிகுண்டை வெடிக்கசெய்ததும், குடியிருப்பின் மூன்றாவது கட்டடம் சிதையுண்டது. ‘சுப்பர் ஹீரோ’ டீசலும் உடல்சிதறி பலியாகியது. பிரான்ஸ் ஜிகாதிகள் நடத்திய தாக்குதலில் உயிர்தியாகம் செய்த டீசலுக்கு பல்வேறு தரப்பினர் அஞ்சலி செலுத்திவருகின்றனர். தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலுக்கு உறுதுணையாக நின்ற 7வயது பெண் நாயான டீசலுக்கு உலகம் முழுவதும் உள்ள நாய்களும் அஞ்சலியை செலுத்தி வருகின்றன.

நாய்களின் உரிமையாளர்கள், அஞ்சலி தெரிவிக்கும் விதமான வாசகங்கள் எழுதிய அட்டையை தங்களது செல்ல நாய்களின் கழுத்தில் தொங்கவிட்டுள்ளனர்.

பிரான்ஸ் தீவிரவாதப்படையில் சிறப்பாக பணியாற்றி பல்வேறு பதக்கங்களை தனதாக்கிய டீசல், தீவிரவாதிகள் தாக்குதலில் உயிரிழந்தது, ராணுவம், பொலிஸ் படை மட்டுமன்றி பொதுமக்களையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மக்களை காப்பாற்ற தனது உயிரை நீத்த டீசலுக்கு பொது மக்களும் அஞ்சலி செலுத்திவருகின்றனர். பெண் தீவிரவாதி வெடிகுண்டை வெடிக்கச்செய்ததும் டீசல் உடல் சிதறியது என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர் கண்ணீர் மல்க தெரிவித்து உள்ளார். “எங்களில் ஒருவரை இழந்தது போன்று உணர்கிறோம்,” என்று பாதுகாப்பு படையை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். (3-7)

## விண்வெளியில் முதல்முறையாக பூச்செடிகளை வளர்க்கிறது நாசா

விண்வெளி மையத்தில் உள்ள ஆய்வுக் கூடத்தில் முதல் முறையாக பூச்செடிகளை வைத்து வளர்த்து வருகிறது நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம். இந்த பூச்செடிகள அழகாக வளர்ந்து வருவதாகவும், இது எதிர்வரும் ஜனவரி மாதத்தில் பூக்கள் பூக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்த முயற்சி வெற்றி பெற்றதை அடுத்து, எதிர்வரும் 2017ம் ஆண்டு விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் தக்காளிச் செடியை நட்டு பரிசோதனை செய்யவும் நாசா திட்டமிட்டுள்ளது.

ஜின்னா எனப்படும் பூச்செடிகளின் விதைகளை நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் நட்டு, அது செடியாக வளர்ந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இதற்கு செயற்கை வெப்பம் மற்றும் தண்ணீர் ஊற்றப்படுகிறது.



# தென்சீனக்கடலில் கட்டுமானப்பணியை சீனா உடனடியாக நிறுத்த வேண்டும்

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மீண்டும் வலியுறுத்து

(வோஷிங்டன்)

**தென் சீனக்கடலில் சீனா அமைத்துவரும் செயற்கைதீவு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.**



தெற்கு சீன கடற்பகுதியில் அந்நாடு அமைத்துவரும் செயற்கை த்வு அருகே அமெரிக்காவின் போர்க் கப்பல் ரோந்து செல்வது தொடர்பாக அமெரிக்கவிற்கும் சீனாவிற்கும் கருத்து வேறுபாடுகள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

சில வாரங்களுக்கு முன்பு யு.எஸ். எஸ்.லாசன் என்ற போர்க்கப்பல் ஸ்பார்ட்லி தீவு அருகே ரோந்து சென்றது. அந்தப் பகுதி சீனாவுக்கு உட்பட்ட பகுதி இல்லை என்றாலும் அது சீனாவால் அமைக்கப்பட்ட செயற்கை தீவு அந்த பகுதியில் உள்ளது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை சீனா கடுமையாக கண்டித்ததுடன், தொடர்ந்து அத்துமீறலில் ஈடுபட்டால் போர் ஏற்படலாம் என்றும் எச்சரித்தது. தென் சீன கடல் பகுதியில் அமெரிக்க போர்க்கப்பல்கள் ரோந்து செல்வது எந்த நாட்டையும் அச்சுறுத்துவதற்கு அல்ல. இந்த நடவடிக்கையானது, சர்வதேச கடல்பகுதி மற்றும் வான்பகுதியை அனைத்து நாடுகளும் பயன்படுத்துவதற்கான உரிமையை நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளப்படுகிறது என்று அமெரிக்க கூறிவருகிறது.

இந்நிலையில் பசுபிக் பிராந்தியத்தில் தலைவர்களுடனான வர்த்தகம் மற்றும் காலநிலை மாற்றம் பற்றி உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள பிலிப்பைன்ஸ் சென்றுள்ள ஒபாமா அங்கு செய்தியாளர்களிடம் பேசியபோது “தெற்கு சீன கடற்பகுதியில் நிலவும் பதற்றத்தை குறைக்க உறுதியான நடவடிக்கை எடுப்பது அவசியம். இதற்கு தென் சீன கடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணி மற்றும் இராணுவமயமாக்க நடவடிக்கைகளை சீனா உடனே நிறுத்த வேண்டும்” என கூறியுள்ளார்.

இந்த விவகாரம் பற்றி அமெரிக்க ஜனாதிபதி நேரடியாக கருத்து கூறியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (3-7)

## சிரிய அகதிகளை ஏற்க மறுத்த அறிவிப்பையடுத்து

# அமெரிக்காவில் இன வெறுப்பு தாக்குதல்கள்; சூறையாடப்பட்ட பள்ளிவாசல்கள்

(பாரீஸ்)

பிரான்ஸின் பாரீஸ் நகரில் இடம்பெற்ற தாக்குதல்களையடுத்து அமெரிக்க மாநிலங்கள் பலவற்றில் முஸ்லிம்களை இலக்கு வைத்து இன வெறுப்புத் தாக்குதல்கள் பல நடத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அங்கு அநேக பள்ளிவாசல்கள் சூறையாடப்பட்டுள்ளதுடன், முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களும் நடத்தப்பட்டுள் ளன.

அமெரிக்க மாநிலங்கள் பலவற்றின் ஆளுநர்கள் தமது மாநிலங்களில் சிரிய அகதிகளை ஏற்றுக் கொள்ள முடியாது என அறிவித்ததையடுத்தே இந்த தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பில் அமெரிக்க இஸ்லாமிய உறவுகள் சபை கூறுகையில்,

மசாசுசெட்ஸ், புளோரிடா, டெக்ஸாஸ், கென்துக்கி, வேர்ஜினியா, நெப்ராஸ்கா, தென்னஸி, ஒஹியோ, நியூயோர்க் மற்றும் ஏனைய மாநிலங்களில் இடம் பெற்ற இன வெறுப்புத் தாக்குதல்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

நெப்ராஸ்கா மாநிலத்தில் ஒமஹா எனும் இடத்திலுள்ள இஸ்லாமிய நிலையத்தின் சுவரில் பாரீஸ் தாக்குதலைக் குறிக்கும் வகையில் ஈபிள் கோபுரத்தின் ஓவியம் வரை யப்பட்டிருந்ததுடன் டெக்ஸாஸி லுள்ள பள்ளிவாசல் கதவருகே கழிவுகள் வீசப்பட்டிருந்ததாக தெரி விக்கப்படுகிறது.

அதுமட்டுமல்லாது, புளோரிடா மாநிலத்தில் முஸ்லிம் குடும்பமொன்று வசித்து வந்த வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

அமெரிக்க மாநிலங்களைச் சேர்ந்த 26 வலதுசாரி குடியரசுக் கட்சி ஆளுநர்களும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஒரு ஆளுநரும் சிரிய அகதிகளின் வருகைக்கு முட்டுக் கட்டை போடவுள்ளதாக அறிவித்திருந்தனர். (3-7)

# பிலிப்பைன்ஸ் காலநிலை உச்சி மாநாட்டில் ஒபாமா




வர்த்தகம் மற்றும் காலநிலை மாற்றம் பற்றிய உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு பிலிப்பைன்ஸ் சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அங்கு உரையாற்றினார். இதன்போது சீனா தனது இராணுவ மயமாக்கல் நடவடிக்கையை உடன் நிறுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

# துருக்கி விமான நிலையத்தில் எட்டு அகதிகள் திடீர் கைது

துருக்கியின் இஸ்தான்புல் விமான நிலையத்தில் 8 அகதிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்கள் ஐ.எஸ். அமைப்பை சேர்ந்தவர்களா என்று விசாரணை நடைபெற்று வருகிறது.

பாரீஸ் நகரில் நடைபெற்ற தாக்குதலையடுத்து ஐரோப்பா முழுவதும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனிடையே ஐரோப்பா முழுவதும் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஐ.எஸ். தீவிரவாதிகள் அகதிகள் வேடத்தில் உள்ளனர் என்றும் ஐரோப்பாவுக்குள் அகதிகள் என்ற பெயரில் செல்வது எளிது என்றும் ஐ.எஸ். அமைப்பினர் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து ஐரோப்பாவுக்கு செல்லும் அகதிகளிடம் பலத்த சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் துருக்கியின் இஸ்தான்புல் விமான நிலையத்தில் ஐ.எஸ். அமைப்பினராக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களில் ஒருவரிடம் கிரீஸ், சேர்பியா, ஹங்கேரி வழியாக ஜேர்மனி செல்வதற்கான வரைபடம் இருந்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதனிடையே ஐ.எஸ். தீவிரவாதிகள் அகதிகள் வேடத்தில் ஜேர்மனி நாட்டிற்குள் செல்ல திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

# பாரீஸ் தாக்குதலையடுத்து சிரியா மீதான தாக்குதல் நிறுத்தம் தொடர்பில் மீளாய்வு

## கனேடிய பிரதமர் அறிவிப்பு

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக கனடாவால் மேற்கொள்ளப்பட்டு வரும் வான் தாக்குதல்களை முடிவுக்கு கொண்டு வரவுள்ளதாக சூளுரைத்திருந்த கனேடிய பிரதமர் ஜஸ்டின் திருடியு, பாரிஸில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல்களையடுத்து அது தொடர்பில் மீள் பரிசீலனை செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சிரிய தரைப் படையினருக்கு கனேடிய படையினரால் பயிற்சி வழங்குவதில் தீவிர கவனம் செலுத்த அவர் உறுதியளித்துள்ளார்.

முன்னரங்கு படையினருக்கு பயிற்சியளிப்பதில் நாம் மேலதிக நடவடிக்கையை முன்னெடுப்போம் என்பதை எனது நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் கூறியுள்ளார்.

கனடா ஏற்கனவே குர்திஷ் பெஷ்மெர்கா படையினருக்கு பயிற்சியளிப்பதில் 69 இராணுவப் பயிற்சியாளர்களை ஈடுபடுத்தியுள்ளது.

எனினும் ஜஸ்டின், புதிய இராணுவப் பயிற்சி எவற்றை உள்ளடக்கியுள்ளது என்பது தொடர்பில் தகவல் எதனையும் வெளியிடவில்லை. (3-7)

# மலேசியா, சிங்கப்பூர் செல்கிறார் பிரதமர் நரேந்திர மோடி

(புதுடில்லி)

ஆசியான் மற்றும் கிழக்கு ஆசிய கூட்டமைப்பு கூட்டங்களில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செயலர் அனீல் வத்வா செய்தியாளர்களிடம் கூறுகையில், மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆசியான் கூட்டமைப்பு நாடுகளின் கூட்டமும், கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமும் நடைபெறுகிறது. இதில் பங்கேற்பதற்காக இந்திய பிரமதர் நரேந்திர மோடி, எதிர்வரும் 21 ஆம் திகதி கோலாலம்பூர் செல்கிறார்.

இதைத் தொடர்ந்து இம்மாதம் 23 ஆம் திகதி சிங்கப்பூர் செல்லும் பிரதமர் மோடி, அந்நாட்டு பிரதமர் லீ செய்ன் லூங்கை, சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சு நடத்தவுள்ளார். 24 ஆம் திகதி இரவு புதுடில்லி திரும்புகிறார் என தெரிவித்துள்ளார். (3-7)

# சவுதியில் 2 பொலிஸார் சுட்டுக்கொலை

சவுதி அரேபியாவில் நேற்று அதிகாலை பொலிஸ் வாகனம் ஒன்று துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானபோது அதில் இருந்த இரண்டு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சவுதி அரேபியாவின் கிழக்குப் பகுதி மாகாணமான, கட்டிஃபில் நடந்த இந்தத் தாக்குதலை யார் நடத்தியது என்பது இன்னும் தெளிவாகவில்லை.

ஆனால் இப்பகுதியில், பாதுகாப்புப் படையினருக்கும் சிறுபான்மை ஷியா முஸ்லிம் பிரிவினருக்கும் இடையே நீண்டகாலமாக பதற்றநிலை காணப்பட்டு வந்தது. ஷியா பிரிவினர் தாங்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதாகக் குற்றம்சாட்டி வருகின்றனர். இந்தப் பகுதியில் 2011ல் நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களோடு தொடர்புடைய சந்தேக நபர்களைப் பொலிஸார் தற்போது தேடிவருகின்றனர். (3-7)

# ரஷ்ய விமானத்திற்கான குண்டு அன்னாசிப்பழச்சாறு போத்தலில்

## ரஷ்ய விமான விபத்து குறித்து ஐ.எஸ். இதழில் தகவல் வெளியீடு




EXCLUSIVE - Image of the IED used to bring down the

(மொஸ்கோ)

ரஷ்ய விமானத்தை வீழ்த்தியது எப்படி என்ற தகவல்கள் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் இதழ் ஒன்றில் வெளியாகியுள்ளது.

கடந்த 31ஆம் திகதி எகிப்து நாட்டின் ஷரம்எல்ஷேக் நகரில் இருந்து ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்கு 217 பயணிகள் மற்றும் 7 ஊழியர்களுடன் புறப்பட்ட ஏர்பஸ் ஏ-321 ரக விமானம் ஒன்று, புறப்பட்ட சில நிமிடங்களிலேயே சினாய் தீபகற்ப பகுதியில் விழுந்து நொறுங்கியதில் அந்த விமானத்தில் இருந்த 224 பேரும் உயிரிழந்தனர்.

இந்த விமானத்தை நாங்கள் தான் சுட்டுவீழ்த்தினோம் என்று ஐ.எஸ் தீவிரவாதிகள் கூறிவந்த நிலையில், ஆரம்பத்தில் இதனை ரஷ்யா மறுத்தது.

இந்நிலையில், சில நாட்களுக்கு முன்னர், வெடிகுண்டு தாக்குதல் மூலம் விமான விபத்து நிகழ்ந்துள்ளது என்று ரஷ்ய அரசு அறிவித்தது.

இந்நிலையில், ரஷ்ய விமானத்தை எவ்வாறு வீழ்த்தினோம் என்பது குறித்து ஐ.எஸ் இதழ் ஒன்றில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதில், விமான நிலையத்தில் இருந்த பாதுகாப்பு குறைபாடுகளை பயன்ப்டுத்தி, அன்னாசிப் பழச்சாறு போத்தலில் வெடிகுண்டுகளை மறைத்துவைத்து எடுத்துக் கொண்டு சென்று வெடிக்கவைத்ததாக கூறப்பட்டுள்ளது.

மேலும், இதற்கு ஆதாரமான புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளன. (3-7)

# ரத்தத்தால் எழுதப்பட்டிருக்கிறது ஈழம் என்கிற தேசத்தின் பெயர்



பார்ஸ் பயங்கரத்தைக் குறிப்பிடும்போது, அநேகமாக எல்லா ஊடகங்களுமே, SOFT TARGET என்கிற வார்த்தையைப் பயன் படுத்துகின்றன.

ஒற்றைக்கையால் நூறு பேரை அடித்துத் துவைக்கிற தமிழ்த் திரைப்படக் கதாநாயகனை வழிக்குக் கொண்டுவர, அவனது குழந்தையைக் கடத்துகிற வில் லனை எத்தனையோ படங்களில் பார்த்திருக்கிற நமக்கு SOFT TARGET என்கிற வார்த்தை புதிதல்ல! அதுதான் இது!

பிரான்ஸ் படுகொலைகளைத் தொடர்ந்து, வில்லன் யார், கதாநாயகன் யார் என்றெல்லாம் அக்பர் ரோடு அகதிகள் முதல் ஆசம்கான்கள் வரை ஆளாளுக்குப் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும், தமிழகத்திலிருந்து ஒலிக்கிற ஒரு குரல், மானுடத்தை நேசிக்கிற தமிழர்களின் கவனத்தை ஈர்ப்பதாக இருக்கிறது.அது, மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லாவின் குரல்.

"பாரீஸில் நடந்திருப்பது காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதத் தாக்குதல். எந்த வகையிலும் அதை நியாயப்படுத்த முடியாது. அப்பாவி மக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம். ஐ.எஸ். இயக்கம் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அப்பாவி ஒருவனைக் கொல்வது ஒட்டுமொத்த சமுதாயத்தையும் கொல்வதற்குச் சமமானது என்கிற திருக்குர்ஆன் வாசகத்தை ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்கிறார் ஜவாஹிருல்லா.

இங்கிருந்து 26வது மைலில் அப்பாவித் தமிழ்மக்களை சிங்கள இராணுவம் விரட்டி விரட்டிக் கொன்றபோது, அந்தக் காட்டுமிராண்டித்தனத்தை உண்மையாகவும் வன்மையாகவும் கண்டித்தவர்கள் மனித நேயக் கட்சியினரும் முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினரும்!

ஈழத்தில், சிங்கள இராணுவதின் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இரையானவர்களில் பெரும்பாலானவர்கள் இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள். வாய்கிழியப் பேசுவதை வழக்கமாக வைத்திருக்கிற ராம,கோபாலன்களும் ஹெச்.ராஜாக்களும் அந்த மக்களுக்காகப் பேச மறுத்தபோது,

எம் உறவுகளுக்காகக் குரல் கொடுத்தவர்கள் ஜவாஹிருல்லாக்களும் தமீமுன் அன்சாரிகளும்! அந்த அடிப்படையில், எந்த பயங்கரவாதத் தாக்குதல் குறித்தும் கருத்து சொல்வதற்கான சகல தகுதியும் இருக்கிறது, பேராசிரியர் ஜவாஹிருல்லாவுக்கு!

தன் நாட்டின் அப்பாவிக் குடிமக்களையே விமானத்திலிருந்து குண்டுவீசிக் கொன்று குவித்த இலங்கைக்கும், அப்படிக் கொல்ல சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்து இழிவான வரலாற்றைப் படைத்த இந்தியாவுக்கும் பாரீஸ் சம்பவம் குறித்துக் கருத்து சொல் வதற்கான தகுதி. 000000 001 சதவிகிதம் கூட கிடையாது.

வைத்தியசாலைகள் மீது குண்டுவசி நோயாளிகளையும், பள்ளிக்கூடங்களைத் தாக்கி மழ லைகளையும், தேவாலயங்கள்-கோயில்களைத் தாக்கி பக்தர்களையும் கொன்று குவித்த காட்டு மிராண்டிகள் இவர்கள்.

அந்தக் கொடூரமான தாக்குதலிலிருந்து எமது குழந்தைச் செல்வங்களைக் காப்பாற்ற, ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் அருகிலும் பதுங்கு குழிகளை அமைத்த வீரர்கள், தமிழர் தாயகத்தின் மாவீரர்கள்.

அந்த இனப்படுகொலைக்கு உத்தரவிட்ட கையோடு, தமது பாதுகாப்புக்காக கொழும்பு நகரின் நட்ட நடுவில் சொகுசுப் பதுங்குகுழி அமைத்துக் கொண்டிருந்த கோழைகள், கோத்தபாயவும் மகிந்த ராஜபக்ஷவும்! அந்தக் கோழைகளைத் தான் நடுவீட்டில் வைத்துக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது எமது இந்தியா.

பாரீஸ் சம்பவம் பற்றி வாயைத் திறக்க தகுதியே இல்லாத இலங்கை, சாவுவீடு என்கிற வெட்கம் கூட இல்லாமல், "பந்தலிலே பாகற்காய், தொங்குதடி பார்த்துக்கோ" என்கிற சுயநல ஒப்பாரியை உடனடியாகத் தொடங்கிவிட்டது.

ஒன்றரை லட்சம் தமிழரின் ரத்தம் வாயோரம் வழிந்துகொண் டேயிருக்க, அதைப் பற்றிக் கவலையே படாமல், உலகுக்கே போதிக்க ஆரம்பித்துவிட்டார்கள் அந்த பௌத்தப் துறவிகள். பாரீஸ் பயங்கரத்தைக் காட்டிலும் பயங்கரமானது இவர்களது போதனை.

தலைகீழாகக் குத்துக்கரணம் அடிப்பது, பௌத்த சிங்கள அரசியல்வாதிகளுக்குக் கைவந்த கலை. (கூட்டமைப்பே அவர்களிடமிருந்து தான்கற்றுக்கொண்டிருக்கிறது இதை!) அதிலும் பழம் தின்று கொட்டை போட்டவர், மகிந்த ராஜபக்ஷ அரசிலும் அமைச்சராக இருந்து, ரணில் - மைத்திரி அரசி லும் அமைச்சராக இருக்கிற நிமால் சிறிபால டி சில்வா என்கிற மகானுபாவர்.

இந்த சில்வா தான், பாரீஸ் சம்பவத்தை அடுத்து ஒட்டுமொத்த உலக நாடுகளுக்கும் வகுப்பெடுக்கத் தொடங்கியிருக்கிறார்.

"பயங்கரவாதத்தைத் தடுக்க முடியாமல் தடுமாறி வருகிற பிரான்ஸ் - அமெரிக்கா - பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள், பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்துவிட்ட இலங்கையிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படியொரு சாதனையைச் செய்த இலங்கை அரசுக்கு, அந்த நாடுகள் மாலையிட்டு மண்டியிட்டு மரியாதை செலுத்தவேண்டும்" என்கிற சில்வாவின் போதனை, சர்வதேசத்துக்கும் சர்வ நிச்சயமாக எரிச்சலை ஏற்படுத்தியிருக்கும்.

போகிற போக்கில் உலக நாடுகளின் முகத்தில் ஓங்கி மிதித்திருக்கிறார சில்வா. உளறுவதென்று முடிவு செய்துவிட்ட பிறகு, அதற்கு வரையறை ஏதாவது இருக்கிறதா என்ன?

கொஞ்சம்விட்டால், இந்த விடயத்தில் ஸ்ரீமான் சுவாமியையே மிஞ்சி விடுவார் போலிருக்கிறது சில்வா! விடுதலைப் புலிகளுடனான மோதலின் போது, சிறுபான்மையினருக்கு எதி ராகச் செயற்படக் கூடாது என்று இலங்கைக்குப் போதித்தவர்கள்தான், இப்போது பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறா ர்கள் - என்பது உளறுவாயர் சில்வாவின் மேலான கருத்து.

இலங்கையில் நல்லாட்சியா நடத்தச் சொல்கிறீர்கள்? நல்லிணக்கத்தையா வலியுறுத்துகிறீர்கள்? வெளிநாட்டு நீதிபதியை வைத்தா விசாரிக்கச் சொல்கிறீர்கள்? - இவ்வளவு கேள்வியும் இருக்கிறது சில்வாவின் அறிக்கையில்!

வைகோ - ஜவாஹிருல்லா முதல், ஈழத் தமிழர் மக்களவை - நாடு கடந்த தமிழீழ அரசு வ்ரை, ஒட்டு மொத்த உலகத் தமிழினமும் ஒருமித்த குரலில் பாரீஸ் சம்பவத்தைக் கண்டிக்கிறோம்.

சொந்த அரசியலைத் திணிக்காமல், பிரெஞ்சு மக்களின் துயரிலும் கண்ணீரிலும் எந்த உள்நோக்கமும் இல்லாமல் பங்கேற்கிறோம். இலங்கையோ, இப்படியொரு துயரச சூழலிலும், தன்னுடைய அருவருப்பு அரசியல் மூலம் தான் யார் என்பதை அம்பலப்படுத்துகிறது.

மகிந்த ராஜபக்ஸவின் ஊது குழலான சில்வா மட்டுமில்லை, பௌத்த சிங்கள ஊதுகுழல்கள் அனைத்தும், பாரீஸ் சம்பவத்தைப் பயன்படுத்தி, இலங்கை அரசுக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையைக் குழிதோண்டிப் புதைக்க முயலுகின்றன.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் என்ன நடந்தது என்பதையெல்லாம் தோண்டித் துருவிப் பார்க்கக் கூடாது என்பது அவர்களது வாதம். அப்படிப் பார்த்தால் எப்படி பயங்கரவாதத்தை முறியடிகக முடியும்- என்பது அவர்களது கேள்வி.

மைத்திரி - ரணிலின் பின்னணி இல்லாமலா இதெல்லாம் நடக்கிறது என்று நினைக்கிறீர்கள்?

எதை பயங்கரவாதத்துக்கு எதிரான தாக்குதல் என்கிறார்கள் இவர்கள்? பாரீஸ் தாக்குதல் எவ்வளவு கோழைத்தனமானதோ, எவ் வளவு கொடுமையானதோ,"அதே அளவுக்குக் கொடுமை யானது - கோழைத்தனமானது - வாகரையிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை 4 லட்சம் அப்பாவித் தமிழ் உறவுகள் மீது இலங்கை இராணுவம் நடத்திய கொலை வெறித்தாக்குதல். அது தான் அப்பட்டமான பயங்கரவாத ம்.

எமது ஈழ உறவுகளின் நியாயமான நேர்மையான மனிதாபிமான மனநிலையை முழுமையாக அறிந்தவன் என்கிற உரிமையுடன்தான் "அதே அளவுக்கு" என்று குறிப்பிடுகிறேனே தவிர, அது எனது சொந்த வார்த்தையல்ல!

பாரீஸ் தாக்குதலில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் எண்ணிக்கைக்கும், முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட எம் உறவுகளின் எண்ணிகைக்கும் சம்பந்தமே யில்லை. இதைப் போல பல நூறு மடங்கிருக்கும் அது!

ஆனால், இரண்டிலுமே, கொல்லப்பட்டவர்கள் - அப்பாவிகள்... நிராயுதபாணிகள்...! எல்லாவற்றுக்கும் மேலாக இரண்டு படுகொலைகளும திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டன.

பாரீஸ் படுகொலைகள் பயங்கரவாதிகளால் செய்யப்பட்டன என்பதும், முள்ளிவாய்க்கால் படுகொலைகள் ஓர் அரசாலேயே செய்யப்பட்டன என்பதும்தான் வித்தியாசமேயன்றி, வேறென்ன வித்தியாசம் இருக்கிறது? ஐ.எஸ்.பயங்கரவாதமும், சிங்கள அரசு பயங்கரவாதமும் வேறு வேறா என்ன!

பாரீஸ் பயங்கரத்தைத் திரித்துக் கூறி, போர்க்குற்றத்துக்கான தண்டனையிலிருந்து தப்பிக்க இலங்கை முயல்வது இயல்பானது. எந்த இண்டு இடுக்கையாவது பயன்படுத்தித் தப்பிக்க நினைப்பது குற்றவாளிகளின் சுபாவம்.

நம்மைப் பொறுத்தவரை, கொல்லப்பட்ட ஒன்றரை லட்சம் உறவுகளுக்கு நீதி கிடைக்க எது தடையாக இருந்தாலும் அதைத் தகர்த்தாக வேண்டும்.

ஐ.நா.போன்ற சர்வதேச அமைப்புகளில் இடம்பெறாத தனித்த அமைப்புகளின் பயங்கரவாதத்தைக் காட்டிலும், சர்வதேச அமைப்புகளில் இருக்கும் ஓர் அரசின் பயங்கரவாதம் கடுமையானது.

சர்வதேச அமைப்புகளில் இடம் பெற்றிருக்கிற ஓர் அரசின் பயங்கரவாதத்தையே தடுத்து நிறுத்த முடியாத சர்வதேசம் - இனப்படுகொலையையே செய்து முடித்த அதன் பயங்கரவாதத்துக்கு நியாயம் பெற்றுத்தரக் கூட முடியாத சர்வ தேசம்- தன்னுடைய கட்டமைப்புக்குள் இல்லாத ஒரு அமைப்பை மட்டும் எப்படிக் கட்டுப்படுத்திவிட முடியும்?

இந்தக் கேள்வியை எழுப்புகிற தார்மீக உரிமை இன்றைய திகதியில் தமிழினத்துக்கு மட்டுமே இரு க்கிறது.

1948ல் இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து, தமிழினம் தொடர்ந்து நசுக்கப்பட்டு வருகிறது, தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகிறது. தமிழ்ச் சகோதரிகள் சீரழிக்கப்படுவது காலம் காலமாகத் தொடர்கிற கொடுமை. இதற்கு நியாயம் கேட்கிற கடமை நம்மைத் தவிர வேறெவரு க்கு இருக்கிறது?

சர்வதேசத்திடம் கேட்க நிறைய கேள்விகள் இருக்கின்றன, எமது உறவுகளிடம். 1956, 1958, 1959, 1973 மற்றும் 1983ம் ஆண்டுக ளில் பௌத்த சிங்கள அரசுகளின் ஆதரவுடன் திட்டமிட்டு நிகழ்த்தப் பட்ட தமிழினப் படுகொலைகளைக் கண்டித்த நாடுகள் எத்தனை?

சொந்த மக்களையே கொல்கிறாயே - என்று இலங்கையிடம் கேட்ட நாடுகள் எத்தனை? 1983 இல் இலங் கையில் தமிழர்கள் மீது நடந்தது இனப்படுகொலை - என்று இந் திராகாந்தியைப் போல் துணிவுடன் சொல்ல அருகிலேயே இருக்கிற பாகிஸ்தானால் முடிந்ததா?

வெள்ளைத் தோலுக்காக மட்டுமே கண்ணீர் சிந்துகிற நாடுகள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையால் தானே, திட்டமிட்டு ஒரு இனப் படுகொலையைச் செய்து முடித்து விட்டு, அதற்கான விசாரணையி லிருந்து தப்பித்துவிடவும் முயல் கிறது இலங்கை.

அதற்காக பாரீஸ் பயங்கரத்தைக் கூட பயன்படுத்த முயல்கிற அந்த இழிபிறவியை, இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிற எந்த நாட்டையும், அது அமெரிக்காவாகவே இருந்தாலும், சீனாவாகவே இருந்தாலும், இந்தியாவாகவே இருந்தாலும், பாகிஸ்தானாகவே இருந்தாலும் நாம் மன்னிக்கக் கூடாது.

பாரீஸில் கொல்லப்பட்ட 200 பேருக்காக உலகே பேசலாம். ஈழத்தில் கொல்லப்பட்ட ஒன்றரை லட்சம் பேருக்காகப் பேசுகிற முதல் குரல் நமது குரலாகத்தான் இருக்க வேண்டும். நீதி கேட்கிற நமது குரல்தான், உலகின் கவனத்தைத் திருப்ப வேண்டும்.

தீவிரவாதமும் பயங்கரவாதமும் ஒன்றல்ல என்பதை பாரீஸ் பயங்கரம் உலக நாடுகளுக்கு நிச்சயம் உணர்த்தியிருக்கும். நேதாஜியின் இந்திய தேசிய இராணுவம் எப்படி SOFT TARGET எதையும் நிர்ணயித்துக் கொள்ளவில்லையோ, அதே மாதிரிதான் விடுதலைப் புலிகளும்! SOFT TARGET என்கிற பேச்சுக்கே அந்த விடுத லைப் போராட்ட இயக்கத்தின் வரலாற்றில் இடமில்லை.

(தொடரும்...)

# விஞ்ஞான ஆராய்ச்சிப் பணிகளுக்கு இனி கூடியளவான நிதியொதுக்கீடு

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**கடந்த பல ஆண்டுகளாக இந்நாட்டில் விஞ்ஞான ஆராய்ச்சிப் பணிகளுக்காக அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் ஏனைய உதவிகள் போதியதாக இல்லையென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்காக வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினை அதிகரித்தல், அதன்பொருட்டு வழங்கப்படும் பௌதீக மற்றும் மனித வளங்களை அதிகரித்தல் ஆகிய தேவைகள் அரசினால் இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.**

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற விஞ்ஞான வெளியீடுகளுக்கான விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

உலகில் அபிவிருத்தி அடைந்த சகல நாடுகளும் தமது வருமானத்தில் குறிப்பிடத்தக்க ஒரு தொகையினை விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்காக ஒதுக்குவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நவீன உலகில் முன்னோக்கிச் செல்லும் பிரயாணத்தின் போது விஞ்ஞான ஆராய்ச்சிப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றிச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதன் முக்கியத்துவம் உரிய முறையில் இனங் காணப்படாமையினாலேயே முன்பிருந்த அனைத்து அரசாங்கங்களின்கீழ் காணப்பட்ட விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சானது விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு என மாற்றப்பட்டுள்ளதெனக் குறிப்பிட்டார்.

புதிய அரசு என்ற ரீதியில் நாட்டில் மேற்கொள்ளப்படும் புதிய வேலைத்திட்டங்களின்போது கல்விமான்கள். அறிஞர்கள் மற்றும் விஞ்ஞானிகள் ஆகியோரின் உதவியை நாடுவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டிற்காக தாம் மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு எதுவித தயக்கமும் இன்றி முன்வருவார்களென தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

மருத்துவம், விவசாயம் மற்றும் பொறியியல் ஆகிய துறைகளில் 2013 ஆம் ஆண்டுக்கான உயர்ந்த தரத்திலான விஞ்ஞான ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்ட மொத்தம் 200 கலாநிதிகள், பேராசிரியர்கள் இங்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான வெளியீடுகளுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் வைபவத்தின் 08 ஆவது சந்தர்ப்பமாக இது காணப்படுவதுடன், தேசிய ஆராய்ச்சி சபையினால் இது ஏற்பாடு செய்யப்படுகின்றது.

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சின் செயலாளர் ஆர்.விஜயலட்சுமி, தேசிய ஆராய்ச்சி சபையின் தலைவர் பேராசிரியர் ஜனக்க த சில்வா ஆகியோர் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# இலங்கையுடன் உறவு தொடரும் அவுஸ்திரேலிய அரசு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திக்கு அவுஸ்திரேலியா தொடர்ந்தும் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜூலியா பிஸப் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வின்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையும் அவுஸ்திரேலியாவும் புரிந்துணர்வுடன் கூடிய உறவைக் கொண்டிருக்கின்றன.

அவுஸ்திரேலியாவில் சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர்.

இவர்கள் அவுஸ்திரேலியாவின் அபிவிருத்திக்கு உறுதுணையாக செயற்பட்டு வருகின்றனர் என்றும் பிஸப் தெரிவித்தார். (இ-7-10)

# ஜனாதிபதி முன்னிலையில் கடுமையாக வாக்குவாதம் செய்த தயாசிறி-வெல்கம

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவும், நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவும் கடுமையாக வாக்குவாதப்பட்டுக் கொண்டதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்தன உள்ளிட்டவர்கள் அண்மையில் குருநாகல் மாவட்ட சுதந்திரக்கட்சியின் உள்ளூராட்சி மன்ற அரசியல்வாதிகளை சந்தித்து தனித்து போட்டியிடுவது குறித்து பேசியுள்ளதாக அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்போது, “சேர் எனக்கும் பேச இடமளியுங்கள்” எனக் கூறிக் கொண்டு எழுந்த குமார வெல்கம,

“அந்தக் கூட்டத்திற்கு நானும் சென்றேன், தயாசிறி குற்றம் சுமத்துவதனைப் போன்று எந்தவிதமான பேச்சுக்களும் நடத்தப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் நிகழ்வுகள் அநுராதபுரத்தில் நடைபெற





வுள்ளமை குறித்து அறிவுறுத்தி கட்சி உறுப்பினர்களை அங்கு அழைக்கும் நோக்கிலேயே சென்றிருந்தோம் என தெரிவித்துள்ளார்.

ஆம் அது எனக்கு தெரியும், அப்படியென்றால் பிரச்சினை இல்லை தானே என ஜனாதிபதி தயாசிறியை பார்த்துக் கேட்டுள்ளார்.

இல்லை இல்லை அங்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்து போட்டியிடுவது குறித்தே பேசப்பட்டுள்ளது என தயாசிறி குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் ஆவேசமாக எழுந்த குமார வெல்கம,

“தயாசிறி நான் உமக்கு ஒன்றை சொல்கின்றேன். உமக்குத் தேவை இந்த கட்சியை பிளவடையச் செய்வதாகும்.

34 ஆண்டுகளாக நான் தொகுதி அமைப்பாளர், சிறிமா அம்மையார் என்னை அமைப்பாளராக நியமித்தார். நான் ஒரிஜனல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளன்.

உம்மைப் போன்று பாய்ந்து பாய்ந்து மீண்டும் பாய்ந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு சென்று வரவில்லை.

புரிந்ததா? எனவே நாம் கட்சியை நேசிக்கும் நபர்கள். நாம் இந்த கட்சியை விட்டு விலகிச் செல்லும் நிலைக்குத் தள்ள வேண்டாம் என மிகுந்த கோபத்துடன் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தயாசிறி ஜயசேகரவும் எழுந்து குமார வெல்கமவை கடுமையாக திட்டியுள்ளார்.

“போதும் தற்போது இதனை நிறுத்திக் கொள்ளுங்கள். இருவரும் அமருங்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுதியில் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## பேரறிஞர்

ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்த சமயம் அவர் ஒரு தடவை முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு வந்திருந்தார். ஆளுநர் மாளிகையில் ஒரு நாள் இரவு தங்கி மறுநாள் புதுடில்லிக்குப் புறப்படுவதாக ஏற்பாடு! நிகழ்ச்சிகளை யெல்லாம் முடித்துக்கொண்டு ஆளுநர் மாளிகையில் தங்கியிருக்கிறார்.

அன்றிரவுபடிப்பதற்கு ஒரு முக்கியமான புத்தகம் அவருக்குத் தேவைப்பட்டது. அந்தச் சமயத்தில் உலக அளவில் ஒரு முக்கியமான பொருளாதாரம் சம்பந்தமான ஒரு புத்தகம் வெளியாகியிருக்கும் விடயம் அவருக்குத் தெரியும்.

அந்தப் புத்தகம் சென்னைக்கு வந்திருக்குமா? அது இங்கே கிடைக்குமா? என்று விசாரித்தார் நேருஜி.

அவர் இப்படிக் கேட்டவுடன் அங்கிருந்தவர்களெல்லாம் பரபரப்பாக செயற்பட ஆரம்பித்தனர். முக்கிய இடங்களில் எல்லாம் விசாரித்தார்கள்.

சென்னையிலுள்ள கன்னிமாரா நூல் நிலையத்திற்கு எப்படியும் அந்தப் புத்தகம் வந்திருக்கும் என்ற நம்பிக்கையில் அங்கு விசாரித்தார்கள்.

அந்தப்புத்தகம் இரண்டு நாட்களுக்கு முன்புதான் அங்கு வந்திருந்தது. உடனே அங்கே போனார்கள்.

அவர்களுக்கு இன்னொரு சந்தேகம்! “புத்தகம் வந்திருக்கிறது சரி... வேறுயாரும் அதை எடுத்துக் கொண்டுபோயிருக்கக்கூடாதே...” இருந்தாலும் மனதில் ஒரு தைரியம்.

இப்படி ஒரு புத்தகம் வெளிவந்திருப்பதே நேரு சொல்லித்தான் நமக்கே தெரியும். அதுவுமில்லாமல் உலகப் பொருளாதாரம் சம்பந்தமான ஏதோவொரு புத்தகம் அது. அதைப் போய் அவ்வளவு ஆர்வமாக யார் எடுத்துக்கொண்டு போயிருக்கப் போகிறார்கள் என்ற தைரியம் தான்.

இந்தத் தைரியத்துடன் அந்த நூல் நிலையத்துக்கு போய்ப் பார்த்தால், அது கிடைக்கவில்லை அதை யாரோ எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

நேருவுக்கு மட்டுமே தெரிந்திருந்த அந்தப் புத்தகம் பற்றிய விடயம் சென்னையிலுள்ள இன்னொருவருக்கும் தெரிந்திருக்கிறது.

உடனே எல்லோரும் பரபரப்பாக யார் எடுத்தது என்று தெரிந்து கொள்வதற்காக நூல் நிலைய றெஜிஸ்டரைப் புரட்டிப் பார்த்தார்கள். அதில் சி.என்.அண்ணாதுரை என்று எழுதியிருந்தது. அவர்தான் பேரறிஞர் அண்ணா.

நேரு படிக்க விரும்பிய ஒரு புத்தகத்தை அதே நேரம் படிக்க விரும்பிய இன்னொரு தலைவர் இவர்.

படிப்பதில் அவருக்கிருந்த ஆர்வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அதற்கு எவ்வளவோ சம்பவங்கள் உண்டு.

கடைசிக்காலத்தில் அவர் மருத்துவமனையில் இருந்தார். அப்பொழுது அவருக்கு ஒரு முக்கியமான அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது.

அமெரிக்காவிலிருந்து டாக்டர் மில்லர் வந்திருக்கிறார். அவரிடம்,

‘டாக்டர் நாளைக்கே அறுவைச்சிகிச்சை செய்யப் போகிறீர்களா?” என்றார்.

“ஆமாம்” என்றார் டாக்டர்.

“நாளை மறுதினம் செய்து கொள்கிறேனே!” என்றார் அண்ணா.

“ஏன் ஏதாவது நாள் பார்க்கிறீர்களா?” என்றார் அவர்.

“இல்லை ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன். அதை நாளைக்குள் முடித்துவிடுவேன். அதன் பின் நான் இறந்தாலும் கவலையில்லை!” என்றார்.

அவர் தான் அறிஞர் அண்ணா.

சங்க நூல்களிலிருந்து சமீபத்திய நூல்கள் வரை எல்லாம் படித்திருக்கிறார் அவர்.

ஒரு திருமண விழாவில் அவர் பேசும் போது சொன்ன விடயம் இது!

சங்க காலத்தில் காதலியை மணக்க விரும்புபவனுக்கு அவளுடைய தந்தை சோதனைகளெல்லாம் வைப்பார். “போய்ப் புலிப்பல் கொண்டு வா, அப்பொழுதுதான் என் பெண்ணைத் தருவேன்!” என்பார்.

காதலன் உடனே காட்டுக்குப் போய் ஒரு புலியைக் கொன்று அதன் பல்லைக் கொண்டு வருவான். அதை வீரப்பதக்கத்தில் பதித்து திருமணத்தன்று அவனுக்கு சூட்டுவார்கள்.

இப்பொழுதெல்லாம் காதலனிடம் “காட்டுக்குப் போய் புலிப்பல் கொண்டு வா! என்று சொன்னால்... புலிதான் மாப்பிள்ளையாக வரும்!” என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

59

## ரஷ்ய அனுபவம் பற்றி என்.எஸ்.கிருஷ்ணன்

### 29.10.1951

அப்படிச் சொல்லிக் கொண்டு வரும் போது, நம் டைரக்டர் சுப்பிரமணியம் அவர்கள் எங்கள் இந்தியாவிலே கம்யூனிசமும் காந்தியமும் ஒன்றுதான் என்று சொன்னவுடன் இல்லை(நோ) என்றான் மொழிபெயர்ப்பவன். சொல்வதெல்லாம் பொய் என்றான்.

நான் சொல்வதை மொழி பெயர்த்து சொல். அது உன் கடமை என்றார் சுப்பிரமணியம்.



1956 இல் சென்னைக்கு வந்த ரஷ்ய கலைக்குழுவினரு என்.எஸ்.கிருஸ்ணன் தன் வீட்டில் விருந்தளித்தார். படத்தில் லலிதா, பத்மினி உட்பட

முடியாது என்று அவன் மறுத்தான்.

நான் குறுக்கிட்டு மொழி பெயர்ப்பது தானே உன் வேலை! அதை ஏன் செய்ய மறுக்கிறாய்? என்றேன்

அவன் என்னைப் பார்த்து யூ ஷட் அப் (வாயை மூடு) என்று சொன்னான். எனக்கு கோவம் வந்து விட்டது. ஒழுங்காக மொழிபெயர்த்து சொல்கிறாயா இல்லையா? என்றேன்.

இவ்வளவும் நல்ல ஆங்கிலத்தில் கேட்டேன். (கை தட்டல்)

அப்படி நான் சொல்ல முடியாது என்றான்.

உங்கள் சாப்பாடும் வேண்டாம். மண்ணாங்கட்டியும் வேண்டாம் என்று சொல்லி நான் எழுந்து போய்விட்டேன். இதை தமிழில் தான் பேசினேன். (கை தட்டல்)

நான் எழுந்து போனவுடன் மாஸ்கோவிஸ்கி என்ன என்று கேட்டார். உடனே அவருக்கு விபரம் சொல்லப்பட்டது. அவர் அதிர்ந்து போய் அந்த மொழி பெயர்ப்பு ஆளை என்னிடம் மன்னிப்பு கேட்க வைத்தார். அவன் மன்னிப்பு கேட்ட பின்பு தான் நான் விருந்தில் கலந்து கொண்டேன்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் கம்யூனிசத்தை அவர்கள் எவ்வளவு தூரம் மதிப்பாக நினைத்து இருக்கிறார்கள், அந்த மதிப்பை விட்டுக் கொடுக் காமல் இருக்கிறார்கள் என்பது தான்.

ரஷ்யாவின் முன்னேற்றத்தை நாம் போற்றுகிறோம் என்றாலும் அந்த நாட்டில் நம் நாட்டைப் பற்றிப் பேசும் போது பெருமையாகத் தான் பேசினோம்.



நான் நம்முடைய நாட்டைக் காட்டிக் கொடுப்பவன் அல்ல. 20 வருடமாக நாடகத்திலே சினிமாவிலே நடித்துக் கொண்டு இருக்கிறேன். 98 படங்கள் முடித்திருக்கிறேன். மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்துத்தான் எந்தப் படத்திலும் நடிக்கிறேன். அரசாங்கத்தையோ, முதலாளிகளையோ காக்காய் பிடிப்பது என் வேலையாக இருந்ததில்லை.

#### மக்கள் ஆட்சி

மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் ஆட்சி எங்கு என்றால் ரஷ்யாவில் தான் அதை நாங்கள் கண்ணாரக் கண்டோம். காதாரக் கேட்டோம்.

அப்படி எல்லாம் இருக்காது என்று யாராவது சொன்னால் அது பற்றிக் கவலையில்லை.

நான் ரஷ்யா சென்றிருந்த போது, திருச்சியில் நடந்த கூட்டம் ஒன்றில் ஒரு தலைவர் அவதூறாகப் பேசியிருக்கிறார். ரஷ்யாவிலே ஒன்றும் கிடையாது. மக்கள் எல்லாம் கஷ்ரப்படுகிறார்கள். ஆனால் அங்கிருந்து வருபவர்கள் எல்லாம் அதைப் பற்றி புகழ்ந்து பேசுகிறார்கள்.

இப்பொழுது இங்கிருந்து ஒரு கோமாளி போயிருக்கிறான். அவன் வந்து என்னென்னவோ உளறப்போகிறான். அதை நீங்கள் எல்லாம் நம்பவேண்டாம் என்று கூறியிருக்கிறார்.

நம் நாட்டிலே எதை நம்பச் சொல்கிறார்கள் தெரியுமா? அறிவுக்கு எட்டாத எங்கோ இருப்பதாகச் சொல்லுகின்ற சொர்க்கத்தை நம்பச் சொல்கிறார்கள். யாரும் பார்த்திராத தேவலோகத்தை நம்பச் சொல்கிறார்கள். ஆனால் என்.எஸ்.கிருஸ்ணன் நேராகச் சென்று ரஷ்யாவைப் பார்த்து வருகிறான் அவன் சொல்வதை நம்பாதே என்கிறார்கள். நாம் எப்படி உருப்பட முடியும். நாங்கள் பொம்மைகள் அல்ல. ரஷ்யார்கள் சொல்பவற்றை அப்படியே சொல்லக் கூடியவர்கள் அல்ல.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 327

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

அதனால் குறைந்த பட்சம் உங்களுக்கு எது தெரியவில்லை என்பதையாவது தெரிந்து கொள்ள முடியும். ஆனால் அந்த உண்மையை உங்களுடைய புரிந்து கொள்ளுதலாகச் செய்து கொள்வது உங்களைப் பொறுத்தது. நீங்கள் உண்மையை எத்தனை முறை கேட்க விரும்பினாலும் நான் சொல்லத் த்யாராக இருக்கிறேன்.

ஒரு சின்னக்கதை...

சங்கரர் ஒருமுறை பரிவ்ராஜக யாத்திரையில் (புண்ணிய ஸ்தலங்களுக்கு பாதயாத்திரையாக செல்லுதல்) அவருடைய சீடர்களுடன் சென்று கொண்டிருக்கும் பொழுது ஓரிடத்தில் அவருக்கு மிகவும் தாகமாக இருந்தது. அவர்கள் சுற்றும் முற்றும் பார்த்தனர். ஆனால் அவரது தாகத்தை தீர்க்கும் எதுவும் கண்ணில் படவில்லை.

பனை மரங்கள் அடர்ந்த ஒரு சிறிய வனம் மட்டுமே இருந்தது. அங்கு கள் தயாரித்துக் கொண்டுடிருந்தனர். சங்கரர் அந்த வனத்தில் நுழைந்து, அங்கிருந்த தொழிலாளர்களிடம், அவரது தாகத்தை தணிப்பதற்கு ஏதேனும் இருக்குமா என்று கேட்டார். அவர்களும், அவர்களிடம் கள்ளைத் தவிர வேறெதுவும் இல்லை என்று சொல்லி விட்டனர். சங்கரர் கள்ளைக் கேட்டு



வாங்கிக் குடித்தார். சீடர்கள் சங்கரர் குடிப்பதைப் பார்த்தனர். உடனே அவர்களும் கள்ளைக் கேட்டு வாங்கிக் குடித்தனர்.

கள் சங்கரரை பாதிக்கவில்லை. ஏனெனில் அவர் ஆத்மஞானம் பெற்றவர். எல்லையற்ற விழிப் புணர்வைப் பெற்றவர். அவர் நிதானமாக நடந்து கொண்டிருந்தார். ஆனால் அவரது சீடர்களோ அவருக்கு பின் தள்ளாடிக் கொண்டிருந்தனர்.

சில நாட்கள் கழித்து மீண்டும் அவர்கள் நடந்து கொண்டிருந்தனர். ஆனால் இந்தமுறை ஒரு பாலைவனப் பகுதியில். அவர்களுக்கு தாகமாக இருந்தது. இந்த முறை இரும்புப் பட்டறை தான் கண்ணில்பட்டது. வேறெதுவும் இல்லை. அங்கிருந்த தொழிலாளி குடிப்ப தற்கு எதுவுமில்லை என்று சொல்லி விட்டான்.

ஆனால் சங்கரர் அங்கிருந்த உருகிய இரும்பை, திரவ நிலையில் இருந்த இரும்பைப் பார்த்து விட்டு, அதைக் கேட்டு வாங்கி குடித்து விட்டார்.

இரும்புக் குழம்பை குடித்த பிறகு அவர்களது சீடர்களை நோக்கி திரும்பி, அவர்களையும் குடிக்கச் சொன்னார். சீடர்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர்!!!

அவர் சொல்வதைச் செய்ய வேண்டுமே தவிர, அவர் செய்வதை அல்ல என்பதை சங்கரர் அவர்களுக்கு புரிய வைக்க விரும்பினார். அவர் எல்லையற்ற விழிப்புணர்வில் நிலை பெற்றிருந்ததால், கள் அவரைப் பாதிக்கவில்லை. அதை நீங்கள் அனுபவிக்காத வரையில் உங்களால் அறிந்து கொள்ள முடியாது. அதனால் வெறுமனே வெளியில் இருந்து அதைப் போல் நடிக்க முடியாது. அது உங்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளேயிருந்து நிகழ வேண்டும். அப்பொழுது தான் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# ஓவியங்களை ஒப்படைக்காத ஓய்வுபெற்ற பேராசிரியர் கைது

(கொழும்பு)

**பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய 37 மில்லியன் ரூபா பெறுமதியான ஓவியங்களில் சிலவற்றை விற்பனை செய்த ஓய்வு பெற்ற பேராசிரியர் ஒருவர் நுவரெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**



பிரபல ஓவியர் டேவிட் பெயன்ர வினால் வரையப்பட்ட மேற்படி ஓவியங்களை பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்குமாறு அவர் தனது இறுதி விருப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் அவரது விருப்பதற்கு மாறாக மேற்படி ஓவியங்களில் 7 ஐ தம்முடன் வைத்திருந்ததுடன் அவற்றில் 11 ஓவியங்களை பெருந் தொகையான பணத்திற்கு விற்பனை செய்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் கட்புல மற்றும் அரங்கேற்ற கலைகள் பீடத்தின் முன்னாள் பேராசிரியரான அல்பேட் தர்மசிறிக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக கடபுல மற்றும் அரங்கேற்ற கலைகளினால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கமைய பொலிஸார் பேராசிரியரை கைது செய்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வந்தனர்.

இந்த விசாரணைகளைத் தொடர்ந்து 18 ஓவியங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் பேராசிரியர் கடந்த செவ்வாய்க்கிழமை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். இதன்போது பேராசிரியரை 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன் மேற்படி வழக்கு எதிர் வரும் பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி ஓவியங்களை பல்கலைக்கழகத்தின் கட்புல மற்றும் அரங்கேற்ற கலைகள் பீடாதிபதியிடம் ஒப்படைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

டேவிட் சிலிங்ஃபோட் பெயன்ர (1900-1975) மிகவும் பிரபல்யம் வாய்ந்த இலங்கையில் பிறந்த ஓவியராவார். கண்டி றினிற்றி கொலிஜ், கல்கிசை சென்.தோமஸ் ஓவியங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

# பிரதமர் பதவிக்காக களமிறங்கமாட்டேன்

## ஜனாதிபதி

பிரதமர் பதவிக்காக தேர்தலில் போட்டியிடும் எண்ணம் தனக்கு கிடையாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்துடன், ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய பின்னர் நான் பிரதமர் பதவிக்காக தேர்தலில் போட்டியிடுவேன் என சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவ்வாறானதொரு எண்ணம் எனக்குக் கிடையாது என்று தெரிவித்துள்ளார். (3-7-10)

# அமைய அடிப்படையிலான ஊழியர்கள் விரைவில் நிரந்தர நியமனம் பெறுவர்

## அமைச்சர் ஜோன் செனவிரட்ன

(கொழும்பு)

மனிதவளங்களை வெளியிலிருந்து பெறும் நடைமுறையில்லாமல் செய்யப்படுவதுடன் எல்லா ஊழியர்களும் படிப்படியாக நிரந்தர நியமனத்திற்கு உள்வாங்கப்படுவார்கள் என தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க அமைப்புக்கள் தொடர்பான அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனிமேல் அரச ஊழியர்கள் வெளி நிறுவனங்களிலிருந்து வாடகைக்கு அமர்த்தப்படமாட்டார்கள். ஊழியர் சேமலாப நிதியும் ஊழியர் நம்பிக்கை நிதியும் 1.7 றில்லியன் ஆகக் காணப்படுகிறது.

சுப்பமார்க்கட்களில் தொழில் புரியும் பெண் தொழிலாளர்களுக்கு 7000 அல்லது 8000 ரூபாவே சம்பளமாக வழங்கப்படுகிறது. ஆகக் குறைந்தது 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்.

மலையகப் பகுதி தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 150 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது.

அர்சாங்க ஊழியர்கள் விபத்தில் மரணமடையும் போது 5 இலட்சம் ரூபா இழப்பீடாக வழங்கப் படுகிறது.

ஊழியர் சேமலாப நிதியும் ஊழியர் நம்பிக்கை நிதியும் இணைக்கப்பட்டால் அதிகளவு நன்மைகள் கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

ஊழியர் சேமலாபநிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றினை கொண்டிருப்பவர்களுக்கு காப்புறுதித் திட்டமும் வழங்கப்படவுள்ளது.

75 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர் சேமலாப நிதி உடையவர்கள் கடனுக்காக விண்ணப்பித்துள்ளனர். ஆனால் 5 ஆயிரம் வரையானோருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. 300 ஊழியர்கள் இதற்கென அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கியும் ஊழியர் சேமலாப நிதி உடையவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து ஆலோசித்து வருகின்றது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி விடயங்களை உள்ளடக்கி வரையப்பட்ட சட்ட மூலம் தற்போது சட்டமா அதிபரிடம் உள்ளது என்றும் விரைவில அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (3)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 551

Search for people, places and things | Nagendram Home

**சுலக்ஷ்னா**

இந்த உலகம் நீ நன்மை செய்யும் போது உன்னை கவனிக்காது .. தீமை செய்யும் போது உன்னை விமர்சிக்காமல் இருக்காது..

**அலெக்ஸ் சாள்ஸ்**



அப்பா:- ஏன் செல்லம் அழுற?
மகன்:-அம்மா அடிச்சுட்டாங்க
அப்பா:- அம்மாதானே அடிச்சாங்க அழாதே
மகன்:உனக்கு பழகிப் போச்சு...
எனக்கு வலிக்குதப்பா....

**விதுஷ்**

சுகர்
இல்லாத (TEA) டீயும் ,

பிகர் இல்லாத
வாழ்க்கையும் கசப்புத்தான் ..

ஆனால்....!!! உடம்புக்கு நல்லது ....




**சித்து கரன்**

அவன் :
நாம போகும்போது
பூனை குறுக்க போச்சுன்னா
என்ன அர்த்தம்..?
இவன் :
அதுவும்
எங்கேயோ
போகுதுன்னு
அர்த்தம்...



www.tamilsms.info

**சுஜி**




**தேவிகன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு

## அமைச்சரவை அனுமதியளித்தது

(கொழும்பு)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 3500 ரூபா கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் முன்வைகக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே இந்த அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் தொழிலாளர்களின் நன்மை கருதி தீபாவளிக்கு முன்னர் இந்த 3500 ரூபா கொடுப்பனவை வழங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

எனினும் தோட்டக் கம்பனிகளின நிலைப்பாட்டிற்கு அமைய தேயிலை சபை ஊடாக இந்த கொடுப்பனவை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் அமைச்சரவை பத்திரம் ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அமைச்சரவை பத்திரத்தின்படி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 3500 ரூபா கொடுப்பனவு வழங்க சுமார் 685 மில்லியன ரூபா தேவை என கணிப்பிடப்பட்டது. அதன்படி அமைச்சர்களான பழனி திகாம்பரம், மனோ கணேசன் மற்றும் இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஸ்ணன் உள்ளிட்ட குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து குறித்த பணத்தை திறைசேரி ஊடாக பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை பிரதமர் ஏற்றுக்கொண்டு திறைசேரியில் இருந்து பணத்தை வழங்க இணககம் தெரிவித்தார். எனினும் திறை சேரியில் இருந்து இலங்கை தேயிலை சபையூடாக இந்த பணத்தை கைமாற்ற பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க மேலதிக அமைச்சரவை பத்திரம் ஒன்றை தாக்கல் செய்ததன் பேரில் நேற்று முன்தினம் அதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

### வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் 19.11.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 140.10 | 144.44 |
| பவுண்ட் | பிரிட்டன் | 213.23 | 221.48 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 148.88 | 155.40 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 136.80 | 143.05 |
| டொலர் | கனடா | 111.27 | 116.26 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 99.27 | 104.30 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.29 | 102.40 |
| ஜென் | ஜப்பான் | 1.1291 | 1.1777 |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 377.0997 |
| குவைத் | டினார் | 467.8714 |
| ஓமான் | ரியால் | 369.6057 |
| கட்டார் | ரியால் | 39.0905 |
| சவுதி அரேபியா | ரியால் | 37.9397 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.7393 |

### சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | சுன்னாகம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 120 | 140 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 400 | 600 | 300 | 600 |
| தக்காளி | 150 | 140 | 150 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 140 | 160 | 120-160 | 160 | 140 |
| கரட் | 80 | 100 | 80-160 | 160 | 100 |
| பூசணி | 50 | 40 | 60 | 60 | 50 |
| புடோல் | 140 | 100 | 160 | 120 | 140 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 120 | 200 | 130 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 160 | 160 | 150 |
| பாகற்காய் | 250 | 200 | 400 | 300 | 280 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80 |
| பயற்றங்காய் | 300 | 150 | 300-400 | 300 | 300 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 160 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 60 | 120 | 50 |
| கறிமிளகாய் | 250 | 200 | 400 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 150 | 400 | 280 | 200 |
| போஞ்சி | 300 | — | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | — | 120 | — |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 50 | — | 50 |
| தேசிக்காய் | 400 | 320 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 50 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 220 | — | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | — | 120 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 30 | — | 40 | 30 | 40 |
| வல்லாரை | 10 | — | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | — | 50 | 60-100 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

40

## சயனைட் தின்று தற்கொலை செய்த முதல் போராளி சிவகுமாரன்

**எதிரானது அல்ல**

அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம் மத்திய அரசுக்கு எதிரானது அல்ல.

மிக முக்கியமான இந்தப் பிரச்சினையில் நாங்கள் ஓடி ஒளிய விரும்பவில்லை. அதனால் நாங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். மேற்கண்டவாறு ஆறுமுகசாமி கூறினார்.

**கண்டன கூட்டங்கள்**

கச்சதீவு தானத்தைக் கண்டித்து ஜீலை 14 ஆம் திகதி தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. சார்பில் கண்டன கூட்டங்கள் நடத்தப்பட்டன. முதலமைச்சர் கருணாநிதி தஞ்சை, பாபநாசம் ஆகிய நகரங்களில் நடந்த கூட்டங்களில் பேசினார்.

**நீதிமன்றில் வழக்கு**

கச்சதீவைத் தானம் செய்வது சட்ட விரோதம் என்றும் இந்திராகாந்தியும் சிறிமாவோ பண்டாரநாயக்கவும் செய்து கொண்ட ஒப்பந்தம் செல்லாது என்றும் சென்னை மேல்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

தமிழ்நாடு ஜனசங்கத் தலைவர் கே.கிருஸ்ணமூர்த்தி இந்த வழக்கைத் தொடர்ந்தார்.

விசாரணைக்குப் பிறகு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

**நிறைவேற்றம்**

பலத்த எதிர்ப்பு இருந்தாலும், கச்சதீவு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. கச்சதீவை இலங்கையிடம் இந்தியா ஒப்படைத்தது.



சிவகுமாரன்

ஈழத்தமிழர் போராட்டத்தில் 17 வயதான சிவகுமாரன் 1974 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி சயனைட் (விஷம்) தின்று தற்கொலை செய்து கொண்டார். ஈழப்போராட்டத்தில் சயனைட்டைச் சாப்பிட்டு உயிர் துறந்த முதல் போராளி இவர்தான்.

தனது மரணத்தின் மூலம் அன்றைய இலங்கையின் இளம் தமிழர் தலைமுறையை - தமிழ்ச் சமூகத்தை ஓர் உலுக்கு உலுக்கிய சிவகுமாரன், 1957 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி பிறந்தார்.

இவருடைய தந்தை பொன்னுசாமி, தமிழ் ஆர்வலர். அரசியல்ஞானம் மிக்கவர். தாய் அன்னலெட்சுமி. சிவகுமாரன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றார். இளமையில் இருந்து விடுதலை வேட்கை உடையவராகத் திகழ்ந்த சிவகுமாரன், தமிழ் மாணவர் பேரவையுடன் தொடர்பு வைத்திருந்தார்.

**குண்டுவீச்சு**

தொடக்கத்தில் தங்கத்துரையின் குழுவில் இருந்த சிவகுமாரன் பின்பு தன் வழியே போகத் தொடங்கினார்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் யாழ்ப்பாணத்து பிரதிநிதியாக யாழ்ப்பாண நகர மேயர் அல்பிரட் துரையப்பா விளங்கினார். பெரும்பாலான தமிழர்கள் அவரை ஒரு தமிழ்த் துரோகி யாகவே கருதினார்கள்.

துரையப்பாவை, சிவகுமாரன் தீர்த்துக்கட்டத் தீர்மானித்தார். 1972 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் 2ஆம் குறுக்குத் தெருவில் நின்ற துரையப்பாவின் கார் மீது வெடிகுண்டு வீசினார். இதனால் துரையப்பாவின் கார் சேதம் அடைந்தது. காரை நிறுத்திவிட்டு ஓய்வு விடுதியில் தேநீர் அருந்திக்கொண்டிருந்த துரையப்பா உயிர் தப்பினார்.

இதற்காக பொலிஸார் சிவகுமாரனைக் கைது செய்தனர். போதிய ஆதாரம் இல்லாததால் சில மாதங்களுக்குப் பிறகு அவர் விடுதலையானார்.

**சித்திரவதை**

ஆனால் பொலிஸ் காவலில் இருந்த போது கடும் சித்திரவதைக்கு உள்ளானார். இதனால் பொலிஸ் கையில் சிக்குவதைக் காட்டிலும் உயிரை மாய்த்துக் கொள்வதே மேல் என்ற முடிவில் கழுத்தில் எப்போதும் சயனைட் குப்பியைத் தொங்கவிட்டு இருந்தார்.

போர்க்குணம் உடையவராக சிவகுமாரன் திகழ்ந்தார். அவரது போர்க்குணத்திற்கும் தனித்த செயற்பாட்டிற்கும் சான்றாக ஒரு சம்பவத்தைக் கூறலாம்.

1973 ஆம் ஆண்டு நல்லூர் திருவிழாவின் போது காவல் பணியில் ஈடுபட்டிருந்த சிங்கள பொலிஸார் பெண்களிடம் அத்துமீறி நடக்க முற்பட்டனர். இதைக் கண்ட சிவகுமாரன் தன்னந்தனியாகவே நின்று அவர்களை எதிர்த்தார். இதற்காக அவர் நல்லூர் போலிஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டார்.

பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டதால் பொலிஸார் அவரை விடுவித்தனர்.

1974 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டிற்காகச் சிவகுமாரன் கடுமையாக உழைத்தார்.

பொலிஸ் அட்டூழியத்தால் 9 பேர் மரணத்துடன் மாநாடு முடிந்தது அவரது மனதை பெரிதும் நோகச்செய்தது. கலவரத்துக்கு காரணமாக இருந்த இலங்கை அமைச்சர் குமாரசூரியரையும் பொலிஸ் அதிகாரி சந்திரசேகராவையும் யாழ்ப்பாண நகர மேஜர் அல்பிரட் துரையப்பாவையும் பழிவாங்க வேண்டும் என்று துடித்தார்.

**தேடப்படும் குற்றவாளி**

சந்திரசேகரா யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகே குடியிருந்தார். அந்தக் கோவிலைக் கடந்துதான் அவர் பொலிஸ் நிலையத்துக்கு செல்வது வழக்கம். இதைக்கவனித்த சிவகுமாரன் நண்பர்களுடன் கோவில் அருகே காத்திருந்தார்.

பொலிஸ் ஜீப்பை செலுத்திக் கொண்டு சந்திரசேகர வந்தார். அவரது ஜீப்பை வழிமறித்துக் கதவைத் திறந்து சிவகுமாரன் துப்பாக்கியால் சுட்டார். துப்பாக்கி வெடிக்கவில்லை.

இதனால் சந்திரசேகராவை வெளியே இழுத்து கத்தியால் குத்த முயன்றார். அப்போது நண்பர்களின் உதவியைக் கோரினார். அவர்கள் ஏற்கனவே ஓடி விட்டதால், சிவகுமாரனும் ஓட நேர்ந்தது.



அல்பிரட் துரையப்பா

தப்பிச் செல்லும் வழியில், அல்பிரட் துரையப்பாவின் காரைக் கண்டார். அவரை நோக்கியும் துப்பாக்கியால் சுட்டார். மறுபடியும் துப்பாக்கி ஒத்துழைக்க மறுத்தது. மீண்டும் ஓட்டம் பிடித்தார். இதனால் தேடப்படும் குற்ற வாளியாக அறிவிக்கப்பட்டார்.

**தலைக்கு ஒரு இலட்சம் ரூபா**

தலைமறைவாக இருக்கும் சிவகுமாரனைக் காட்டிக் கொடுப்போருக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும் என்று இலங்கை அரசு அறிவித்தது. ஈழப்போராளி ஒருவரை பிடித்து தந்தால் சன்மானம் என்று அறிவிக்கப்பட்டது அதுவே முதல் முறையாகும். மேலும் 1974 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் என்பது பெரிய தொகை.

(தொடரும்)



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில் நுட்பபீடத்தை கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.எஸ்.இராதாகிருஷ்ணன் திறந்து வைப்பதையும் கல்லூரியின் கதிராளி மலரினை அதிபர் சீ.மரியநாயகம், மலராசிரியர் தமிழருவி த.சிவகுமாரன் சகிதம் அமைச்சருக்கு வழங்குவதையும் பரிசளிப்பு விழாவில் அமைச்சர் பரிசில் வழங்குவதையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)....

24.பதினாறு பெருங்குடியிருப்புகள் உருவாக்கத்தில் தென்னிந்தியாவிற்குள் அமைந்திருந்த குடியிருப்பு எது?

1.வஜ்ஜி 2.அசாக்கா 3.காந்தாரம் 4.கீரசேனம்

25.எனது பிள்ளைகளோ, பேரப்பிள்ளைகளோ புதிய திக் விஜயங்களை மேற்கொள்ளாதிருப்பார்களாக என அசோகச் சக்கரவர்த்தி கூறிய கூற்று காணப்படும் மூலாதாரம் எது?

1.அலகாபாத் தூண் கல்வெட்டு 2.பதின்மூன்றாவது பாறை கல்வெட்டு

3.பன்னிரெண்டாம் பாறை கல்வெட்டு 4.ஒன்பதாவது பாறை கல்வெட்டு

26.கி.பி.711-712 இடையிலான காலப்பகுதியில் இந்தியாவை ஆக்கிரமித்தவர் யார்?

1.அல்ஹஜ்ஜாஜ் 2.கோரி முகமது 3.கஸ்னி முகமது 4.ஐபிரேக்

27.டில்லி சுல்தானின் அரச வம்சம் எவ்வம்சத்திலிருந்து ஆரம்பமாகியது?

1.கல்ஜி அரசவம்சம் 2.துக்ளக் அரசவம்சம் 3.செய்யது அரசவம்சம் 4.அடிமை அரசவம்சம்

28.விஜயநகர் பேரரசில் இரண்டாம் ஹரிஹர மன்னனின் காலத்தில் இலங்கை உட்பட பல அரசுகளை ஆக்கிரமிப்புக்குள்ளாகியது எனக் குறிப்பிடுவது

1.அல்லய சாசனம் 2.வல்லிபுரம் சாசனம்

3.ஆலம்புரி சாசனம் 4.பணாகடுவ செப்பேடு

29.பர்மாவிற்கு பௌத்த சமயச் செய்தியை கொண்டு சென்றோர் யாவர்?

1.புண்ணியசார, தர்மருச்சி தேரர்கள் 2.சோன, உத்தர தேரர்கள்

3.புத்த யஸஸ், சங்கபது தேரர்கள் 4.பாஹியன், ஹியுத்யாங் தேரர்கள்

30.மத்திய ஐரோப்பிய காலத்தில் உருவாக்கிய கலைப்படைப்புகளின் சிறப்பம்சமாவது

1.சமயத்துடன் தொடர்புபட்டது 2.தனிநபர்களை மரியாதை செய்தல்

3.இரசனையை அதிகரித்தல் 4.லௌகீக வாழ்வை அறிதல்

31.நாடுகாண் பயணிகளில் தொடர்புடைய மத்திய, தென் அமெரிக்க பிரதேசங்களுக்கு சென்று கொள்ளையடித்தவர்கள்

1.போர்த்துக்கேயர் 2.ஒல்லாந்தர் 3.ஸ்பானியர் 4.ஆங்கிலேயர்

32.இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டமைக்கு மூன்று முக்கிய கைத்தொழில்கள் ஏதுவாகின்றன. அக்கைத்தொழில்களை மட்டும் கொண்ட விடையானது

1.புடைவைக் கைத்தொழில்,தொழில்நுட்ப கைத்தொழில், கப்பல் கைத்தொழில்

2.புடைவைக் கைத்தொழில், இரும்புருக்கு கைத்தொழில், நிலக்கரி கைத்தொழில்

3.விமான கைத்தொழில், நிலக்கரி கைத்தொழில், இரும்புருக்கு கைத்தொழில்

4.இரும்புருக்கு கைத்தொழில், தங்கக் கைத்தொழில், விமானக் கைத்தொழில்

33.சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட புரட்சி

1.அமெரிக்க புரட்சி 2.ரஷ்யப் புரட்சி 3.ஆங்கிலப்புரட்சி 4.பிரான்சியப்புரட்சி

34.இந்திய அரசியலில் மிக முக்கிய சம்பவமாக கருதப்படும் சிப்பாய்க் கலகத்தினால் ஏற்பட்ட விளைவுயாது?

1.இந்தியர்கள் பல பிரதேசங்களில் கிளர்ச்சிகளை மேற்கொண்டமை

2.பிரித்தானியர் இந்தியரின் பிரச்சினைகள் தொடர்பில் கவனித்தமை

3.இந்தியா பிரித்தானியரின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தமை

4.இந்திய தேசிய காங்கிரஸ் உருவாகியமை

35.ஜப்பான் வரலாற்றறிஞர்கள் டொகுஹாவா ஷோகுன்னின் காலத்தை வரலாற்றில் பொற்காலம் எனக்கூறக் காரணம் யாது?

1.ஜப்பானில் அதிக பகுதி ஷோகுன் நிர்வாகிகளுக்கு ஆட்சிக்குட்பட்டமை

2.ஜப்பான் ஓர் நவீன இராச்சியமாக உருவாகியமை

3.டோக்கியோஉலகின் மிகப்பெரிய நகரமாகியமை

4.சர்வதேச வர்த்தக தொடர்புகள் ஏற்பட்டமை

36.மா ஓ சேதுங் நீண்ட நடைபயணம் (பாத யாத்திரை) செய்வதற்கு ஏதுவான காரணம் யாது?

1.குவோமிடொன்களின் சரிவு

2.சுன்-யன்-சென்னின் படை கொமியுனிஸ்டுகளுக்கு இடைஞ்சல் செய்தல்

3.முன்னோக்கிய பாய்ச்சல் நிகழ்வு தோல்வியுற்றமை

4.சியங்-காய்-செக்குடைய படைகள் தொடர்ந்தும் கொமியுனிஸ்ட் கட்சியினருக்கு இடைஞ்சல் செய்தமை

37.பிரித்தானியரிடமிருந்து இந்தியா சுதந்திரம் பெறும்போது பிரித்தானிய பிரதமராக கடமையாற்றியவர்

1.கிளெமண்ட அட்லி 2.வின்ஸ்டன் சர்ச்சில்

3.மவுண்ட் பெட்டன் சாமி 4.சேர்.ஸ்டெபாட் கிரிப்ஸ்

38.அமெரிக்க ஐக்கிய இராச்சியம் முதலாம் உலக மகா யுத்தத்தில் எப்போது இணைந்தது?

1.ஜேர்மனி, கப்பல்களுக்கு தாக்குதல் நடத்துமாறு அறிவித்தபின்

2.பாரீஸ் நகரத்தை கைப்பற்றிய பின்

3.பேர்ள் துறைமுகத்தின் மீதான குண்டுவெடிப்பின் பின்

4.லூசித்தானியா கப்பல் மூழ்கடிக்கப்பட்ட பின்

39.ஜேர்மனியில் அடொல்ப் ஹிட்லரால் தேசத்தின் விரோதமாக கூறப்பட்ட காரணியாவது

1.பெல்பர் பிரகடனம் 2.சகலருக்கும் நியாயம் எனும் ஒப்பந்தம்

3.பாரிசவாதம் 4.வர்சேலஸ் ஒப்பந்தம்

40.ஐக்கிய நாடுகள் ச பை சமாதானம் தொடர்பில் முதலில் தீர்வு கண்ட கலகம்

1.தென்னாபிரிக்க வர்ணபேத கலகத்தை தீர்த்தல்

2.கியூபாவின் மிசைல் நெருக்குதலுக்கு தீர்வு காணல்

3.ஈரானினுள் நிலை கொண்டிருந்த சிவப்பு படையினை அகற்றியமை

4.ருவாண்டாவில் காணப்பட்ட கோத்திர வேறுபாட்டை ஒழித்தமை

# அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு எதிரான வழக்கின் குற்றப்பத்திரிகையை கிழிக்க உத்தரவு

அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு எதிரான வழக்கொன்றில் பொலிசார் தாக்கல் செய்திருந்த குற்றப்பத்திரிகையின் சில பக்கங்களை கிழித்தெறியுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காலஞ்சென்ற பிரபல மருத்துவ நிபுணர் திருமதி சிவா சின்னத்தம்பி கொழும்பு-07 இல் அமைந்துள்ள பல கோடி ரூபா பெறுமதியான தனது வீடொன்றை பல்கலைக் கழக மாணவிகளின் விடுதிக்கு அன்பளிப்புச் செய்திருந்தார்.

முன்னைய அரசாங்கத்தின் உயர்கல்வி அமைச்சராக இருந்த எஸ்.பி. திஸாநாயக்க இந்த வீட்டில் இருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களை திருடிச் சென்றுள்ளதாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டியிருந்தனர்.

இது தொடர்பாக செய்தி இணையத்தளங்கள் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களில் அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்கவுக்கு எதிரான செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்நிலையில் அவருக்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்திலும் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் குற்றப்பத்திரிகையில் இணையத்தள செய்திகள் உள்ளிட்ட செய்திகளையும் பொலிஸார் இணைத்திருந்தனர்.

இதனைக் கண்ணுற்ற கொழும்பு பிரதான நீதவான் நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய, குற்றப்பத்திரிகையில் செய்திகள் இணைக்கப்பட்டுள்ள பக்கங்களை கிழித்தெறியுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தற்போது வெளிவந்துள்ள தகவல்களின் பிரகாரம் குறித்த வீட்டை கறுவாத்தோட்ட பொலிஸார் பொறுப்பெடுத்த போது தளபாடங்கள் காணாமல் போயிருக்கவில்லை என்றும், பொலிஸாரின் கண்காணிப்பில் வீடு பராமரிக்கப்பட்ட காலத்திலேயே வீட்டில் இருந்த தளவாடங்கள் காணாமல் போயிருபபதும் தெரியவந்துள்ளது. (இ-7-10)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா:25 சூரி, செவ்.2 இல்<br>தகைமை/தொழில் B.Sc பொறியிலாளர்<br>தொ.இ: B/5212 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 31 செவ் 12 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5213 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா: 75<br>உயரம்: 5’10"<br>தகைமை/தொழில்: BCS தனியார்<br>தொ.இ: B/5214 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 38<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5215 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 40 சூரி,செவ். 5இல்<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/5216 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 28 செவ். 8 இல்.<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5217 |
| பிறப்பு: 1975 RC<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:7.25<br>தகைமை/தொழில்:O/L பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/5220 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 61 செவ்.7 இல்.<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்:B.A/ அரச தொழில்<br>தொ.இ: G/5218 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.




# சிறுவர் அரங்கம்

1293

# சிங்கராஜாவும் மூன்று நண்பர்களும்



அந்தக் காட்டில் காகம், நரி, சிறுத்தை மூன்றும் நண்பர்களாக இருந்தன. மூன்றுமே முழுச்சோம்பேறிகள். வேட்டைக்குப் போகாமலேயே இரை கிடைக்க வேண்டும்,

கிடைக்கிற இரையைத் தின்றுவிட்டுத் தூங்க வேண்டும். இதை மட்டுமே மூன்றும் செய்து வந்தன.

நாளாக நாளாகக் காட்டில் இரை கிடைப்பதில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. உட்கார்ந்த இடத்திலேயே இரை கிடைப்பதில்லையே என்ன செய்யலாம் என மூன்றும் குழப்பத்தில் திண்டாடின.

அப்போது காகம் ஒரு யோசனை சொன்னது.

"காட்டு ராஜாவான சிங்கத்துக்கு மட்டும் தினமும் நல்ல இரை கிடைத்து விடுகிறது. நாம் மூவரும் சிங்க ராஜா விடம் வேலை கேட்டுப் போகலாமா?"

"அய்யோநம்மளால வேலை எதுவும் செய்ய முடியாது" என்று அவசரமாக மறுத்தது சிறுத்தை.

"உன்னை யாரு வேலை செய்யச் சொன்னது? வேலை செய்யிற மாதிரி நடிச்சா போதும்" என்றது நரியும்.

மூன்றும் யோசித்து ஒரு திட்டம் தீட்டின.

அடுத்த நாள் சிங்க ராஜாவின் குகையருகே பதுங்கிப் பதுங்கிப் போனது நரி. இதைப் பார்த்த சிங்க ராஜா, "என்ன நரி யாரே யாரைக் கண்டு பயந்து இப்படிப் பதுங் கிப் போறீங்க?" என் றது.

"வேறு யாரைக் கண்டு? நம்ம காகம், சிறுத்தையாரின் கண்களில் பட்டுவிடக் கூடாது என்பதற்காகத் தான்.!"என்றது நரி.

"நீ எவ்வளவு பெரிய புத்திசாலி நீ



போய் காகத்துக்கும் சிறுத்தைக்கும் பயப்படலாமா?" என்று சிங்கம் கேட்டது.

"சரியாகத்தான் கேட்டீர்கள், சிங்க ராஜா. நீங்கள் நினைப்பது போல் அந்தச் சிறுத்தையும் காகமும் சாதாரணமானவை அல்ல, அவை இரண்டுக்கும் மிகப் பெரிய சக்தி ஒன்று உள்ளது" என்றது நரி.

"அப்படியென்ன சக்தி?" ஒன்றும் புரியாமல் கேட்டது சிங்கம்.

"என்ன சிங்க ராஜா, அப்படிக் கேட்டுட்டீங்க. அந்தக் காகம் உட்கார்ந்த இடத்திலேயே, காட்டில் எந்த மூலையில், எந்த விலங்கிருக்கிறது என்பதைத் தனது சின்ன அசைவிலேயே கண்டு பிடித்து விடும். அதேபோல், அந்தச் சிறுத்தை லேசாய் ஒரு உறுமு உறுமி னாலே போதும். எந்த விலங்கும் தப்பித்து ஓட முடியாமல் உணவாகி விடும்!"என்றது நரி.

சிங்கராஜா இவற்றை உண்மையென்று நம்பிவிட்டது. 'ஆகா, இப்படிப் பட்ட இருவர் நம் அருகில் இருந்தால் நமக்கு மிகுந்த உதவியாக இருக் குமே!' என்று ஆசைப்பட்டது சிங்கம்.

சிங்க ராஜாவின் மனவோட்டத்தைப் புரிந்துகொண்ட நரி, "சிங்க ராஜா, விருப்பம் இருந்தால், அவர்கள் இருவரையும் தங்களின் உதவியாளராக இருக்க சம்மதிக்க வைத்து

"அப்படியே ஆகட்டும்" என்று தலையை ஆட்டியது சிங்கராஜா.

சொல்லிவிட்டுப் போன மறுநாள் தனது இரு நண்பர்களோடு வந்து சிங்க ராஜாவின் குகையிலேயே தங்கி விட்டது நரியும்.

தூங்கி எழுந்ததும் காகம் இறக்கையைப் படபடவென அடித்தது. சோம்பல் முறித்தபடி சிறுத்தை உறுமியது. பிறகு இரண்டும் கண்களை மூடி அப்படியே படுத்துக்கொண்டன.

இதுதான் சமயமென்று நரியும், "சிங்க ராஜா, வடக்கு மூலையிலே ஏதோ பெரிய விலங்கு உங்களுக்காகக் காத்திருக்கு. அதைத்தான் இருவரும் உங்களுக்குத் தனது செய்கையால் உணர்த்துகிறார்கள்" என்று சொன்னது.

சிங்க ராஜாவும் வடக்கு மூலை நோக்கி பாய்ந்து சென்றது. ஒரு மானை வேட்டையாடி இழுத்து வந்தது.

'ஆகா, நாம ஏதோ சொல்லப் போக, அதுவும் பொருத்தமா ஏதோ ஒண்ணு மாட்டிக்கிட்டது!' என்று உள்ளூர சந்தோஷப்பட்டுக்கொண்டது நரி.

சிங்க ராஜாவோடு சேர்ந்து மூன்றும் மானைத் தின்று முடித்தன. தினமும் வகைவகையான உணவு உட்கார்ந்த இடத்துக்கே தேடி வந்து கிடைத்தால்? காகம், நரி, சிறுத்தையின் சந்தோஷத்துக்கு அளவேயில்லை.

மூன்றுக்கும் ஒருநாள் ஒட்டகத்தின் கறி சாப்பிடும் ஆசை வந்தது. மேற்குத் திசையில்தான் ஒட்டகங்கள் இருக்கும். அந்தத் திசை பார்த்து சிறுத்தை உறுமியது. காகமும் இறக்கையைப் படபடவென அடித்தது.

(தொடரும்)




284 - டயோக்கிளேசியன் ரோமப் பேரரசின் மன்னன் ஆனான்.

1194 - இத்தாலியின் பலேர்மோ நகரம் ஆறாம் ஹென்றியால் கைப்பற்றப்பட்டது.

1658 - இலங்கையில் போர்த்துக்கீசர் மீதான வெற்றியைக் குறிக்க இந்நாள் டச்சு ஆட்சியாளர்களினால் நன்றி தெரிவிப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

1700 - சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்ஸ் நார்வா என்ற இடத்தில் ரஷ்யாவின் முதலாம் பீட்டரைத் தோற்கடித்தான்.

1910 - பிரான்சிஸ்கோ மடேரோ மெக்சிகோ அதிபர் போர்பீரியோ டயஸ் என்பவரைப் பதவியில் இருந்து அகற்றிவிட்டதாகவும் தன்னை ஜனாதிபதியாகவும் அறிவித்தார். மெக்சிக்கோ புரட்சி ஆரம்பமாயிற்று.

1917 - உக்ரேன் குடியரசாக அறிவிக்கப்பட்டது.

1923 - ஜேர்மனியின் நாணயம் பேப்பியர்மார்க் ரெண்டென்மார்க் ஆக மாற்றப்பட்டது. (1 ரெண்டென்மார்க் ஸ்ரீ 1 திரில்லியன் பேப்பியர் மார்க்)

1936 - ஸ்பானிய அரசியல்தலைவர் ஜோசே அண்டோனியோ பிறிமோ டெ ரிவேரா கொல்லப்பட்டார்.

1940 - இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி, ருமேனியா, சிலவாக்கியா ஆகியன அச்சு அணி நாடுகள் அமைப்பில் இணைந்தன.

1947 - இளவரசி எலிசபெத் இளவரசர் பிலிப்பை திருமணம் புரிந்தார்.

1962 - சோவியத் ஒன்றியம் தனது ஏவுகணைகளை கியூபாவில் இருந்து அகற்றுவதாக வாக்குறுதி அளித்ததை அடுத்து, ஐக்கிய அமெரிக்கா கரிபியன் நாட்டுக்கெதிராக கொண்டுவந்த பொருளாதாரத் தடைகளை திரும்பப் பெற்றுக் கொண்டது.

1977 - ஆறு ஆண்டுகள் சிறைக்குப் பின் ஜனதா விமுக்தி பெரமுன தலைவர் றோகண விஜேவீர விடுதலை செய்யப்பட்டார்.

1979 - சவுதி அரேபியாவில் மெக்காவில் காபா மசூதியைத் தாக்கிய சுணி முஸ்லிம் தீவிரவாதிகள் 6,000 பேரைப் பணயக் கைதிகளாக்கினர். பிரெஞ்சுப் படைகளின் உதவியுடன் இத்தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

1985 - மைக்ரொசொஃப்ட்டின் விண்டோஸ் 1.0 வெளியிடப்பட்டது.

1988 - ராஜிவ் காந்திக்கும் மிக்கைல் கோர்பசேவுக்கும் இடையே இரு அணு உலைகளைக் கூடங்குளத்தில் அமைப்பது என்ற ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டது. எனினும் சோவியத் கலைப்பை அடுத்து இத்திட்டம் கைவிடப்பட்டது.

1992 - இங்கிலாந்தில் வின்சர் அரண்மனையில் தீ பரவியதில் பலத்த சேதம் ஏற்பட்டது.

1993 - மகெடோனியாவில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 116 பயணிகளில் 115 பேரும் 8 சிப்பந்திகளும் உயிரிழந்தனர்.

1994 - அங்கோலா அரசுக்கும் யுனீட்டா தீவிரவாதிகளுக்கும் இடையே சாம்பியாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியதில் 19 ஆண்டு கால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. எனினும் அடுத்த ஆண்டு போர் மீண்டும் ஆரம்பமாயிற்று.

1998 - பன்னாட்டு விண்வெளி நிலையத்தின் முதலாவது பகுதி சாரியா விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

1999 - மன்னார் மடு தேவாலயம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 42 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

**பிறப்புக்கள்**

1750 - திப்பு சுல்தான், மைசூர் பேரரசன் (இ. 1799)

1901 - நாசிம் ஹிக்மட், துருக்கிய கவிஞர் (இ 1963)

1923 - நதீன் கோர்டிமர், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்க எழுத்தாளர் (இ. 2014)

1942 - ஜோ பைடன், அமெரிக்க துணைத் தலைவர்

1980 - ஷாலினி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

**இறப்புகள்**

1910 - லியோ தல்ஸ்தோய், ரஷ்ய எழுத்தாளர் (பி. 1828)

**சிறப்பு நாள்**

யுனிசெஃப் - குழந்தைகள் நாள்

மெக்சிக்கோ - புரட்சி நாள் (1910)

வியட்நாம் - ஆசிரியர் நாள்

நன்றி உணர்வில் கிடைப்பதுபோல ஆனந்தம் வேறெதிலும் கிடைப்பதில்லை.
- ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஏகலைவன் பெரு விரலைக் கொடுத்தான் மாணவர்களே! நீங்கள் என்ன கொடுப்பீர்கள்

அதுவொரு பாடசாலை போல இருக்கிறது. ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்குப் பாடம் புகட்டிக் கொண்டிருந்தார். பிள்ளைகளே! குருவுக்கு மரியாதை-மதிப்பு செய்வது மாணவர்களின் தலையாய கடமை.

குருவை நிந்தனை செய்வது மிகப்பெரும் பாவம். ஆகவே எமக்குக் கற்றுத் தந்த ஆசான்களை போற்றி வணங்குவது எங்கள் வாழ்வின் சிறப்புக்கு வழிவகுக்கும். இப்படிக்கூறிய அந்த ஆசிரியர், மாணவர்களே! உங்களுக்கு ஏகலைவன் பற்றித் தெரியுமா? என்று கேட்டார். மாணவர்கள் தெரியாது என்றார்கள்.

மாணவர்களே! ஏகலைவன் மிகச் சிறந்த குரு பக்தி உடையவன். வில்வித்தையை பயில வேண்டும் என்பது அவனின் நீண்ட நாள் விருப்பம். எனினும் அவனின் விருப்பத்தை நிறைவேற்ற துரோணர் மறுத்து விட்டார்.

இந்நிலையில் துரோணரை தனது மானசீகக் குருவாகக் கொண்டு வில்வித்தையைக் கற்க ஆரம்பித்து அதில் விற்பன்னன் ஆகினான் ஏகலைவன்.

ஒருநாள் துரோணாச்சாரியாரும் அருச்சுனனும் காட்டுக்குச் செல்கின்றனர். சுவடவே அவர்களின் நாயும் செல்கிறது. காட்டில் ஏகலைவன் செய்து வைத்திருந்த துரோணாச்சாரியாரின் சிலை மீது அந்த நாய் சிறுநீர் கழித்தது. இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஏகலைவன் தன் அம்பை எடுத்து நாய் மீது ஏவினான். அந்த மாத்திரத்தில் நாய் வீழ்ந்து உயிர் துறந்தது.

அம்புபட்டு நாய் உயிரிழந்து கிடப்பதைப் பார்த்த துரோணர் அதிர்ச்சி அடைந்தார். என்ன அதிசயம் ஒரு அம்பு ஆயிரம் துளைகளை நாய் மீது ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வில்வித்தையை நான் அருச்சுனனுக்கு மாத்திரமே சொல்லிக் கொடுத்தேன்.

இந்தக் காட்டில் யார் இந்த வில்வித்தையை பயின்றுள்ளது என்று அதிசயித்த துரோணர், நாய் மீது அம்பு எய்தியது ஏகலைவன் என்று அறிகிறார். ஓர் அம்பில் ஆயிரம் துளையிடும் கலையை ஏகலைவன் பிரயோகிப்பதை துரோணர் விரும்பவில்லை.

இதனால் தன்னை மானசீகக் குருவாகக் கொண்ட ஏகலைவனிடம் அவனது வலது கரத்து பெருவிரலை குரு தட்சணையாகக் கேட்க, ஏகலைவன் தன் விரலை வெட்டி தனது மானசீகக் குருவான துரோணருக்கு குரு தட்சணையாகக் கொடுக்கிறான்.

பார்த்தீர்களா மாணவர்களே! தனக்குப் படித்துக் கொடுக்காத குரு மீது ஏகலைவனுக்கு இத்துணை பக்தியிருக்குமாயின் கற்றுக் கொடுத்த ஆசான் மீது உங்களுக்கு அதீத பக்தி இருக்கவேண்டுமல்லவா? ஆசிரியரின் கேள்விக்கு மாணவர்கள் ஆம் என்று உரத்த குரலில் பதில் சொன்னார்கள்.

அது சரி, நீங்கள் படித்துப் பட்டம் பெற்று பெரியவர்களான பின் உங்களின் குருதட்சணை என்னவாக இருக்கும்? இப்படி ஆசிரியர் கேட்க, ஒரு மாணவன் எழுந்து சேர் நான் பெரியவன் ஆனதும் நீங்கள் அப்போது என்ன பதவியில் இருக்கிறீர்களோ! அந்தப் பதவியில் இருந்து ஆளை நீக்கு என்று சொல்லுவேன் என்றான். ஆசிரியர் அதிர்ந்து போனார்.

அச் சமயம் எழுந்த இன்னொரு மாணவன், சேர் கவலைப்படாதீர்கள். இது கலி காலம் குரு தட்சணை இப்படித்தான் இருக்கும். இருந்தாலும் குருவின் தட்சணை பலமாக இருந்தால் எல்லாம் சரியாகும் என்றான் பலத்த குரலில். அந்த மாணவனின் உரத்த குரலில் திடுக்குற்றேன். கண்டது கனவு என்பது அப்போதுதான் தெரிந்தது.

# நேர்முகப் பரீட்சைக்கு 23-ம் திகதி சமுகமளிக்கவும்

தேசிய கல்வியியற் கல்லூரியில் 2015 ஆம் ஆண்டுக்கான கற்பித்தலில் தேசிய டிப்ளோமாவிற்கு மாணவர்கள் சேர்ப்பதற்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை கடந்த 16 ஆம் திகதியில் இருந்து நடைபெற்று வருகின்றது.

தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக வெளிமாவட்டங்களில் உள்ள மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க முடியவில்லை.

எனவே அன்றைய தினம் சமுகமளிக்க முடியாத மாணவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி சமுகமளிக்குமாறு கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார். (இ-9)

# வித்தகம் நிகழ்வு நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் வித்தகம் நிகழ்வு நாளை சனிக்கிழமை நல்லூர் கம்பன் கோட்டத்தில் பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது பாரதி பெரிதும் விரும்பியது என்ற தலைப்பில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராக பங்கேற்கும் சிறப்பு விவாத அரங்கம் இடம்பெறும்.

தலைமையுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்தவுள்ளார். (இ-5)

# வாகனங்களில் மிகை ஒலி; இன்று முதல் வருகிறது தடை

## மிகை ஒலி உடல், உளப் பாதிப்பை ஏற்படுத்தும்

(கொழும்பு)

இன்று தொடக்கம் மிகை ஒலி எழுப்பும் வாகன ஒலி எழுப்பும் கருவிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது. வாகன மிகை ஒலி கருவிகளால் ஏற்படுத்தப்படும் சுற்றாடல் மாசு மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறை தவிர்க்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்படி பொலிஸ், மோட்டார் வாகனத் திணைக்களம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் லால் தர்ம சிறி தெரிவித்துள்ளார்.

இத்னைப்போல போக்குவரத்து வாகனங்களில் அதிக சத்தத்துடன் பாட்டுகள் ஒலிபரப்பவும் கடந்த நாட்களில் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை வாகனங்களில் இருந்து எழுப்பப்படும் மிகை ஒலி தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மத்திய சுற்றுச் சூழல் அதிகாரசபை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வெளியிடப்பட்டுள்ள 1737/37 சுற்றுநிருபத்தில் இரண்டு மீற்றருக்கு உட்பட்ட தூரத்திற்கு ஒலியானது 105 டெசிபிள் (Decibel) அளவுக்கு மேற்படாதவாறும் 7 மீற்றருக்கு உட்பட்ட தூரத்திற்கு 93 டெசிபிள் அளவுக்கு மேற்படாதவாறும் இருத்தல் வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அம்புலன்ஸ், புகையிரதம், தீயணைப்புக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள், பொலிஸார் மற்றும் படையினர் பயன்படுத்தும் வாகனங்கள் போன்றவற்றுக்கு மேற்படி சுற்றுநிருபம் பொருத்தமுடையதல்ல.

அவசரகால நிலைமைகளின் கீழ் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கும் இந்த சுற்றுநிருபம் விதிவிலக்களிக்கிறது.

வாகன சாரதிகள் அடிக்கடி மிகை ஒலி எழுப்புவதனால் மன அழுத்தம், உயர் குருதியமுக்கம் மற்றும் செவிப்புலன் தொடர்பான பிரச்சினைகளும் ஏற்படுவதுடன் அதிக விபத்துக்களும் ஏற்படுவதாக மத்திய சுற்றுச் சூழல் அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது. (3)

# மகிந்தவின் மீது இன்று விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இன்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

பாரிய நிதி மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் நேற்றைய தினம் ஆஜராகுமாறு மகிந்தவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்த விசாரணைகள் இன்று வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சுயாதீன தொலைக்காட்சி சேவையில் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் செய்யப்பட்ட பிரசாரங்களுக்கு பணம் செலுத்தப்படாமை குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரப் பிரசாரங்களுக்காக பெருந்தொகை நிலுவைப் பணம் செலுத்த வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றையதினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விசாரணைகளில் ஆஜராகவில்லை. மகிந்தவின் சட்டத்தரணிகள் விசாரணைக்குழு முன்னிலையில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### விரைந்து நன்மை செய்வோம்

★ எவர் தமக்கு கடன் கொடுத்தவரை திருப்தியோடு அனுப்பி வைக்கின்றாரோ, அவருக்காக தரையில் உள்ள எல்லா பிராணிகளும் பாவ மன்னிப்பு கோருகின்றன.

★ கடன்பட்ட ஏழைக்கு அவகாசம் அல்லது கடனை நீக்கி விடுபவர்க்கு, மறுமையில் அல்லாஹ் தனது சிம்மாசனத்தின் நிழலில் இடம் தருவான்.

★ உங்களில் எவரேனும் யாருக்காவது கடன் கொடுத்துஇருந்தால் கடன் வாங்கியவர் உங்களுக்கு அன்பளிப்பு செய்தால் அல்லது அவருடைய வாகனத்தில் ஏறும் சூழ்நிலை ஏற்பட்டால் அது தவிர்க்க வேண்டிய செயலாகும்.

★ அவசரத்தை வெறுத்து ஒதுக்கும் இஸ்லாம், நன்மையான காரியங்களை விரைவாக செயற்படுவதை வரவேற்கின்றது. மறுமையின் காரியங்களைத் தவிர மற்ற அனைத்திலும் நிதானம் சிறப்பைத் தரும்.

★ அழிவைத் தரும் அவசரம் மனிதனின் விரோதியாகும். அந்த விரோதியை அழிக்க அவன் கடுமையாகப் போராட வேண்டும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2015

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளை விடச்சிறந்தது எதுவும் இல்லை"

*-சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)*



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சுற்றப்பட்டுள்ள (மேலுறைக்) காகிதம்

உலகில் ஐம்புலன்களும் அனுபவிக்கிற இன்பங்கள் எல்லாம் பரிசுப் பொருட்களைச் சுற்றியுள்ள காகித உறைகள் போல் உள்ளன; உண்மையான பெருமகிழ்ச்சியைத் தருவது உள்ளே உள்ளது (இறை) (சாந்நித்தியம்)

தெய்வீக அன்புதான் பரிசுப்பொருள். ஆயினும் அலங்காரக் காகிதத்தை மட்டும் நாம் பற்றிக் கொண்டு இருக்கிறோம்.

ஏற்கனவே அனுபவித்துவிட்டோம் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். இது மேலுறையைப் பிரிக்காமலே சொக்லேட்டை வாய்க்குள் போடுவதற்கு ஒப்பாகும். சிறிதளவு சொக்லேட் ஒழுகி உங்கள் வாய்க்குள் போகலாம். ஆனால் அதன்மேல் சுற்றப்பட்டுள்ள காகிதம் வாயில் புண்களை ஏற்படுத்தும்

பரிசுப்பொருள் சுற்றப்பட்டுள்ள அந்த அலங்காரக் காகித உறையைப் பிரியுங்கள். அங்குதான் நீங்கள் மகிழ்வதற்கு முழு உலகமும் இருக்கிறது. ஞானிகள் உள்ளே இருக்கும் பரிசுப்பொருளை எப்படி அனுபவிப்பது என்று அறிவார்கள். ஆனால் பரிசுப் பொருள் சுற்றப்பட்டுள்ள அநத அலங்காரக் காகிதத்தை மட்டுமே பற்றிக்கொண்டிருப்பவர்கள் அஞ்ஞானிகள், அறியாமையில் உழலும் ஏமாளிகள்.

குறிப்பு:வெல்லி, குருஜீயிடம் சொன்னார்: அமெரிக்காவில் ஆசிரமமாகப் பயன்படுத்த எங்களிடம் கொஞ்சம் சொத்து இருக்கிறது. குருஜீ பரிசீலிக்கலாமே.

ஸ்ரீஸ்ரீ:ஒவ்வொரு இல்லமும் ஆசிரமமாக விளங்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்

உங்களில் எத்தனைபேர் உங்களது இல்லத்தை ஓர் ஆசிரமமாகக் கருதுகின்றீர்கள்? அவ்வாறு இல்லையானால் உங்கள் இல்லம் ஆசிரமமாவதற்குத் தடையாக இருப்பது எது? அத்தடைகள் யாவை? ஓர் ஆசிரமம் என்றால் எப்படி இருக்கவேண்டும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள்.

# கடைசி டெஸ்ட் போட்டி இந்திய அணி அறிவிப்பு



தென் ஆபிரிக்காவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் விளை யாடவிருக்கும் இந்திய அணி அறி விக்கப்பட்டுள்ளது.

அணி விபரம்

விராட் கோலி (அணித்தலை வர்), முரளிவிஜய், ஷிகர் தவான், புஜாரா, ரஹானே, ரோகித் சர்மா, விருத்திமான் சஹா, அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, அமித் மிஸ்ரா, வருண் ஆரோன், இஷாந்த் ஷர்மா, புவனேஷ்வர் குமார், உமேஷ் யாதவ், லோகேஷ் ராகுல், ஸ்டூவர்ட் பின்னி, குர்கீரத்சிங் மான்.

## ஜோகோவிச்சை வீழ்த்திய ரோஜர் பெடரர்



ஏ.டி.பி. உலக டூர் இறுதி சுற்று எனப்படும் உலக ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. இதில் ஒற்றையர் பிரிவில் தரவரிசையில் முதல் 8 இடம் வகிக்கும் வீரர்களும், இரட்டையரில் டாப்-8 ஜோடிகளும் பங்கேற்றுள்ளனர். அவர்கள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளனர்.

இதில் நேற்று முன்தினம் நடந்த ஒரு ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 7-5, 6-2 என்ற நேர் செட் கணக்கில் நடப்பு சம்பியனும், 'நம்பர் ஒன்' வீரருமான ஜோகோவிச்சை (செர்பியா) வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். இதன் மூலம் தொடர்ச்சியாக 15 ஆட்டங்களில் வென்றிருந்த ஜோகோவிச்சின் வீறுநடை முடிவுக்கு வந்தது.

2012ஆம் ஆண்டுக்கு பிறகு உள் அரங்க மைதானத்தில் ஜோகோவிச் சந்தித்த முதல் தோல்வியும் இது தான்.

## ஜோன்சனுக்கு சச்சின் வாழ்த்து

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் மிச்சேல் ஜான்சன் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்தார்.

நியூசிலாந்துக்கு எதிராக பெர்த் மைதானத்தில் முடிந்த டெஸ்டோடு ஜான்சன் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.

சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுள்ள ஜோன்சனுக்கு சச்சின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் "வாழ்த்துக்கள். ஜோன்சன் ஒரு சிறப்புவாய்ந்த பந்து வீச்சாளர். மும்பைக்காக விளையாடிய போது அவரை பற்றி நிறைய தெரிந்துக்கொண்டேன். ஜோன்சனின் ஆக்ரோஷமான அணுகுமுறை எனக்கு விருப்பமான ஒன்று" என தெரிவித்துள்ளார்.

## வெற்றியை நழுவவிட்ட இந்தியா ஆதங்கத்தில் கோலி



தென் ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடிய இந்திய அணிக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

பெங்களூரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட்டின் முதல் நாளில, பந்துவீச்சிலும், துடுப்பாட்டத்திலும் சிறப்பான நிலையை இந்தியா வெளிப்படுத்தியது.

ஆனால், அடுத்த நான்கு நாட்கள் பெய்த தொடர் மழையால் இந்தியாவுக்கு ஏமாற்றம் ஏற்பட்டு ள்ளது.

இதுகுறித்து இந்திய டெஸ்ட் அணித்தலைவர் கோலி கூறியதாவது, ஒவ்வொரு நாளும் மைதானத்திற்கு வந்து போட்டியில் பங்கேற்க இயலாதது எரிச்சலை ஏற்படுத்தும், இருப்பினும் வானிலைய கட்டுப்படுத்த இயலாது.

டெஸ்ட் போட்டியில் நம்பர் 1 இடத்தில் இருக்கும் தென் ஆபிரிக்காவை முதல் நாள் ஆட்டத்திலேயே சுருட்டினோம், மேலும் நான்காவது நாள் ஆட்டத்தில் நாங்கள் துடுப்பெடுத்தாடியிருந்தால் அவர்களுக்கு நெருக்கடி கொடுத்திருக்க இயலும்.

ஆனால் மழை வந்து குறுக்கிட்டதால், வெற்றி வாய்ப்பு நழுவிவிட்டது என்றே சொல்ல வேண்டும் என்று கூறியுள்ளார்

## பாகிஸ்தானின் தோல்விக்காக பயிற்சியாளரை நீக்க வேண்டும்



பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகள் இடையேயான ஒருநாள் கிரிக்கெட் தொடர் தற்போது ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்று வருகிறது.

4 போட்டித் தொடரில் முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி 2 ஆவது, 3 ஆவது ஆட்டத்தில் தோற்றது. 4 ஆவது மற்றும் கடைசி ஆட்டம் நாளை நடக்கிறது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணியின் தோல்விக்காக தலைமை பயிற்சியாளர் வக்கார் யூனுசை நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் கப்டனும், முன்னாள் பயிற்சியாளருமான ஜாவித் மியா ன்டட் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

பாகிஸ்தான் வீரர்களின் செயற்பாடு மிகுந்த ஏமாற்றத்தை தருகிறது. இந்த தோல்விக்கு கப்டன் மட்டும் பொறுப்பு அல்ல. தலைமை பயிற்சியாளரும் பொறுப்பு ஆவார். 11 பேர் கொண்ட அணியை தேர்வு செய்வதில் வக்கார் யூனுஸ் விருப்பு, வெறுப்புகளை காட்டியுள்ளார். இது அணியை மிகவும் பாதித்து உள்ளது.

அகமது ஷேசாத்தை சேர்க்காதது மிகப்பெரிய கேள்வியை ஏற்படுத்தி உள்ளது. இதனால் தலைமை பயிற்சியாளரான வக்கார் யூனுசை நீக்க வேண்டும்.

இவ்வாறு ஜாவித் மியான்டட் கூறியுள்ளார்.இதேபோல மொஷின் கான், சர்பிராஸ் அகமது, ரஷித் லத்தீப், முகமது யூசுப் ஆகிய முன்னாள் வீரர்களும் வக்கார் யூனுசை கடுமையாக சாடியுள்ளனர்.

## குறைந்த ஓவர்களில் முடிந்த இந்தியா -தென்னாபிரிக்கா டெஸ்ட்

பெங்களூரில் நடந்த இந்தியா - தென்ஆபிரிக்கா இடையிலான 2 ஆவது டெஸ்டில் கடைசி நாள் ஆட்டமும் மழையால் ரத்தாகி போட்டி 'சமநிலையில் முடிந்தது.

இந்த டெஸ்டில் மொத்தம் 81 ஓவர்கள் அதாவது 486 பந்துகள் மட்டுமே வீசப்பட்டன. வீசப்பட்ட பந்துகள் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்த்தால், இந்தியாவில் நடந்த 2 ஆவது குறுகிய நேர டெஸ்ட் இதுவாகும். 1995 ஆம் ஆண்டு இந்தியா-நியூசிலாந்து இடையே சென்னை சேப்பாக்கத்தில் அரங்கேறிய டெஸ்டில் 71.1 ஓவர்கள் வீசப்பட்டதே, இந்த வகையில் முதலிடத்தில் உள்ளது. ஒட்டுமொத்த அரங்கில் இது 11ஆவது குறைந்த நேர டெஸ்டாகும்.

1986ஆம் ஆண்டு இந்தியா-அவுஸ்திரேலியா (டில்லி), 1995 ஆம் ஆண்டு இந்தியா-நியூசிலாந்து (சென்னை), 2005ஆம் ஆண்டு இந்தியா-இலங்கை (சென்னை) ஆகிய டெஸ்ட் போட்டிகளில் மழையால் மூன்று நாட்கள் முழுமையாக பாதிக்கப்பட்டு, இரண்டு நாட்கள் அரைகுறையாக ஆட்டங்கள்நடந்தன. ஆனால் ஒரு டெஸ்டில் மழை காரணமாக 4 நாட்கள் முழுமையாக ரத்து செய்யப்பட்டது, இந்தியாவில் இதுவே முதல் முறையாகும். ஒட்டுமொத்தத்தில், ஒரு டெஸ்டில் 4 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் இழப்பு ஏற்படுவது இது 6ஆவது நிகழ்வாகும்.

இந்திய அணி சொந்த மண்ணில் தொடர்ச்சியாக 7 வெற்றிகளுக்கு பிறகு (அவுஸ்திரேலியா-4,மேற்கிந்தியதீவு- 2, தென் ஆபிரிக்கா-1) சந்தித்த முதல் சமநிலை இதுவாகும்.

தென்ஆபிரிக்கா அணி கடைசியாக பங்கேற்ற 4 டெஸ்டில் 10 நாட்கள் ஆட்டத்தை மழையால் பறிகொடுத்திருப்பது வியப்புக்குரிய உண்மையாகும். ஜுலை மாதம் சிட்டகாங்கில் நடந்த பங்களாதேசத்திற்கு எதிரான முதலாவது டெஸ்டில் 2 நாட்கள், டாக்காவில் நடந்த அடுத்த டெஸ்டில் 4 நாட்கள் மழையால் இழப்பு ஏற்பட்டது. தற்போதைய பெங்களூர் டெஸ்டிலும் 4 நாட்களை வருணபகவான் தன்வசப்படுத்தி விட்டார்.

# எதிர்க்கட்சி தலைவரின் கேள்விக்கு பதில் வழங்க மறுத்த முதலமைச்சர்

## அந்நியப்படுத்த முயல்வதாக குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சி தலைவர் தவராசாவன் கேள்விகளுக்கு பதில் வழங்க மறுத்த முதலமைச்சர், பொது மக்களிடமிருந்து எம்மை அந்நியப்படுத்துவதற்கே எதிர்க்கட்சியினர் இவ்வாறன கேள்விகளை கேட்பதாக சபையில் பகிரங்கமாக கூறியதனை அடுத்து ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே கடும் மோதல் ஏற்பட்டிருந்தது.

உங்களில் மோசடிகள், பொய்கள் காணப்படுவதால்தான் பதில் கூற மறுக்கின்றீர்கள் என எதிர்க்கட்சி தலைவர் பகிரங்கமாக கூறியதை அடுத்து தவராசாவின் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் முதலமைச்சர் தகுந்த பதிலளித்தார்.

வடக்கு மாகாண சபையின் முப்பத்தி எட்டாவது கூட்டத்தொடர் நேற்று காலை பத்து மணியளவில் நடைபெற்றது. இதன்போது சபையின் நிகழ்ச்சி நிரலின்படி முதலமைச்சர் மீதான எதிர்க்கட்சி தலைவரின் வினாக்கள் எடுத்து கொள்ளப்பட்டது. அதில் வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களது வாகன உபயோகங்கள் குறித்து கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

எதிர்க்கட்சி தலைவரின் இக் கேள்விகள் குறித்து ஒழுங்கு பிரச்சினை ஒன்றினை ஆளும் உறுப்பினர் அஸ்மின் எழுப்பியிருந்தார். மாகாண சபைகள் நடவடிக்கை ஒழுங்குவிதி பிரிவு இருபதில் முதல் பந்தியில் மற்றும் பிரிவு இருபத்தி ஒன்று, உப பிரிவு இருபத்தி நான்கில் கேள்விகளை சபை செயலாளர்களுக்கு முன் கூட்டியே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மூன்று கேள்விகளுக்கு மேல் கேட்கப்படக்கூடாது. உப கேள்விகளும் மூன்றுக்கு மேல் கேட்கப்படக்கூடாது. சபை நடைபெறும்போது கேள்விகளுக்கு அரை மணித்தியாலங்களே ஒதுக்கப்படல் வேண்டும் என ஒழுங்கு விதிகள் அமைந்துள்ளன. இது இங்கு பின்பற்றப்படுகின்றதா? என கேள்விகளை முன்வைத்தார்.

இதனையடுத்து சீறிப்பாய்ந்த எதிர்க்கட்சி தலைவர், நீங்கள் களவு செய்வதனால்தான் பதில் கூற மறுக்கின்றீர்கள், ஒழுங்கு விதிகள் எனக்கு மட்டும் தானா? இவ்வளவு காலமும் பின்பற்றப்பட்டதா? உங்களுக்கொரு நியாயம் எங்களுக்கொரு நியாயமா? எனப்பல கேள்விகளை அடுக்கிக்கொண்டே சென்றார்.

எதிர்க்கட்சி தலைவரின் குற்றச்சாட்டுக்களை அடுத்து எழுந்த முதலமைச்சர், எமது ஆளுங்கட்சி குழுக்கூட்டத்தின் போது, இவ்வாறான கேள்விகளை கேட்க வேண்டுமாயின் பிரதம செயலரிடம் கேட்டு பெற்றுக்கொள்ள முடியும் என உறுப்பினர்கள் கோரிக்கைகள் முன்வைத்திருந்தனர். என்னையும் இவ்வாறன கேள்விகளுக்கு பதில் சொல்வதனை தவிர்க்குமாறும் கோரியிருந்தனர் என சுட்டிக்காட்டியிருந்தார். முதலமைச்சரின் இந்த நிலைப்பாட்டிற்கு உறுப்பினர்களான விந்தன், கஜதீபன் மற்றும் அஸ்மின் ஆகியோர் உறுதியாக இருந்தனர்.

எனினும் சபை நடவடிக்கைகளை கட்சி கட்டுப்படுத்த முடியாது என எதிர்க்கட்சி தலைவர் ஆவேசப்பட, அதற்கு அவைத்தலைவர் சிவஞானமும் ஒத்துழைத்தார். இதன் போது மகிந்தவின் சர்வாதிகார ஆட்சி போன்று நீங்களும் தானே செயற்படுகின்றீர்கள் என தவராசா கூற, இடையில் குறுககிட்ட சிவாஜி, தவராசாவின் காலம் கடந்த ஞானத்திற்கு பாராட்டுக்கள் என்று கூற சபையில் சிரிப்பொலி எதிரொலித்தது.

பின்பு நிலைமையை அவதானித்த வடக்கு முதலமைச்சர் தவராசாவின் கேள்விகளுக்கு உரிய பதிலை அளித்தார். முதலமைச்சரின் பதிலுக்கு எவ்வித மறுப்பும் தெரிவிக்காது, தனது இருக்கையில் அமர்ந்தார் தவராசா. இவ் விவாதத்தின் போது அவைத்தலைவர் எதிர்க்கட்சி தலைவருக்கு மட்டும் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளிப்பதாகவும், ஏனைய உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதில்லை எனற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டிருந்தது. (எ-4)

# யாழிலிருந்து கொழும்புக்கு கஞ்சா கடத்தப்படுகிறது

## ஒருவர் கைதென பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் - கொழும்புக்கு இடையே பயணிக்கும் பயணிகள் பேருந்துகளில் சிலகாலமாக போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்றுவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பயணிகள் பேருந்துகளில் இருந்து கொண்டுசெல்லப்படும் பொருட்களை பரிமாற்றம் செய்யும் நிலையமாக இயங்கிவந்து கொழும்பு புறக்கோட்டை டாம் வீதியில் உள்ள வர்த்தக நிலையத்திலிருந்து கடத்தக்காரர்கள் போதைப் பொருளினை எடுத்து செல்வதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட கருவாட்டுப் பொதியொன்றைப் பெற்றுக்கொண்டு குறித்த வர்த்தக நிலையத்திலிருந்து வெளியேறிய இளைஞர் ஒருவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று கைது செய்தனர்.

இதன்போது கருவாட்டுப் பொதியிலிருந்து சுமார் இரண்டு கிலோக்கிராம் கேரள கஞ்சாவினை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரினை வாழைத்தோட்ட பொலிஸாரிடம் ஒப்படைத்ததுடன் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (எ-12)

# மூத்த ஊடகவியலாளர் கதிரவேலு காலமானார்



(யாழ்ப்பாணம்)

மூத்த புகைப்பட ஊடகவியலாளர் கலாபூஷணம் ச.கதிரவேலு தனது 84 ஆவது வயதில் இன்று அகால மரணமானார்.

யாழ.நகரின் பத்திரிகை நிறுவனம் ஒன்றின் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த அவரை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது அங்கு அவரது உயிர் பிரிந்தது.

50 வருடங்களுக்கும் மேலாக அவர் ஊடகத்துறையில் சேவை யாற்றியுள்ளார். தமிழாராசிமாநாட்டு படுகொலை, மாவிட்டபுர ஆலய உட்பிரவேச போராட்டம் போன்ற பல நெருக்கடி சமயங்களில் கூட சிறந்த புகைப்பட ஊடகவியலாளராக அவற்றை வெளிக்கொண்டு வந்தவர்.

பொலிஸாரின் தாக்குதலால் தனது ஒற்றைக் கண்ணின் பார்வையையும் இவர் இழந்தார். எனினும் அவரது ஊடகப் பணி தொடர்ந்தது. இவர் ஊடகத்துறையில் ஆற்றிய பங்களிப்புக்காக 2012 ஆம் ஆண்டு கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (எ-12)

# பட்ஜெட்...

வழங்கப்படும்.

அத்துடன் இந்த வரவு செலவுத் திட்டம் அடித்தட்டு மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதுடன், பொதுமக்களின் பொருளாதார ஆற்றலை பாதுகாக்கும் வகையிலும் அமையப் பெற்றிருக்கும்.

குறிப்பாக பொதுமக்களின் எணண ஓட்டங்களை உணர்ந்து கொண்டு அதற்கேற்ற வகையில் இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இன்றைய வரவு செலவுத்திட்டம் மூலமாக பத்து அத்தியாவசியப்பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். (எ-11)

# நாட்டில் வீதி விபத்துக்களினால் இளம் பராயத்தினரே பாதிப்பு

## வடக்கு அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்துக்களால் இளம் பராயத்தினரே அதிகம் உயிரிழக்கின்றனர் என போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் கூறினார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் வட மாகாண போக்குவரத்து அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாணத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்குரிய வீதி பாதுகாப்புக் கருத்தரங்கு நேற்று யாழ். கிறீன் கிறாஸ் விடுதியில் வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கிற்கு பிரதம அதிதியாக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்தரங்கினை ஆரம்பித்து வைத்தனர்.

இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம் கல்விப்புல மாணவர்களை வீதி விபத்தில் இருந்து பாதுகாக்கும் முகமாக பாடசாலை மாணவர்களுக்கான தெளிவுபடுத்தும் இக்கருத்தரங்கு வடமாகாணத்தைச் சேர்ந்த அமைச்சர்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும்பிரதேச செயலாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகபோக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

எமதுநாட்டில் ஒருநாளைக்கு எட்டு வீதி விபத்துக்கள் மூலம் உயிர்இழப்புகள் இடம் பெற்று வருகின்றன.

அவற்றில் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் மற்றும் முதியோர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அதிலும் வடமாகாணத்தில் இளம் வயதினரே அதிகம் வீதி விபத்தின் மூலம் உயிரிழக்கின்றனர் என வடமாகாண போக்குவரத்து புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எனவே இவற்றை குறைப்பதற்கு வடமாகாண போக்குவரத்து துறை; பாடசாலை மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் விசேட செயல் முறையினை நடைமுறைப் படுத்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும் வீதி விபத்தின் மூலம் மக்களின் அசௌகரியங்கள் மற்றும் வீதிகளில் தேவையற்ற விபத்துக்கள், பாடசாலை மாணவர்களுக்கான இடர்பாடுகள் தொடர்பாக இங்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

நிகழ்வில் வடமாகாண அமைச்சர்களான குருகுலராஜா, சத்தியலிங்கம், எதிர்கட்சித்தலைவர் தவராசா, செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-4)

# ஐ.நாவின் தக...

போனவர்கள் குறித்து விசாரிப்பதற்காகச் சென்ற ஐ.நாவின் விசாரணைக் குழு புதன்கிழமை வெளியிட்டு இருக்கின்ற தகவல் அதிர்ச்சி அளிக்கிறது. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை கடற்படைத் தளத்தில் சித்திர வதைக் கூடங்கள் இருந்தன.

2010க்குப் பின்னர் ஈழத் தமிழர்கள் அங்கு தொடர்ந்து சித்திரவதை செய்யப்பட்டதை நிரூபிப்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன, சுவர்களில் படிந்துள்ள இரத்தக் கறைகள், கைரேகைகள், ஈழத் தமிழர்கள் தொடர்ந்து அந்த அறைகளில் சித்திர வதை செய்யப்பட்டு இருக்கின்றார்கள், இதுபோல இன்னும் பல இடங்களில் சித்திரவதை முகாம்கள் இருப்பதற்கான வாய்ப்பு உள்ளன என்றும், அநதக் குழு தெரிவித்து இருக்கின்றது.

இக் குழுவின் தலைவரான கனடாவின் பெர்னார்டு துஹைம் மற்றும் ஆர்ஜென்டீனா நாட்டின் ஏரியல் துருக்கி, தென்கொரியாவின் தவ்-உவ்-பெய்க் ஆகியோர், இது குறித்து மேலும் முழுமையான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று கூறி உள்ளனர்.

மேலும், நாங்கள் அறிந்த மட்டிலுமே 20,000 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இப் பகுதியில் காணாமல் போயிருக்கின்றனர்' என்றும் அவர்கள் கூறி உள்ளனர். இலஙகைத் தீவில் இனப்படுகொலை தொடர்ந்து நடைபெறுகிறது என்பதற்கு மேலும் ஒரு ஆதார சாட்சியாக மூவர் குழுவின் தகவல்கள் அமைந்துள்ளன.

கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையா? இலங்கைக் கொலைக் களத்திற்கு ஆதாரங்களைத் தேட வேண்டுமா?

உலகெங்கும் வாழும் தமிழர்கள், நீதி கிடைக்கவும், விடியல் காணவும் தொடர்ந்து அந்தந்த நாடுகளிலும் அறப் போராட்டங்கள் மூலம் 'அழுத்தம் தர வேண்டியது முக்கியமான கடமை என வ்லியுறுத்துகிறேன். இவ்வாறு கூறியுள்ளார். (எ-11)


கண்ணீர் அஞ்சலி



தம்பிராஜா குகநேசன்

(அம்பிகை களஞ்சியம்)

புங்குடுதிவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலய

பழைய மாணவனும் பாடசாலை மீது அதீத பற்றுக்கொண்டவரும் சமூகப்பற்றாளனுமான தம்பிராஜா குகநேசன் அவர்களின் திடீர் மறைவினால் துயர் அடைவதுடன் அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம்
புங்குடுதீவு.

(C-2751)



வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## ஓர் இலட்சத்து...

அமைத்துக் கொடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும ஊடக சந்திப்பு அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற் றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கை யில்,

முல்லைத்தீவு மணலாறு பிரதேசத்தில் இடம்பெயர்ந்த ஆயிரம் பேருக்கான வீடுகள் அமைத்தல், இருக்கும் வீடுகளைப் புனரமை க்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகா ரம் வழங்கியுள்ளது.

அதேபோல வெள்ளத்தினாலும், போரி னாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய 500 வீடுகளும், மேலும் 500 வீடுகளை திருத்தி யமைத்தலுக்கும் இதனூடாக சந்தர்ப்பம் ஏற் படும்.

மேலும் யாழ். மாவட்டம் மற்றும் அதனை அண்மித்த தீவுகளில் வாழும் மக்களின். வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

புங்குடுதீவு, நயினாதீவு மண்டைதீவு உள்ளிட்ட 6 தீவுகளில் 15 ஆயிரம் குடும்ப ங்கள் வரை வசிக்கின்றன.

இவர்கள் பிரதான பகுதிகளுக்கு செல்வ தற்கு அதிக நேரமும், செலவினமும் ஏற்படு கின்றது.

இந்த நிலையில் சிறந்த போக்குவரத்து அமைப்பதற்கும், வாழ்க்கைத் தரத்தை முன் னேற்றுவதற்கும் 10 வேலைத்திட்டங்கள் இத னூடாக முன்னெடுக்கப்படவுள்ளன என்றார்.

இதேவேளை வடமாகாணத்தில் வெள்ளம காரணமாக ஓர் இலட்சத்து 35 ஆயிரத்து 154 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகா மைத்துவ மத்திய நிலையம் நேற்று வியா ழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்திலேயே அதிகளவானோர பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கமைய அந்த மாவட்டத்தில் 87 ஆயிரத்து 684 பேர் பாதி க்கப்பட்டுள்ளதுடன், 4 ஆயிரத்து 827 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அதற்கு அடுத்தபடியாக கிளிநொச்சி மாவ ட்டத்தில் 22 ஆயிரத்து 990 பேர் பாதிக்கப்ப ட்டுள்ளதோடு, 882 பேர் இடம்பெயர்ந்துள் ளனர்.

மன்னார் மாவட்டத்தில் வெள்ளத்தினால பாதிக்கப்பட்ட 16 ஆயிரத்து 23 பேரில் 491 பேர் இடம்பெயர்ந்து 136 தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக நாடளாவிய ரீதியில் ஏற் பட்டுள்ள வெள்ளம் மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 259 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 6 ஆயிர த்து 224 பேர் இடம்பெயர்ந்து, ஆயிரத்து 749 தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றார். (எ-11)

## ஐ.நாவிடம்...

வித்துள்ளார்.

பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட் டோர் குறித்த ஐ.நா பணிக்குழுவினர் கொழு ம்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தி யாளர் சந்திப்பின் போது, தம்மைச் சந்தித்த பலர் அச்சுறுத்தப்பட்டதாகவும், சாட்சிகளைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தனர்.

அரச தரப்புடனான சந்திப்பின் போதும், ஐ.நா குழுவினர் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்திருந்தனர்.

இது குறித்து கொழும்பில் செய்தியாளர்க ளிடம் கருத்து வெளியிட்ட, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இலங்கை வந்த ஐ.நா குழுவினர் தமது பயணத்தின் முடிவில் என்னைச் சந்தித்து தமது பயணம் குறித்து விளக்கமளித்திருந்தனர்.

இதன்போது தமது குழுவினரைச் சந்தித் தவர்கள் அச்சுறுத்தப்பட்டதாக அவர்கள் முறை யிட்டனர்.

அவ்வாறு யாராவது அச்சுறுத்தல் விடுத்தி ருந்தால் அது குறித்து விசாரணை நடத்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறான செயற்பாடுகள் அரசாங்கத் தின் கொள்கையாக இருக்காத போதும், ஒரு சிலர் இன்னமும் பழைய சிந்தனையுடன் செயற்படுகின்றனர். இவ்வாறு செயற்படுபவ ர்கள் ஒவ்வொரு நிறுவனத்திலும் இருப்பது எமக்குத் தெரியும். குற்றச்சாட்டு உண்மை யாயின் விசாரணை நடத்தி அவ்வாறானவ ர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட விடயங்களை ஐ.நா குழு வலியுறுத்தியுள்ளது. இந்த விடய த்தை அரசாங்கம் ஏற்கெனவே ஏற்றுக் கொண்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது காலம் கடந்த ஒன்று. இந்தச்சட்டத்தை நீக்கிவிட்டு தற்போதைய சூழலுக்குப் பொருத்தமான மற்றும் அனைத்துலக பயங்கரவாதத்துக்கு முகங்கொடுக்கக் கூடிய புதிய சட்டமொன்றைக் கொண்டு வருவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார். (எ-11)

## பொருளாதார...

பதே இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட யோசனை கள் தொடர்பில் இறுதி ஆராய்வு நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற் றதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

இதன்போது பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக விவகார அமைச்சர் மலிக் சமர விக்கிரம, மத்திய வங்கியின் ஆளுனர் அர்ஜுன் மகேந்திரன், நிதி அமைச்சின் செயலாளர் ஆர்.எச்.எச். சமரதுங்க உள்ளிட்டவர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

இதேவேளை, வரவு செலவுத் திட்டம் தொட ர்பிலான விசேட அமைச்சரவைக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள தாக அமைச்சரவை பேச்சாளர் கயந்த கரு ணாதிலக்க கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க நேற்று முற்பகல் ஊடகவியலாளர் களை சந்தித்தார். இதன்போது, சமர்ப்பிக்கப் படவுள்ள வரவு செலவுத்திட்டம் தொடர்பில் பின்வருமாறு தெரிவித்தார்,

இந்த வரவு செலவு திட்டம் மூலம் நாம் கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், இளையோர் விவகாரங்களுக்கு முக்கியத்து வம் அளித்துள்ளோம். ஊழல் மற்றும் வீண் விரயத்தை முற்றாக ஒழித்து மக்களிடம் இரு ந்து அறவிடப்படுகின்ற வரிப்பணத்தை முன் னுரிமை அடிப்படையில் மீள அவர்க ளிடமே கொண்டு சேர்ப்பதற்கு நாம் முயற்சி க்கின்றோம். இலங்கையில் வீழ்ச்சிகண்டு ள்ள பொருளாதாரத்தை சீர் செய்து, தேவை யான விடயங்களில் முதலீடுகளை செய்து நாட் டின் பொருளாதாரத்திற்கு புத்துயிரளிப்பதே எமது நோக்கமாகும் என்றார். (எ-11)

## ஐ.தே.கவை...

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

எதிர்வரும் உள் ளூராட்சி மன்றத் தேர்தலின் போது சுதந்திரக் கட்சியின் பிரசார நடவடிக்கை களுக்கு நான் தலை மை தாங்கவுள்ள தாக அறிவித்தவுடன பலருக்கு வயிற்றில் புளியைக் கரைத்து ள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருசில அமைச்சர்களும் பல்வேறு சந்தர்ப்ப ங்களில் இது குறி த்து விமர்சித்துள் ளமை குறித்து என க்கு அறியக் கிடைத் துள்ளது.

மறுபக்கத்தில் கூட்டு எதிர்க்கட்சி என்ற பெயரில் சுதந் திரக் கட்சியை பிளவு படுத்தி, ஐக்கிய தேசி யக் கட்சிக்கு வெற் றியை பெற்றுக் கொடு க்க விமல் வீரவன்ஸ தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

அதன் மூலம் கட்சிக்குள் என்னைப் பல வீனப்படுத்தி, அவர்கள் தங்கள் ஆதிக்க த்தை மீண்டும் நிலை நிறுத்திக் கொள்ள முய ற்சிக்கின்றனர்.

எனினும்உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கட்சியை வெல்ல வைப்பதற்கான திட்டங்கள் எம்மிடம் தயாராக உள்ளது.

அதே நேரம் எமது கட்சியை பிளவுபடுத்த முயலும் விமல் போன்றோரின் திட்டத்திற்கு பலியாகி விடவோ, அவர்களை நம்பவோ கூடாது எனறும் ஜனாதிபதி மைத்திரி தனது கட்சி முக்கியஸ்தர்களுக்கு எச்சரிக்கை விடு த்துள்ளார். (எ-11)

## வடக்கில் நாளை...

இதேவேளை நாளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த அதிபர் சேவை தரம்-3 இற்கான போட்டிப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறுமெனவும், அவர்களுக்கான கடமை லீவுகள் அங்கீகரிக்கப்படுமெனவும் வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்தார். (எ-9,11)

## ஆணைக்குழு...

ஏற்படுத்திய சம்பவம் தொடர்பிலான விசா ரணைகளை பாரிய ஊழல் மோசடி தொடர் பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணை க்குழு மேற்கொண்டு வருகின்றது.

இதனடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான நாமல் ராஜ பக்ஷவிடமும் சாட்சிகளை பதிவு செய்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கிடைக்கப்பெற்ற அழைப் பினை ஏற்று பாரிய ஊழல் மோசடி தொடர்பில வசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு விற்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷ வருகை தந்திருந்தார்.

இதன்போது, சட்டத்தரணிகளால் அறி க்கை சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ஆணைக்குழுவின் நேற்றைய நாளுக்கான விசாரணைகள் இன்றைய தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது. (எ-12)

## வங்கக்கடலில்...

இலங்கை மற்றும் தென்னிந்தியாவை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், இலங்கையிலும், தென்னிந்தி யாவிலும், இந்த வார இறுதியில் அல்லது அடுத்த வார தொடக்கத்தில் வெள்ள ஆபத்து ஏற்படக்கூடும்.

இந்த காற்றழுத்தம் காரணமாக இல ங்கை முழுவதும் கடும் மழை மற்றும் சூறா வளிக் காற்றின் தாக்கம் இருக்கும் என்றும் கருதப்படுகிறது.

இந்த வார இறுதியில் இலங்கையின் அனைத்துப் பகுதிகள், கேரளா, தமிழ்நாடு ஆகிய இடங்களில் வெள்ள அபாயம் உள்ளது.

அடுத்த வாரம் திங்கள் முதல் புதன் வரையான நாட்களில், தமிழ்நாடு, கேரளா, தென் கர்நாடகா ஆகியவற்றில் கடும் மழை எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு, கொச்சி, மதுரை போன்ற இட ங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான மழைப் பொழிவு இருக்கலாம். கோயம்முத்தூர், பெங்க ளூரு, சென்னையில் வெள்ள ஆபத்து உள்ளது.

கடந்த திங்கட்கிழமை கடலூரில் கரை கட ந்த காற்றழுத்தம் காரணமாக, தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ள துடன், 60 பேர் வரை பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில் புதிய காற்றழுத்தம் உரு வாகியிருப்பது அச்சத்தை உருவாக்கியுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## 20 கட்சிகளை...

இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்த லால் டி அல்விஸ் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுக் கப்பட்ட போது, முதலாவது பிரதிவாதியான முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய சுயாதீன தேர்தல் ஆணைக்குழு வின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதால், அந்த பெயரையும் பதவியையும் மாற்றி திரு த்திய மனுவொன்றை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் மனுதாரருக்கு அனுமதி வழங் கியது. (எ-11)

## உறுப்பினர் மீதான...

டுள்ளது.

குறித்த தாக்குதல் சம்பவத்திற்கு உட்கட்சி பூசல்களே காரணம் என சபையில் கருத்து க்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. குறித்த உறுப்பினரினை மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகுமாறு மிரட்டி அக்கட் சினை சேர்ந்த ஒருவரினால் தாக்கப்பட்ட தாக, சந்தேகிக்கப்படும் நிலையில் இத்தாக்கு தல் சம்பவம் குறித்து நெல்லியடி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

இவ் உறுப்பினர் தொடர்பில் நேற்றைய சபை அமர்வின் முடிவில், அவருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் கேள்விக்குட்படு த்திய எதிர்க்கட்சி தலைவர் தவராசா ஒரு மாகாண சபை உறுப்பினர் தாக்கப்படுவ தனை ஏற்றுக்கொள்ள முடியாது என கூறி னார். இது தொடர்பில் பதிலளித்த வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர்,

நேற்றைய தினம் தனது தொலைநகல் இலக்கத்திற்கு ஒரு தொலைநகல் வந்ததா கவும் அதில் இறப்பர் முத்திரை பதிக்கப்பட வில்லை எனவும் அதில் தான் உறுப்புரிமை பதவியிலிருந்து விலகுவதாகவும் குறிப்பிட ப்பட்டிருந்தது. எனினும் இன்று (நேற்று) காலை மீண்டுமொரு தொலை நகல் ஒன்று இறப்பர் முத்திரையுடன் வந்ததாகவும், அதில் தான் வற்புறுத்தப்பட்டே பதவி விலகல் கடிதம் அனுப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகையால் குறித்த பதவி விலகல் கடித த்தை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என அவைத்தலைவர் கூறி னார்.

இதனை அடுத்து எழுந்த உறுப்பினர் ஆனல்ட் இவ்வாறு ஒரு உறுப்பினரை தாக்கு வது கண்டனத்திற்கு உரியதாகும். ஆகவே தாக்குதல் சம்பவம் தொடர்பில் சட்ட நடவடி க்கை எடுக்கப்படல் வேண்டுமென வலியுறுத் தினார். சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்கு ள்ளான உறுப்பினரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு ள்ளது. ஆகையால் இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் நடவடி க்கை எடுப்பார் என அவைத்தலைவர் தெரி வித்தார். (எ-4)


அருள் ஒளி தர்சன மாலையும்
கார்த்திகை மாத விசேட பூஜையும்



இடம் : இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி நல்லூர்.
காலம் : 22.11.2015.
ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணி



(சி-2745)

வரமருளிக் காத்தருள மனோன்மணி அம்மானாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையரின் அருள் ஒளி தர்சன மாலையும் கார்திகை மாத சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும். பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுயும்வண்ணம் வேண்டுகின்றோம்.

அபிராமி அம்பாள் தொடர்பிலான சிறப்பு நிகழ்ச்சி ஞாயிற்றுகிழமைகளில் இரவு 7.15 தொடக்கம் 7.45 வரை யாழ் சேவையில்(90.1 FM) இடம்பெறும்.

யாழ் தொடர்புகளுக்கு 077 9825004
ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.